மார்ச். 21 - . மார்ச் 27, 2010 March 21 - March 27, 2010 பக்கங்கள் - 28 25.00

யாழ்ப்பாணம்.

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்



## முள்ளி வாய்க்காலும் முள்ளுக் கம்பி வேலியும்

## மன்மோகன் அரசின் பெரும்பான்மை சுருங்குகிறது

## வன்னித் தேர்தல் களம் எப்படி உள்ளது?

## யாழ்ப்பாணத் தேர்தல் களம் தெரிவுகள் எப்படி அமையப் போகின்றன?

# யாழ்ப்பாணத் தேர்தல் களம்

## தெரிவுகள் எப்படி அமையப்போகின்றன?

ஜோசவ் தயாளன்

நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 324 பேர் போட்டியிடுகின்றனர். 27 அணிகள் களத்தில் குதித்துள்ளன. 9 பேர் மட்டுமே தெரிவுசெய்யப்பட வேண்டும். ஆனால், இவ்வளவு பெரும் எண்ணிக்கையானோர் போட்டியிடுவது தெரிவுகளில் பல சிரமங்களைக் கொண்டு வரப்போகின்றது.

வாக்குகள் எண்ணப்படும்போது கச்சேரியில் நிற்பதற்கே அந்தந்த அணிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கு என ஒரு பெரிய மண்டபமே தேவைப் படும் என்று ஓர் அதிகாரி பகிடியாகச் சொன்னது உண்மையில் கவனிக்கத் தக்க விசயமே.

இதைவிட இந்த முறைத் தேர்தலில் சில வித்தியாசமான விசயங்கள் உண்டு. அதைச் சற்றுப் பார்ப்போம்.

விடுதலைப் புலிகளின் ஆதிக்கமிருந்த கடந்த முப்பது ஆண்டு காலத்தில் தேர்தலில் போட்டியிடுவது என்பது பெரும் சவாலுக்குரிய ஒரு விசயமாக இருந்தது. ஆனால் மிகவும் குறைவானவர்களே போட்டியிட்டனர். அதற்கு முன்னர் தமிழர்கள் ஒரு முகப்பட்டு நின்று தமது குரலை முன் வைக்க வேண்டும் என்று மக்களி டையே பொதுவான அபிப்பிராயம் இருந்ததால் போட்டியிடும் தரப்புகள் குறைவாகவே இருந்தன.

அப்படி இதை மீறி வேறு தரப்புகள் போட்டியிட்டாலும் அவர்களை நிராகரித்து தமிழ்த்தரப்பைப் பிரதிநிதிப்படுத்தும் கட்சியையே மக்கள் ஆதரித்தனர். இதனால்தான் இலங்கைத் தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈரோஸின் சுயேச்சைக் குழு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகளும் தரப்புகளும் வெற்றி பெற்றன.

ஆனால், இப்போதுள்ள கள நிலைமை முற்றிலும் வேறாகியுள்ளது. இப்போது புலிகள் களத்தில் இல்லை. அதனால் நீண்டகாலமாக தமக்குள் அடக்கி வைத்திருந்த அபிலாஷைக ளுடன் பலரும் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர்.

அதேவேளை கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் இனி மேலும் தமிழ் மக்களைப் பிரதிநிதிப் படுத்தி தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று கூறும் கட்சிகளிலும் மக்களுக்கு நம்பிக்கை யீனம் தோன்றியுள்ளது.

ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் தமது ஆதரவை வழக்கியிருந்த போதும் அதனால் தாங்கள் எந்த முன்னேற்றத் தையும் பெற்றுக்கொள்ளவில்லை. பதிலாக இன்னும் அழிவுகளையும் பின்னடைவுகளையுமே சந்திக்க வேண்டி வந்தது என்றும் மக்கள் தங்கள் அனுபவங்களின் வழியாகச் சிந்திக்கின்றனர்.

அதாவது தமிழ்த் தேசிய அரசியல் என்பது தமிழ் பேசும் மக்களைப் பலப்படுத்துவதற்குப் பதிலாக பலவீனப்படுத்தியே இருக்கின்றது என்பது அனுபவ உண்மை. தமிழ்த் தேசிய அரசியலின் மூலம் தமிழ் - முஸ்லிம் உறவைப் பேண முடியவில்லை என தமிழ்த் தேசிய அரசியலை ஆதரித்தவர்களே இன்று கவலைப்படும் நிலைதான் உள்ளது.

இதன் அர்த்தம், தமிழ் மக்களின் பிரச்சினைகளை இனிமேல் அப்படியே கைவிட்டு விட்டு சரணாகதி அரசியலுக் குப் போவது என்பதல்ல.

ஆக மொத்தத்தில் தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுத்த தலைமைகள் அடைந்த பாதிப்புகளை விடவும் தமிழர்கள் அடைந்த பாதிப்புகளே அதிக மாகும் எனவும் மக்கள் சிந்திக்கின் றனர். தமிழ் கூட்டமைப்பில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் உயிரை இழந்திருந்தாலும் அதன் பின்புலங்கள் வேறு என்பது பலரது அபிப்பிராயமாகும்.

இப்பொழுது கூட இந்தப் பின்னடைவுகளிலிருந் தும் பலவீனங்க ளிலிருந்தும் மீண்டெ ழக்கூடிய புதிய உள்ளடக்கத் தை தமிழ்த் தேசிய அரசியல் கொண்டி ருக்கவில்லை என்பது அடுத்த கவலைக் குரிய விசயமாக இருக்கிறது. ஒற்றுமை, ஓரணி என்பதை வலியுறுத்துகின்ற தமிழ்த்தேசிய வாதிகளாயினும் சரி, கட்சிகளும் சரி தமக்கிடையில் ஒரு பொது உடன்பாட்டுக்கு வரமுடியா திருப்பது மக்களை மேலும் ஏமாற்றத்துக்குள்ளாகியுள்ளது.

அத்துடன் சிங்கள ராஜ தந்திரத்தை வெல்வதற்கான தந்திரோபாயப் பொறிமுறையை இன்றும் தமிழ்க் கட்சிகளோ தமிழ் அரசியல்வாதிகளோ உருவாக்க வில்லை என்பதும் சனங்களின் கவலைக்குரிய விசயமாக இருக்கிறது.

ஒட்டு மொத்தத்தில் தங்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய வல்லமையுடன் எந்தத் தமிழ்க் கட்சியும் இல்லை என்பதே தமிழ் மக்களின் பொதுவான முடிவாகும். இதில் அரசாங்க சார்புக் கட்சிகளும் அடங்கும். அரசாங்கத்துக்கு வெளியேயுள்ள கட்சிகளும் அடங்கும்.

எனவே, தங்கள் திறன்களின் மூலம் தங்களுக்குரிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முனையும் போக்கு தவிர்க்க முடியாத படி உருவாகியுள்ளது. இது எவ்வளவுக்குச் சாத்தியமானது என்பது நடைமுறை சார்ந்தோருக்குப் புரியும். இலங்கை அரசியல் அமைப்பின் படியும் நாடாளுமன்றப் பாரம்பரியத்தின் படியும் எதையும் இலகுவில் நன்றாக முறைப்படி நிறைவேற்றிக் கொள்ள முடியாது. அதற்காக அதைப் புறம் தள்ளிய ஆயுதப் போராட்ட முறைமை யும் சாத்திய மில்லை என்பது நடைமுறைத் தெரிவு.

ஆக மிஞ்சியிருப்பது விவேகமான அரசியல் முறைமையே. அதற்கான களச்சூழல் இன்றும் உருவாகவில்லை. ஆனால் அதற்குரிய முன்னோட்டக் காலமே இப்போது வந்திருப்பது.

இந்தத் தேர்தலில் பாரம்பரிய அணுகுமுறைகளின் தோல்வியும் மரபான கட்சிகளின் பின்னடைவும் நிச்சயம் ஒரு புதிய சிந்தனையைத் தரும். அது இனிவரும் காலத்துக்கான புதிய அரசியல் அணியையும் வெளியையும் உருவாக்கும்.

அது வரையும் இந்த மாதிரி சலசலப்புகள் தவிர்க்க முடியாமல் இருந்தே தீரும்.

யாழ்ப்பாண நிலைவரம் இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டு.

மக்களின் தெரிவுகள் ஒரு மாற்று அரசியல் வெளிக்கானது என்பதை ஒட்டு மொத்த வாக்களிப்பின் வீதத்தை வைத்தே புரிந்து கொள்ளுதல் வேண்டும். ஆனால், ஒன்று மட்டும் நிச்சயமானது; பாரம்பரிய அணுகுமுறைகளும் கருத்துகளும் நிலைப்பாடுகளும் இனி பொருத்தமில்லை என்பது உணரப்பட வேண்டிய உண்மையாகும்.









## அவலங்களைப் பகிர்ந்துகொள்வோம்

வன்னியில் நடந்த இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அங்கிருந்த எமது மக்கள் அனுபவித்த அவலங்கள் சொல்லில் அடக்கமுடியாதவை. அந்தப் பேரவலங்களை எதிர் கொண்டு இப்போது அகதிமுகாம்களில் வாடும் எமது உறவுகள் தமது அந்த அனுபவங்களையும் அதனால் ஏற்பட்ட உணர்வுகளையும் ஏனையவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கான களத்தைத் திறந்து விடுகிறது உங்கள் 'சுடர் ஒளி'.

எழுதுங்கள்!

உங்கள் அவலங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்!!

உங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:
'உயிர் வலிக்கும் கணங்கள்'
சுடர்ஒளி வாரமலர்,
இல. 85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# அரசு - கூட்டமைப்பு பேச்சுக்கு வாய்ப்பு உண்டா?

**யாழவன்**

## தமிழ்ப் புத்திஜீவிகளும், கல்விமான்களும் பேரினவாதத்துக்குத் துணை போகிறார்களா?

தெற்கில் மட்டுமல்லாது வடக்கு, கிழக்கிலும் தேர்தல் கும்மாளம் ஆரம்பமாகிவிட்டது. ஏட்டிக்குப் போட்டியாகப் பல வர்ணக் கலர்களில் சுவரொட்டிகள், பதாகைகள், கட்டவுட்டுக்கள் கண்ணைப் பறிக்கின்றன.

தெற்கில் வழமை போன்று பிரதான கட்சிகளான ஐ.தே.கட்சியை அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஆட்சிக்


மஹிந்த ராஜபக்ஷ

குத் தெரிவு செய்யும் தேர்தலாக பார்க்கப்படுகின்றது. எந்தக்கட்சியைத் தெரிவு செய்தாலும், அவர்களுக்கு ஒன்றுதான். எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சிங்கள மக்களைப் பொறுத்தவரை அவர்களின் தேவைகள் பூர்த்தியாகும், உரிமைகள் கிட்டும், உல்லாச வாழ்க்கை தொடரும். ஆட்சியில் ஆள்கள் மாறுவார்களே தவிர எந்தவித பாதிப்போ, இழப்போ சிங்கள மக்களுக்கு ஏற்பட்டு விடப்போதில்லை.

'ஒரே நாடு ஒரே மக்கள்' என்ற தாரக மந்திரத்தைத்தான் இரு கட்சிகளும் கடைப்பிடித்து ஆட்சியை நடத்துவார்கள். அந்த மக்கள் இன்பமாக-சந்தோசமாக வாழும் உரிமையை வழங்குவார்கள். அவர்கள் எந்தவித அச்சமோ, பயமோ இன்றி வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவார்கள்.

வாய்ப்புக்கள், வசதிகள் செய்து கொடுத்து அந்த மக்களின் வளமான வாழ்வுக்கு இருகட்சிகளின் தலைவர்களும் வேண்டியதைச் செய்வார்கள்.

நாடு சுதந்திரம் அடைந்த காலம் முதல் மாறி மாறி ஆட்சிக்கு வரும் ஆட்சியாளர்கள் சிங்கள மக்களின் - அதாவது தங்களது மக்களின் - உரிமைகளை, அவர்களின் தேவைகளை, வாய்ப்புக்களை சிதைப்பதில்லை. அடுத்த தேர்தல் வாக்கு வங்கிக்காக அந்த மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறார்கள்.

ஆனால் இந்த நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களின் நிலைமை வேறு. ஆட்சியில் எந்த அரசு வந்தாலும் அந்த மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகவே அவர்கள் பார்க்கிறார்கள். இந்த நாட்டின் ஒரு பிரஜையாக அந்த மக்களை எந்த அரசும் பார்க்க வில்லை. வரலாறு கூறும் செய்தி இதுதான்.

நாடு சுதந்திரமடைந்த காலம் முதல் இந்த நாட்டில் சம உரிமை யுடன் தமது பூர்வீகத் தாயகத்தில் நிம்மதியான வாழ்வு வேண்டும் என்ற அபிலாஷைகளை முன்நிறுத்தி தமிழ் மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 60 வருட காலத்தில் 30 வருடம் சாத்வீக வழியிலும் 30 வருடங்கள் ஆயுத வழியிலும் தமிழ் மக்கள் தமது உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.

தந்தை செல்வா, ஜி.ஜி. பொன்னம்பலம் போன்ற மிதவாதத் தமிழர்கள் சாத்வீக வழியில் தமிழ் மக்களுக்கான உரிமைக்காகப் போராட்டங்களை முன்னெடுத்தனர். அந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாக பல்வேறு தமிழ்க் குழுக்கள் ஆயுதம் ஏந்திப் போராட்டம் நடத்தின. அந்தக் குழுக்களுக்கு இடையில் உருவான முரண்பாடுகள் காரணமாகப் பிளவுகள் ஏற்பட்டன. இதன் விளைவாக வே.பிரபாகரனின் தலைமையிலான விடுதலைப் புலிகள் அமைப்பு போராட்டத்தைத் தீவிரமாக்கியது. நீண்டகாலம் களத்தில் நின்றது.

தரைப்படை, கடற்படை, விமானப் படை என்ற முப்படைகளையும் நிழல் அரசுக்கான கட்டமைப்புக்களையும் உருவாக்கி களத்தில் நின்று போராடிய விடுதலைப்புலிகள் அமைப்பு பேரம் பேசும் சக்தியாக எழுந்து நின்றது.

அதிகாரப் பரவலாக்கல், கிராமமட்டத்துக்கு அதிகாரங்கள் கொண்டு செல்லல் போன்ற விடயங்கள் பேசப்பட்டாலும், தமிழீழத்துக்காக போராடி வந்த விடுதலைப்புலிகள் இதில் இருந்து இறங்கி ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றுக்கு இணங்கியிருந்தனர். நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுக்களின் போது இந்த இணக்க நிலை ஏற்பட்டிருந்தது. அந்த இணக்க நிலையை பலர் ஒஸ்லோ பிரகடனம் என்று கூறுகிறார்கள். அப்படியான பிரகடனம் ஏதும் வெளியாகவில்லை.

பேச்சுத் தொடர்பான செய்தியாளர் மாநாட்டில் அறிவிக்கப்பட்ட விடயமே அதில் உள்ளது. உத்தியோக பூர்வ மாக எவராலும் அந்த விடயம் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

இறுதிக்கட்டத் தீர்வு தொடர்பாக பேச்சில் ஆராயப்பட்ட போது பகிரப்பட்ட விடயம் தான் அது.


விமல் வீரவன்ஸ

ஆனால் இன்று அந்த விடயம் தேர்தல் காலத்தில் பெரிய விடயமாகியுள்ளது. ஒஸ்லோ பிரகடனத்தின் பிரகாரம் சமஷ்டி ஆட்சி ஒன்றை எட்டுவதற்காக விட்ட இடத்தில் இருந்து பேச்சைத் தொடர விரும்புவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூறியுள்ளது.

நீண்ட காலமாக தாம் முன் வைத்து வரும் மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கையில் ஒஸ்லோ பிரகடனத்தில் உள்ள விடயமும் அடங்கியுள்ளது என்று கூறுகிறது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி.

இன்றைய தேர்தல் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்கள் தமது தாயகத் தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழக் கூடிய தீர்வு எட்டப்பட வேண்டும் என்று கூறியுள்ளது.

இந்த அறிவிப்பை, தமிழீழம் என்ற கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைவிட்டு விட்டது என்று சர்வதேச ஊடகங்கள் எல்லாம் தமது இணையத்தளங்களில் செய்தி வெளியிட்டு வருகின்றன.

தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு சமஷ்டி அமைப்பு மூலமான தீர்வை தமிழர் தரப்பு வலியுறுத்துகின்றது என்று அந்த இணையத் தளங்கள் கூறுகின்றன.

ஆனால் ''பழைய குருடி கதவை திறவடி'' என்பது போல, அரசில் அங்கம் வகிக்கும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ஸ மீண்டும் பேரினவாதம் கக்கியுள்ளார்.

''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம், உயிரிழந்த புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் தமிழீழக் கோட்பாட்டை பிரதிபலிக்கின்றது. அதனை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறான கோட்பாட்டை ஆதரிப்போரை கட்டுப்படுத்தும் வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டும். அதற்கு வசதியாக எதிர்வரும் தேர்தலில் அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை மக்கள் வழங்க வேண்டும்'' என்று பேரினவாதத்தைக் கக்கியுள்ளார்.

சலுகைகளையும் லட்சக் கணக்கில் பணத்தையும் பெற்று இன்று களம் இறங்கியுள்ள தமிழ் புத்திஜீவிகள், கல்விமான்களுக்கு இந்தப் பேரினவாதக் குரல் காதில் கேட்கவில்லையா என்று கேள்வி எழுப்புகின்றனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள்.

தமிழ்த் தேசியத்தை சிதைக்கக் களம் இறங்கியுள்ளவர்கள் அரசின் பேரினவாதக் கொள்கையை கொஞ்சம் புரிந்து கொள்ள வேண்டும். சுயேச்சை என்றும், புதுப்புது முன்னணி என்றும் களம் இறங்கியுள்ள கல்விமான்கள், புத்திஜீவிகள் போன்றவர்கள் இந்தப் பேரினவாதத் தலைவர்களுக்கு துணை போகப் போகிறார்களா என்று தமிழ் மக்கள் கேட்கிறார்கள். தமிழ் மக்கள் 60 வருடப் போராட்டம் முடிந்து இன்று முக்கிய கட்டத்தில் நிற்கிறார்கள். இந்த நிலையிலும் தமிழ் மக்களை எப்படி துண்டாடிச் சிதைக்கலாம் என்று என்ற சிந்தனையில் தெற்கு பேரினவாதிகள் ஈடுபட்டிருக்க, அவர்களுக்கு முண்டு கொடுக்க புறப்பட்டு நிற்கிறார்கள் சிலர் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் கூறுகின்றனர்.

பேரினவாத சக்திகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கருத்து வெளியிட்டுள்ளார்.

''நாங்கள் சுயநிர்ணய உரிமை என்றவுடன் தென்னிலங்கை மக்கள் மீண்டும் பயங்கரவாதம் எனக் கூச்சலிடுகிறார்கள். அது தவறான கருத்தாகும். சுயநிர்ணய உரிமை ஒவ்வொரு இனத்துக்கும் உண்டு என்று ஐ.நா. பிரகடனம் கூறுகின்றது. ஓர் இனம் தாம் வாழுகின்ற பிரதேசத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதை ஐ.நா.பிரகடனம் உறுதிப்படுத்துகின்றது என்று சம்பந்தர் கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழரின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடியதான நியாய மானதும் - நிரந்தரமானதும் - நடைமுறைப்படுத்தக்கூடியதுமான அரசியல் தீர்வு ஒன்றை, யுத்தமற்ற தற்போதைய சூழலில் பெறுவதற்கான வாய்ப்பை இலங்கை அரசு தவறவிடக் கூடாது என்று சர்வதேச சமூகம் இறுக்கமாகக் கூறி வருகின்றது. அவ்வாறான அர்த்த புஷ்டியான, ஆக்கபூர்வமான அரசியல் தீர்வை வழங்குவதற்கான பேச்சுகளை நடத்துவதற்கு அரசு முன் வருமானால் அதற்கு நாம் தயங்கமாட்டோம்.

எமது தாயகத்தில் சட்டம், ஒழுக்கம், பாதுகாப்பு, கல்வி, காணி, தொழில்துறை இன்னும் சகல துறைகளிலும் அர்த்த


இரா. சம்பந்தன்

புஷ்டியான அதிகாரங்களுடன் ஒவ்வொரு இனமும் வாழவேண்டும். தங்களைத் தாங்களே நிர்வகிக்கக் கூடிய உரிமைகளைக் கொண்டதான அரசியல் தீர்வு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காணப்பட வேண்டும் என்று சர்வதேச சமூகம் பகிரங்கமாக வலியுறுத்த ஆரம்பித்துள்ளது.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்குக் கூறிவருகின்ற நிலையில், எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குத் தெளிவான, பலமான ஆணையை வழங்க வேண்டும்.

தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கும் தீர்ப்புக்கு மதிப்பளித்து அரசு பேச்சுக்கு அழைத்தால், அதில் பங்குபற்ற நாம் தயங்கமாட்டோம். ஆனால், பேச்சுகள் ஆக்கபூர்வமானதாக, அர்த்த புஷ்டியானதாக, நடைமுறைச் சாத்தியமானதாக, தமிழ் மக்கள் தங்கள் பிரதேசங்களைத் தாங்களே ஆளக்கூடிய தான தீர்வைக் காணக் கூடியனவாகவும் அமைய வேண்டும்.

தமிழ் மக்கள் வழங்கும் ஜனநாயகத் தீர்ப்பு மதிக்கப்பட வேண்டும். அவ்வாறான தீர்ப்பை அரசு ஏற்க மறுத்தால் நாம் சர்வதேச சமூகத்தின் துணையை நாடுவோம். நாம் இது தொடர்பாக சர்வதேச சமூகம் மற்றும் இந்தியாவுடன் தொடர்பு கொண்டுள்ளோம் - என்றும் இரா.சம்பந்தன் கூறினார்.

சம்பந்தர் கூறும் நிபந்தனைகளை, கோரிக்கையை ஏற்று இலங்கை அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சுக்கு அழைக்குமா? அல்லது மீண்டும் சர்வதேசத்தின் கைக்கு தமிழர் விவகாரம் செல்ல உடந்தையாக இருக்கப் போகிறதா? அதற்குக் காலம் தான் பதில் சொல்லும். ✱

# சுடர் ஒளி

மார். 21 - மார். 27, 2010

85, ஜெயந்தமல் வீமரச்சி மாவத்தை, கொழும்பு-14 டெலிபோன்: 0115738005 பக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com


## ஆயுத பலமும் அரசியல் பலமும்

தமிழ் மக்களை, தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் ஏப்ரல் 8ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் மிக முக்கியமான தேர்தல் ஆகும்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல்களில் அரசியல் பலத்தோடு ஆயுத பலமும் இருந்தது. எதிரிக்கு விலைபோக முடியாத ஒரு கட்டமைப்பு இருந்தது. ஜே.வி.பி, ஐ.தே.க, முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகள் உடைந்து சிதறுண்டு பலவீனமாக்கப்பட்ட போதிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுதியாக நின்றது.

அனால் இன்று அன்றைய நிலைமை இல்லை. ஆயுதப் பலம் தற்பொழுது முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது. அரசியல் பலம் ஒன்றுதான் மிச்சம். ஆயுத பலத்தை ஒழித்துக் கட்டிய அரசாங்கம் தற்பொழுது தனது அடுத்த நிகழ்ச்சித் திட்டமாக தமிழ் மக்களை அரசியல் ரீதியாகவும் பலவீனப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கான சூழ்ச்சிகள், நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னமே ஆரம்பிக்கப்பட்டு விட்டன. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்பதில் கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாடு, கூட்டமைப்பு உடைந்து பல பிரிவுகளாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது -இவை எல்லாம் தமிழ் மக்களை அரசியல் ரீதியாகப் பலவீனப்படுத்தும் முயற்சிகளே. இதில் வெற்றிபெற முடியும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறது.

. இந்த எதிர்பார்ப்பினால் எடுக்கப்பட்ட முடிவு தான், தேர்தலில் தெரிவாகும் உறுப்பினர்களுடன் இனப்பிரச்சினை தொடர்பாகப் பேச்சு நடத்தப்படும் என்ற அறிவிப்பு. மஹிந்த அரசிடம் தற்பொழுது கையிருப்பில் உள்ள 'தீர்வுப்பொதி' யும் இதுதான்

அரசியல் ரீதியில் தமிழ் மக்கள் பலவீனமடைந்து விட்டால் கொடுப்பதை வாங்கிக் கொள்வார்கள் என்று அரசாங்கம் நினைக்கிறது. ஆகவே தமிழ் மக்கள், தமிழ் பேசும் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டியது அவசியம். ஆயுதரீதியில் தோற்றுப் போனவர்கள் அரசியல் ரீதியிலும் தோற்றுப் போவார்களானால் பின்பு மீட்சியே கிடையாது.


அரசாங்கத்தின் இப்படியான தந்திரங்களைப் புரிந்து கொண்டுதான் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று ஆளும் பிரிட்டிஷ் தொழில் கட்சியின் வெளிவிவகார அமைச்சர் மிலிபாண்ட், பிரதமர் கோடன் பிரவுன் ஆகியோர் யோசனை தெரிவித்து வருகின்றனர். எதிர்க்கட்சியான கன்ஸர்வேட்டிவ் கட்சியின் நிழல் வெளிவிவகார அமைச்சர் லியாம் பொக்ஸும் இதே கருத்தையே கொண்டுள்ளார். இந்திய வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீ கிருஷ்ணா, ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் அகியோரும் தமிழ் மக்களுக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்றே கூறுகின்றனர். அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவையும் தற்பொழுது தமிழர் சார்பான கருத்துக்களையே வெளியிட்டு வருகின்றன.

இத்தகைய கருத்துக்களுக்கு வலுவூட்டுவதற்கு தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் பலம் அவசியம். இந்த அரசியல் பலத்தைப் பெறுவது தமிழ் -முஸ்லிம் வாக்காளர்களின் கையில் தான் இருக்கிறது. இந்த முக்கியமான தேர்தலில் அவர்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

# நுஆ: காவு கொடுக்கப்பட்ட கனவு

மப்றாக்

"மு.கா.வின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் இருந்தன. முதல் குழந்தை ஸ்ரீலங்கா மு.காங்கிரஸ். இரண்டாவது நுஆ எனப்படுகின்ற தேசிய ஐக்கிய முன்னணி. இவற்றில் இரண்டாவது குழந்தையை அஷ்ரப்பின் மனைவியாகிய அமைச்சர் பேரியலே - கொன்று புதைத்து விட்டார்! கிட்டத்தட்ட, பெற்ற தாயே தனது குழந்தையை கிணற்றில் வீசி அல்லது நஞ்சூட்டிக் கொன்றதாக, நாம் பத்திரிகைளில் படிக்கும் செய்திகளுக்கும், நுஆ கட்சியை - அமைச்சர் பேரியல் தூக்கியெறிந்து விட்டு, சுதந்திரக் கட்சியோடு



இணைந்து கொண்டமைக்கும் இடையில் பெரிய வித்தியாசங்கள் எவையும் இல்லை"

-இப்படி தன்னுடைய கோபத்தையும், ஆதங்கத்தையும் எம்மிடம் கொட்டித் தீர்த்தார் எமது இலக்கிய நண்பரொருவர்!

நுஆ எனப்படுகின்ற தேசிய ஐக்கிய முன்னணி என்பது அஷ்ரப் கண்டு வைத்திருந்த கனவு. முஸ்லிம் அரசியலை அடுத்த பரிணாமத்துக்கு நகர்த்துவதற்கான அவரின் திட்டம். அவ்வாறானதொரு கட்சியைக் காவு கொடுத்து விட்டுச் சென்றிருப்பவர் சாட்சாத் அஷ்ரப்பின் மனைவிதான் என்பதை நினைக்க கஷ்டமாகவும், கசப்பாகவும் இருக்கிறது!

தனது கணவர் நேசித்த நல்லதொரு விடயத்தை அமைச்சர் பேரியலால் எப்படி நேசிக்க முடியாமல் போயிற்று?

தன்னுடைய கணவரின் ஞாபகங்களுக்காகவாவது - நுஆ வை பேரியல் கட்டிக் காத்திருக்க வேண்டும்.

பிரிந்து போன பிறகும் - தனது காதலியின் எழுத்துப் பிழைகளுடனான கடிதங்களை வாழ்வின் கடைசி நிமிடம் வரை சேமித்து வைத்திருக்கும் ஒருவன், அல்லது தனது காதலனின் உடைந்து போன சட்டைப் பொத்தானை அவனின் நினைவுகளுக்காக வைத்திருக்கும் ஒருத்தி போலாயினும், தனது கணவரின் நினைவாக நுஆவை பேரியல் வைத்திருந்திருக்கலாம்.

ஆனால், தன்னுடைய கதிரையைக் காப்பாற்றிக் கொள்ளும் ஆசையில் - தனது கணவரின் கனவையே பலி கொடுத்திருக்கின்றார் பேரியல்!

மர்ஹூம் அஷ்ரப்பினுடைய மரணத்தின் பின்னர், மு.கா.வின் தலைமைத்துவத்தைக் குறி வைத்து - பேரியலும் குதித்திருந்தார். எனது கணவரின் கட்சி எனக்குத்தான் சொந்தம் என்கிற பாணியில் அவர் வரிந்து கட்டிக் கொண்டு நின்ற போது, மு.கா. வை ஹக்கீம் வைத்துக் கொள்ளட்டும், நீங்கள் நுஆவை வைத்துக் கொள்ளுங்கள் என்று அஷ்ரப்போடு இருந்தவர்கள் பஞ்சாயத்துப் பண்ணிய தில் - பேரியலுக்குக் கிடைத்தது தான் நுஆ வின் தலைமைப் பதவி!

அதையும் பேரியல் - ஆனந்தக் குதூகலங்களுடன் ஒன்றும் அள்ளியெடுக்கவில்லை. தலைகீழாக நின்றாலும் மு.காங்கிரஸின் தலைமைத்துவம் தனக்கு ஒரு போதும் கிடைக்கவே மாட்டாது என்கிறதொரு நிலைவரம் ஏற்பட்ட பிறகு தான், கிடைப்பது லாபமென்று நுஆவின் தலைவியானார்!

சிலவேளை, நுஆவுக்குப் பதிலாக மு.காங்கிரஸை அன்று - பேரியலிடம் ஒப்படைத்திருந்தால், நுஆவுக்கு நேர்ந்த கதிதான் மு.கா. வுக்கும் நிகழ்ந்திருக்கும். நல்ல வேளை, யார் செய்த புண்ணியமோ மு.கா. பிழைத்தது என்கிறார் - அம்பாறை மாவட்ட பிரதேச சபையொன்றின் மு.காங்கிரஸ் தவிசாளரொருவர்.

இந்த நிலையில், தற்போது சுதந்திரக் கட்சியில் சேர்ந்து கொண்டு வெற்றிலைச் சின்னத்தில் அம்பாறை மாவட்டம் சார்பாக பொதுத் தேர்தலில் குதித்திருக்கும் அமைச்சர் பேரியல் - தனக்காக வெளியிட்டிருக்கும் சுவரொட்டி பற்றியும் இந்தக் கட்டுரையில் பேச வேண்டியிருக்கிறது.

அந்தச் சுவரொட்டியில் மர்ஹூம் அஷ்ரப்பின் பெரியதொரு புகைப்படம் மட்டுமே இருக்கிறது. சுவரொட்டியின் நிறம் நீலம். அதில் அமைச்சர் பேரியல் குறித்தோ, அல்லது அவர் போட்டியிடும் கட்சி குறித்தோ எவ்வித வாசகங்களும் இல்லை. சுவரொட்டியின் அடிப்பகுதியில் வெற்றிலைச் சின்னமும், 01 மற்றும் 04 ஆகிய இலக்கங்களும் மட்டுமே உள்ளன.

இந்தச் சுவரொட்டியை இவ்வாறு வடிவமைத்தமைக்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். முதலாவது தலைவர் அஷ்ரப்புக்காகவேனும் அவர் மனைவிக்கு வாக்களிக்க வேண்டும் என்கிற எண்ணத்தை மக்களிடம் உருவாக்க முனைவது. இரண்டாவது, முஸ்லிம் பகுதிகளில் இந்தச் சுவரொட்டியை எவரும் கிழிக்கக் கூடாது என்பது. இவைகளை மனதில் கொண்டே இவ்வாறு இந்தச் சுவரொட்டி வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், மேற்கூறப்பட்டவற்றில் இரண்டாவது காரணம் எமது கண்ணெதிரிலேயே மிக நுணுக்கமாக முறியடிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சுவரொட்டியிலிருக்கும் அஷ்ரப்பின் படம் அப்படியே இருக்க, அதன் அடியிலுள்ள சின்னம் மற்றும் இலக்கங்கள் - மிக நூதனமாகக் கிழித்தெறியப்பட்டுள்ளன. தலைவரின் படம் அப்படியே இருக்கிறது! அநேகமாக, எல்லா இடங்களிலும் இந்தச் சுவரொட்டிகளுக்கு இதுதான் கதி!!

மேற்படி சுவரொட்டியில், இருக்கின்ற இரண்டு இலக்கங்களில் 01 ஆம் இலக்கம் அமைச்சர் பேரியலுக்குரியது. 04 ஆம் இலக்கம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நௌசாத்துக்குரியது. அமைச்சர் பேரியலும், நௌசாத்தும் ஓர் அணியாகச் சேர்ந்து இயங்குகின்றார்கள். இந்த அணிக்கும் - அமைச்சர் அதாஉல்லா அணிக்கும் ஆகாது. ஆனால், இரண்டு தரப்பினரும் வெற்றிலைச் சின்னத்தில் தான் போட்டியிடுகின்றார்கள். அநேகமாக, பேரியல் அணிக்கு விருப்பு வாக்களிப்பவர்கள், அதாஉல்லாவுக்கு புள்ளடியிட மாட்டார்கள்.

நௌசாத்தைப் பொறுத்தவரை, அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளர்களில் - ஆளுமையுள்ள ஒருவர்! கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தவர். பார்ப்பதற்கு அப்படியே அஷ்ரப் போல இருக்கிறார். தன்னைப் பற்றி விமர்சிப்பவர்களுடனும் இனிமையாகப் பேசுகின்றார்.

நௌசாத்தின் சொந்த ஊர் சம்மாந்துறை. இவரின் தந்தை எம்.ஐ.எம். அப்துல் மஜீத் 1960 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் சேவல் சின்னத்தில் சுயேச்சையாகப் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினரானவர். ஆனால், 1970 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் சுயேச்சையாக வானொலிச் சின்னத்தில் போட்டியிட்ட இவர் - முன்னாள் அமைச்சர் முஸ்தபாவிடம் 75 வாக்குகளால் தோல்வியடைந்தார். அந்தத் தேர்தலில் அப்துல் மஜீத் பெற்றுக் கொண்ட வாக்குகள் 13 ஆயிரத்து 406. முஸ்தபாவின் வாக்குத் தொகை 13 ஆயிரத்து 481 ஆகும்!

குறித்த தேர்தலில் அப்துல் மஜீத் வெற்றிபெற்றதாகவே முதலில் தெரிய வந்தது. இதைக் கேள்வியுற்ற அவரின் ஆதரவாளர்கள் வெற்றிக்களிப்பில் ஈடுபட்டார்கள். ஆனால், பின்னர் வந்த செய்தி தலைகீழானது. அப்துல் மஜீத்தோடு போட்டியிட்ட முஸ்தபா வெற்றியீட்டியதாகவும், மஜீத் 75 வாக்குகளால் தோற்று விட்டதாகவும் வானொலியில் அறிவிக்கப்பட்டது. இந்தச் செய்தியால் மஜீத்தும் அவரின் ஆதரவாளர்களும் அதிர்ந்து போயினர். அந்தத் தேர்தல் முடிவு வெளியாகி சில நாட்களுக்குள் நௌசாத்தின் தந்தை அப்துல் மஜீத் இறந்து போனார். தாங்க முடியாத அந்தத் தேர்தல் முடிவே அவரின் இறப்புக்குக் காரணம் என்று பலரும் பேசிக் கொண்டார்கள்.

நௌசாத்தின் தந்தை அப்துல் மஜீத் அக்கரைப்பற்றுக்காரர். அம்மா சம்மாந்துறையைச் சேர்ந்தவர். முன்னாள் அமைச்சர் எம்.ஏ. அப்துல் மஜீத் இவரின் தாய் மாமன். அதாவது, அம்மாவின் மூத்த சகோதரர்.

நௌசாத்தின் தந்தையை ஸ்வீட் மஜீத் என்றுதான் சொல்வார்கள். ஏன் இந்தப் பெயர் என்று விசாரித்தோம். அப்போது அம்பாறை மாவட்டத்தில் இரண்டு மஜீத்துகள் அரசியலில் இருந்தார்கள். அதனால் இவரை பிரித்துக் காட்ட ஓர் அடைமொழி தேவையாக இருந்தது. ஆயினும், அவருக்கான அடைமொழி போலவே - மனிதர் இனிமையானவர் என்கிறார், ஸ்வீட் மஜீத்தோடு நெருக்கமுள்ள அவரின் ஆதரவாளர் ஒருவர்.

அந்த இனிமை அவரின் மகன் நௌசாத்தின் பேச்சிலும் இருக்கிறது!



சரி, இப்படிப்பட்ட சிறப்பான பின்னணியைக் கொண்ட, நல்ல மனிதரான நௌசாத்துக்கு இந்தத் தேர்தலில் வெற்றி வாய்ப்பு எப்படியிருக்கிறது?

நௌசாத்தின் ஊரில் அவருடன் சேர்த்து மொத்தமாக 5 வேட்பாளர்கள் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றார்கள். அதில் இருவர் வெற்றிலைச் சின்னக்காரர்கள். இருவர் யானைச் சின்னம். இன்னொருவர் - கிண்ணம்!

ஆக, இவரின் ஊரிலுள்ள வாக்குகளே மூன்று கட்சிகளுக்கிடையில் பிரியப் போகின்றன. அதே வேளை, வெற்றிலைச் சின்னத்தில் சம்மாந்துறையில் போட்டியிடும் மற்றொரு வேட்பாளரான கிழக்கு மாகாணசபை உறுப்பினர் அமீர் என்பவர், அமைச்சர் அதா உல்லாவின் அணிக்காரர். இந்த அமீருக்கு விருப்பு வாக்களிப்பவர்கள், நௌசாத்துக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்பதுதான் அங்குள்ள நிலைவரமாகும்.

ஆனாலும், சம்மாந்துறையில் போட்டியிடும் வேட்பாளர்களில் அதிக செல்வாக்குக் கொண்டவர் நௌசாத்தான் என்பது இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

எவ்வாறிருந்த போதும், முஸ்லிம் வேட்பாளர்களான அதாஉல்லா, பேரியல் ஆகியோருடன் போட்டியிட்டு, அவர்களை விடவும் அதிக விருப்பு வாக்குகளை நௌசாத் பெற்றுக் கொள்வாரா என்பதுதான் இங்கு கேள்விக்குறி!

இதேவேளை, இம்முறை அம்பாறை மாவட்டத்தில் வெற்றிலைச் சின்னம் சார்பாகப் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளர்களில் ஒருவர் மட்டுமே வெற்றி பெறக் கூடிய நிலைமையொன்றும் இருக்கிறது.

அந்த ஒற்றைக் கதிரையில் உட்காருவதற்காக மொத்தம் ஐந்து முஸ்லிம் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள்.

அந்த 5 பேரில் - முந்தும் குதிரை எது என்பதே - இப்போதைக்குள்ள மில்லியன் டொலர் பெறுமதியுள்ள கேள்வியாகும்!


***

### விவேகானந்தர் வாக்கும்....

9ஆம் பக்கத்தில் பிரசுரமாகி உள்ள 'விவேகானந்தர் வாக்கும் சாமியார்கள் போக்கும்' என்னும் கட்டுரையின் தொடர்ச்சிப் பக்க இலக்கம், அச்சுப் பதிப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தெளிவில்லாமல் உள்ளது. தொடர்ச்சியை 26ஆம் பக்கத்தில் பாருங்கள்.


தேர்தல் 2010
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - TNA)
யாழ்.மாவட்டம்
அன்றும் இன்றும் என்றும்
சொந்த மண்ணில்
உங்களுடன் ...
இலங்கைத் தமிழரசுக் கட்சி
6
உதயன்
நிர்வாக இயக்குநர்
தொழிலதிபர்
ஈ.சரவணபவன்

# மன்மோகன் அரசின் பெரும்பான்மை சுருங்குகிறது!




சென்ற ஆண்டு (2009) மே மாதம் இரண்டாவது தடவையும் தேர்தலில் வெற்றியினை சூடி ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்ட மன்மோகன் அரசு, அதன்பெரும்பான்மையை மெதுமெதுவாக இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. உணவுப் பொருள் விலைவாசி கட்டுக் கடங்காத வகையில் உயர்ந்து வருவதை அடுத்து, அரசு மீது மக்களின்அதிருப்தி மிக உச்சத்தில் உள்ளது. பணவீக்கமும் உச்சஸ்தாயில் சென்ற வண்ணம் இருக்கிறது. எதிர்க்கட்சிகள் இது குறித்து தொடர் போராட்டம், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன. பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக, கடந்த வாரம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் எரிபொருள் விலையும் உயர்த்தப்பட்டது. திருவாளர் பொதுமகன் மிகுந்த சிரமத்துடன் வழ்க்கைப் படகினை ஓட்டவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன். கடந்த ஆண்டு 2ஆம் தடவையாக பதவியேற்றதில் இருந்து ஒருவருடம் கூட பூர்த்தியாகாத நிலையில், அரசு விலைவாசி உயர்வால் தள்ளாட்டம் காண நேரிட்டுள்ளது. விவசாய அமைச்சர் சரத்பவார் அமைச்சில் கவனம் செலுத்தாது, கிரிக்கெட் மீது ஆர்வமாக இருப்பதால் அமைச்சுப் பணிகள் முடங்குவதாக குற்றச் சாட்டுகள் எழுந்துள்ளன. விலைவாசி உயர்வுக்கான பல காரணங்களில் இதுவும் ஒன்று எனக் கூறப்படுகிறது.

-எஸ். சுரேந்திரஜித்

அரசு இவ்வாறு தடுமாறும் வேளை, எதிர்க்கட்சிக்கு வாய்ப்பான தருணம் என்பது சரியானதே. இதை நிரூபிக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் தீவிரமான போராட்டங்களில் இறங்கியுள்ளன. சில கட்சிகள் அரசுக்கான ஆதரவையும் வாபஸ் பெற்றன. இந்தக் களேபரத்தில் இருந்து தப்ப காங்கிரஸ் அரசு அற்புதமான ஓர் உத்தியை கண்டுபிடித்தது. அதுதான் பெண்கள் இடஒதுக்கீடு மசோதா. இது நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்று என்றாலும், அதை இந்த தருணத்தில் கொண்டுவந்தது எதிர்கட்சிகளின் ஒற்றுமையான அரச எதிர்ப்புப் போராட்டத்தை சிதறடிக்கவே என்பது தெளிவு. உதாரணமாக, எதிரும் புதிருமான பி.ஜே.பியும் சமாஜ்வாதிக் கட்சியும் இணைந்து விலைவாசி உயர்வுக் கெதிராக போராட்டம் நடத்தின. ஆனால், பெண்கள் மசோதாவைக் கொண்டுவந்ததும் இவை தமக்குள் முட்டிமோத்த் தொடங்கின. கடந்த ஆண்டு மே மாதம் காங்கிரஸ் வென்றபோது, அதன் பழைய நண்பரான லல்லுபிரசாத் யாதவ், சமாஜ்வாதிக் கட்சி, மாயாவதி ஆகியோர் காங்கிரஸுக்கு ஆதரவளித்தனர். இதனால் அரசுக்கு ஆதரவான எம்.பிக்களின் தொகை 300ஐத் தாண்டியது. ஆனால், சென்ற வாரங்களில் ரயில்வே பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டபோது 276 பேர் தான் அரசை ஆதரித்தனர். அதாவது மயிரிழையில் தான் மசோதா தப்பித்தது. பெரும்பான்மைக்கு 272 எம்.பிக்களின் ஆதரவு தேவை. ஆனால், 4பேர் அதிகமாக 276 பேரின் ஆதரவுடனேயே மசோதா நிறைவேறடியது. காங்கிரஸ் கூட்டணியில் 262 எம்.பிக்கள் உள்ளனர். அதிலும் மம்தா பனார்ஜியின் 19 எம்.பிக்களும் எந்தநேரமும் ஆதரவை விலக்கலாம் என்ற நிலை தான் உள்ளது. 262 பேர் இருந்தாலும், பெரும்பான்மைக்கு இன்னும் 10பேர் தேவைப்படும். இதை உதிரிக் கட்சிகள் ஆதரவு மூலமே காங்கிரஸ் அரசு பெற்று வருகிறது. ஆனால், அவதானமாக இராவிடில் அரசு கவிழவும் வாய்ப்புண்டு.

இதற்கிடையில் பெண்கள் இடஒதுக்கீடு மசோதாவை எதிர்ப்புகளுக்கு மத்தியில் நிறைவேற்றியதால் கொதிப்படைந்துள்ள லல்லு மற்றும் முலாயம் சிங் யாதவ், கூட்டணி அரசுக் கெதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரும் முஸ்தீபுகளிலும் இறங்கியுள்ளதாகத் தெரிகிறது. இதற்கு பி.ஜே.பி மற்றும் இடதுசாரிகள் ஆதரவளித்தால் சிக்கல் மேலும் அதிகரிக்கும். ஆனால், சமாஜவாதிக்கட்சி சில வாரங்களுக்கு முன்பு தான் உட்கட்சி உடைவைச் சந்தித்திருந்தது. மூத்த தலைவர் அமர்சிங் கட்சியிலிருந்து கலகம் விளைவித்து வெளியேற்றப்பட்டார். அவருடன் ஜெயப்பிரதா எம்.பி உள்ளிட்ட பலரும் வெளியேறினர். இதனால் கட்சி சற்றே பலவீனமான நிலையிலுள்ளது. இத்தருணத்தில் தேர்தலைச் சந்திக்க முலாயம் தயாரில்லை. மேலும், அவரது உத்தர பிரதேச மாநிலத்தில் பிரதான எதிரியான முதல்வர் மாயாவதி கட்சியின் ஆட்சி கொடிகட்டிப் பறக்கின்றது. இப்போது தேர்தல் வந்தால் மாயாவதி கட்சியின் அரசுப் பலத்தை ஒருபுறமும் காங்கிரஸின் மத்திய அரசுப் பலத்தை மறுபுறமும் எதிர்கொள்வதுடன், அமர்சிங்கின் சவாலுக்கும் முகம் கொடுக்க வேண்டும். எனவே மத்தியிலுள்ள காங்கிரஸ் அரசுக்கு பங்கம் விளைவித்து, புதிய தேர்தலுக்கு முகம்கொடுக்க முலாயம் சிங்கால் முடியாது. மேலும், காங்கிரஸ் கட்சி முலாயமை பகைக்காது சமாளித்துச் செல்லவே முயல்கிறது. காரணம், மம்தா பனார்ஜியின் 10 எம்.பிக்கள் விலகிச் சென்றாலும், முளாயம் மூலம் ஆட்சியை தக்க வைத்துக் கொள்ளமுடியும்.



மாயாவதி

இதேவேளை, பெண்கள் இடஒதுக்கீடு மசோதாவுக்கு அ.தி.மு.கவும் ஆதரவு தெரிவித்தது ஒருமுக்கிய விடயமாகும். ஜெயலலிதா பெண் உரிமை சிந்தனையாளர் என்றாலும், அதைவிடவும் காங்கிரஸுடன் நெருங்கிவர ஒரு சந்தர்ப்பமாக அவர் இதைப் பயன்படுத்தியது கவனிக்கத்தக்கது. தி.மு.கவும் இதைக் கூர்ந்து அவதானித்தபடியே உள்ளது. கடந்தவாரம் தமிழகத்தில் புதிய சட்டசபைத் திறப்புவிழாவில் பிரதமர், சோனியா இருவரும் ஒரே விமானத்தில் சென்னை வந்து கலந்து சிறப்பித்தனர். கருணாநிதிக்கு இரு தலைவர்களும் கொடுக்கும் கௌரவம் இது விஷயத்தில் தெளிவாகத் தெரிந்தது. சந்தர்ப்பத்தினை விடாமல் பயன் படுத்திய கருணா நிதியும், காங்கிரஸ்-தி.மு.க கூட்டணியை பிளக்க நடந்த சதி வெல்ல வில்லை என்று கூறி முடித்துள்ளார். மேலும், பெண்கள் மசோதா நிறவேறியதையும் கருணாநிதி பாராட்டியதுடன், அதற்கு கருணாநிதி உதவியதையும் சோனியா காந்தி நினைவு கூர்ந்தார். நாட்டின் மொத்த சனத் தொகையில் பாதி பெண்களாக இருக்கையில், அவர்களுக்கு உண்மையில் பாதி இடங்களை ஒதுக்குவதே நியாயம். இருந்தும், தொடக்கத்தில் மூன்றிலொன்றை ஒதுக்குவதே சரி எனக் கருதப்பட்டது. ''நிமிர்ந்த நன்னடையும் நேர் கொண்ட பார்வையும்'' என்று சொன்ன பாரதி கனவில் மற்றோரு நிறைவேற்றம் இதுவெனலாம்.

''மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்,'' வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்'' என்றும் பேசிய பாரதியின் புரட்சித் தனத்தை மீறாமல், தமிழகத்தின் இரு பிரதான கட்சிகளும் பெண்கள் மசோதாவை ஆதரித்தமை குறிப்பிடத்தக்கது. இந்த ஒரு விஷயத்திலாவது வெவ்வேறு நோக்கங்களுக்காக என்றாலும் இவ்விரு எதிரும் புதிருமான கட்சிகள் இணங்கியது வரவேற்கத்தக்கதே.



முலாயம் சிங்

***



# உயிர் வலிக்கும் கணங்கள்...!!

## உளி கொண்டு வடித்த சிற்பிகளே - நாம் உயிர் பெறும் வேளையில் உங்களைக் காணோம்!

உலக வரைபடத்தில் ஒடுங்கி இருக்கிறது இலங்கைத்தீவு. அதில் ஓரமாய் உங்கள் வன்னித்தாய். இன்று அவளின் இரத்தக் கண்ணீரால் வரைபடமே நனைந்திருக்கிறது. ஆம். அவலப்பட்ட எம்மைப் பார்த்து, இரங்கல் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறது சர்வதேசம். சுதந்திரத்தை நிர்வாணமாக்கி நடன வகுப்பு நடத்தி விருது வழங்கக் காத்திருக்கும் அரசியல் வாதிகள் இங்கு. அன்று மட்டுமல்ல இன்றும் அவலங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆமாம் கடந்து வந்த காயங்கள் காலத்தின் மாறு தலால் ஆறினாலும் ரணங்கள் ஏனோ இன்னும் வலிக்கத் தான் செய்கின்றன. அந்த சிவப்பு நாட்களின் விம்பங்களை, என் பேனா முனைகள் கரைக்கின்றன.

அழகான எங்கள் பூமி அப்போது அவலத்தில் மிதந்தது. தொடரான எறிகணைச் சிதறல்கள், கொத்துக் குண்டுகளின் தாண்டவம், மிக், கிபிர் விமானங்களின் குண்டு மழை, பீரங்கிப் படகுக ளின் தாக்குதல் என மும்முனை நகர்வால் பட்டினியால் என்புருகிப் போயிருந்த உறவுகளின் உயிரை ரவைகளும் எறிகணைகளும் முத்தமிட்டுச் சென்றன. ஆறடி உடலை ஐந்தங்குல ஷெல் சிதைத் தது. கருவிலிருந்த குழந்தை உருவம் பெற முன்னர் உருக்குலைந்து போன ஊமை நாட்கள் இங்கு.

இத்தனை அவலங்களைக் கண்டும் கண்மூடித் தானே சர்வதேசம் இருந்தது. தட்டிக் கேட்க வேண்டிய வர்களே ஊமையாகிப் போனால், பந்தாட வந்தவர்க ளுக்குக் கொண்டாட்டம்தானே! உலக அரங்கே உன்னிடம் நாம் என்ன கேட்டோம்? ஒவ்வொரு தமிழனும் சிந்துகின்ற இரத்தக் கண்ணீர்த்துளிகள் சர்வதேசத்தின் மீது விழும் சிவப்பு புள்ளிகள் தான்.

அத்தனை வலிகள் எமக்குள். எதைத்தான் நாம் இழக்கவில்லை. அன்னையை, தந்தையை சகோதரர் களை, உறவுகளை இவை மட்டும் தானா? எமக்கென் றொரு நிலம், அதில் எம் வீடு, தவழ்ந்து புரண்ட செம் மண் வீதிகள் அத்தனையையும் இழந்தோம். அது மட்டுமா எழில் சிந்தும் இயற்கை அன்னையை, பள்ளியை, பாடம் சொல்லித் தந்த ஆசானை இழந் தோம். தாங்குமா இவற்றையெல்லாம் எம் பிஞ்சு நெஞ்சங்கள். உயிர்கள் போய் விட்டன. உணர்வுகள் போய் விட்டன. உரிமைகள் போய் விட்டன. மீதமாய் இருக்கும் என் ஊமைக் காயங்களையும், உள்ளத்து வலிகளையும் உயிர் வலிக்கும் கணங்களில் பகிர்ந்து கொள்கிறேன்.



திணறிக் கொண்டிருந்தோம். சுதந்திர வலயம் சுடுகாடானது. குறுகிய சதுர மைல் பரப்பில் குற்றுயிராய்க் கிடந்தோம். பாதுகாப்புக்காய் அமைத்த பதுங்குகுழிகளே தமக்கு புதைகுழி யானதை அறியாமல் எத்தனையோ உயிர்கள் பிரிந்திருந்தன.

இவற்றை எல்லாம் விடக் கொடுமை பஞ்சம். உண்ணும் உணவுக்கே உலை வைத்த கொடூரம். வரலாற்றில் கற்ற கறுப்புச் சந்தையை நிஜத் தில் அனுபவித்து விட்டோம். கையில் கோப்பை யுடன் கஞ்சி ஏந்திய வண்ணம் எத்தனையோ சிறார்கள் சிதைந்து போயிருந்தனர்.

என் இதயத்தில் அழியாத வடுக்கள் பல. அவற்றில் அகலாத வலி இது. மெழுகாய் தம்மை உருக்கி, ஒளியேற்றி வைக்கும் அற்புதப் பிறவிகள் பற்றி எழுதப்போகிறேன். கல்விச் சமுதாயத்தின் தூண்களாய், ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்குப் பின்னும் நிழலாய் மறைந்திருப்பவர்கள் இவர்கள். இப்படியிருக்கும் ஆயிரம், ஆயிரம் அன்பான ஆசான்களை இழந்துவிட்டுத் தவிக்கும் மொத்தமான மாணவ சமுதாயத்தின் வலிகளையுமே நான் ஒருத்தியாய் வடிக்கின்றேன்.

இவர் ஓர் ஆசான். அதற்கும் மேலே ஓர் அன்பாளன். வவுனியா வடக்கில் மருத நிலச் சிற்றூரான நெடுங்கேணியை வதிவிடமாகக் கொண்டவர். அங்கிருந்து இரண்டு மைல் தொலைவிலுள்ள ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் முதல்வராய் பணியாற் றிய மகத்தான மனிதர். எத்தனையோ மாணவர் களை பிரகாசிக்கச் செய்தவர். தன் துணைவி யாருடன் இணைந்து பல கல்விப் பணிகளை மேற்கொண்டவர். அடிப்படை வசதிகள் ஏதுமற்ற எம் பள்ளியைத் தன் அயராத உழைப்பால் முன்னேற்றியவர். அத்தனை மாணவர்க ளையும் தன் குழந்தைகளாய் வளர்த்தவர். முதல்வர் என்பதற்கு அடையாளம் கண்டிப்பு. எம் முதல்வர் விதிவிலக்கானவர் - அன்பென்ற ஒற்றைச் சொல்லால் எம்மை அடக்கி விடுவார். அறிவூட் டும் போது ஆசானாய் அரவணைப்பார். அந்த பள்ளியில் உலவும் ஆறு மணிநேரமும் ஆயிரம் அவதாரம் எடுத்து, தன் மாணவச் செல்வங்களை வழி நடத்தும், நடமாடும் தெய்வம் அவர்.

அந்த அற்புத மானிடன் கூட இந்த எறிகணை யின் கண்களுக்குத் தப்பவில்லை. சிதறிப்போன அவரின் உடலை மருத்துவ மனைக்குக் கொண்டு செல்வதைக் கேட்டுத் துடித்துப்போனேன். இடியாய் அவரின் மரணச் செய்தி எம் காதுகளில் வந்து விழுந்தது. சிதைந்த அவரின் உடலைக் கூடக் காண முடியாத பாவிகள் ஆகிவிட்டோம். இதை எழுதும் போது நான் சிந்தும் கண்ணீர்த் துளிகள் நிச்சயமாய் என் ஆசானுக்கு அஞ்சலிப் பூக்களாய் மாறும். இப்படித்தான் இங்கு வாழும் ஒவ்வொரு மாணவனும் தமது ஆசான்களுக்கு, தாம் சாதிக்கும் சாதனைகளால் சமர்ப்பணம் செய்கிறார்கள்.

உளிகொண்டு வடித்த சிற்பிகளே! நாம் உயிர் பெறும் வேளையில் உங்களைக் காணோம்...

உங்கள் பிள்ளைகள் சாதிக்கின்றனர். எம் வெற்றி மாலைகளைத் தாங்க உங்கள் தோள்கள் இல்லையே!

எங்களைத் தட்டிக் கொடுக்க உங்கள் கரங்கள் இல்லையே! வாழ்த்தியனுப்பும் உங்கள் திருவாய்கள் மௌனம் காப்பதேனோ....?

''மீண்டும் செல்வோம் எம் பள்ளிக்கு
கற்பதற்காக அல்ல - விழி மூடிப்போன
ஆசிரியத் தெய்வங்களுக்கு சமாதி
செய்வதற்காக...''

*மருதோடை நிலா*

# தாய்ப் பாலும் இல்லை மாப் பாலும் இல்லை

## அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்



வன்னியில் இறுதிக்கட்ட யுத்தம் நடைபெற்றபோது பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிர் இழந்ததும் படுகாயப்பட்டதும் நீங்கள் அறிந்ததே.

படுகாயமடைந்த மக்கள் போதிய மருந்துவசதிகள் இல்லாமலும், காயங்களைகட்டுவதற்கு பன்டேர்ஜ் இல்லாமலும் பழையதுணிகள், ஈரசாரத் துணிகள், வாழைநார்கள் ஆகியவற்றைக் கொண்டு காயங்களைக்கட்டினார்கள். மேலும் நடந்த பல அவலங்களை வார்த்தைகளால் சொல்லமுடியாது. தாய் இறந்து கிடந்ததுகூட தெரியாமல் தாயின் மார்பில் பால்குடித்துக்கொண்டு இருந்த குழந்தையையும். தாய் இறந்து கிடப்பதை யும் தந்தை படுகாயமடைந்து கிடைப்பதை யும் பார்த்து எவரைத் தூக்குவதென்று தெரியாமல் தடுமாறி நின்ற பிள்ளைகளை யும் பார்க்கும்போது அந்த கணம் எப்படி இருந்திருக்கும். அதே நேரம் ஷெல் மழையும் பொழிந்து கொண்டு இருக்கிறது. உடுப்பதற்கு உடையில்லை. உண்பதற்கு உணவில்லை. தாயின் மார்பில் பாலில்லை. குழந்தைகளோ ஒரே அழுகை.

மாப்பால் கூட இல்லை,எரிபொருள் இல்லாமிலிருந்த ஒரு மோட்டர் சைக்கிளைக் கொடுத்து தேங்காய் வாங்கி பாவித்தோம். இறந்து கிடந்த எமது உறவினர்களை வீட்டு வளவுக்குள் புதைத்து விட்டு இடம்பெயரத் தொடங்கினோம். பெண்களும் சிறுவர்களும் பல அசௌகரியங்களை எதிர்நோக்கினார்கள். பலர் கால், கைகளை இழந்த நிலையிலும் பலர் காயப்பட்ட நிலையிலும் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் வந்தடைந்தோம்.


அங்கு வந்து வவுனியா முகாமிலும் பல அசௌகரி யங்களைச் சந்தித்தோம்.

*அனுஜெயன்*

**கேள்வி:** ஆண் வயது 67. முழங்கால் மூட்டு வலித்து கொண்டிருந்ததால் வைத்தியரிடம் காட்டியபோது முழங்கால் மூட்டை எக்ஸ்ரே படம் எடுத்து எலும்புகள் தேய்ந்து போய்விட்டதாக சொன்னார். என்னால் நன்றாக நடக்க முடியாது. நடந்தால் பயங்கர வலி. இந்த பிரச்சினை தவிர வேறொரு நோய்களும் எனக்கு இல்லை. முழங்கால் மூட்டுகளை செயற்கை மூட்டுகளால் மாற்றீடு செய்ய வேண்டும் என்று மருத்துவர் கூறுகின்றார். இதுபற்றி எனக்கு விவரங்கள் தருவீர்களா?

**பதில்:** உங்கள் விவரங்களின் படி உங்களுக்கு OSTEO ARTHRITIS என்கின்ற வாத நோய் ஏற்பட்டுள்ளது. வயதாகும் போது வழக்கமாகவே மூட்டுகளில் வரும் தேய்வுகளினால் ஏற்படும் பிரச்சினை இது. சத்திர சிகிச்சை செய்து செய்கை முழங்கால்

# முழங்கால் மூட்டு தேய்வும் சத்திர சிகிச்சையும்



மூட்டுக்களைப் பொருத்துவதா-இல்லையா என்பது இந்த நோயினால் ஏற்பட்டுள்ள குணம் குறிகளின் தன்மையைப் பொறுத்தது. நடக்கும் போது, நோவு ஏற்பட்டு உங்கள் நாளாந்த வாழ்க்கைக்கு இந்தப் பிரச்சினை குந்தகமாக இருக்குமென்றால் சத்திர சிகிச்சை மேற்கொள்வது நல்லது. எக்ஸ் ரேயை மட்டும் வைத்துக் கொண்டு தீர்மானிக்க முடியாது. முன்னர் கூறியதைப் போல் குணம் குறிகள் உங்கள் சுமுகமான வாழ்க்கைக்கு கஷ்டத்தை தராவிடில் மருந்து மாத்திரைகளுடன் காலம் கழிக்கலாம். தினமும் மருந்து மாத்திரைகளில் தான் காலம் கழிக்க வேண்டிய நிலை ஏற்படுமானால், முழங்கால் மூட்டுகள் நோயினால் DEFORMED என்ற வகையில் சிதைந்து போயிருந்தால், நடந்து செல்வதற்கு முழங்கால் மூட்டுகள் உறுதியாக இல்லாவிட்டால், தடுமாறினால்-சத்திரசிகிச்சை செய்வதைத் தீர்மானிக்க முடியும். சத்திர சிகிச்சைக்கு மற்றும் செயற்கை மூட்டுக்கு நிறைய செலவு ஆகும். ஜனாதிபதி நிதியத்திலிருந்து இம் மாதிரியான சிகிச்சைக்காக ஓரளவு நிதி அளிப்பார்கள் என்பதும் இங்கு குறிப்பிடப் படவேண்டும். அநேகமான சத்திரசிகிச்சை நிபுணர்கள் ஒவ்வொரு மூட்டாகத்தான் சத்திர சிகிச்சை செய்வார்கள். நூற்றுக்கு 90 வீதத்திற்கு மேலான சத்திர சிகிச்சைகள் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளன. சத்திர சிகிச்சை முடிந்து இரண்டு நாட்களில் நடக்கலாம். முதல் 4-6 வாரங்கள்-உதவியுடன் நடந்து பழக வேண்டும். ஆறுவாரத்தின் பின்னர் எது வித உதவியும் இல்லாது நடக்க முடியும்.

**கேள்வி:** எனது மகள் வயது 13. பத்து வயதில் பருவமடைந்து மாதவிலக்கு ஏற்பட்டது. அதன் பின்னர் ஒழுங்காக மாதவிலக்கு வருவதில்லை. வந்தாலும் அதிகமாக போகாது. சிலவேளைகளில்-மாதவிலக்கு காலங்களில் வலியும் ஏற்படுவதுண்டு. ஸ்கேன் படம் எடுத்து பார்த்ததில் -அவருக்கு சூலகத்தில் சூலக கட்டிகள் -(POLY CYSTIC OVARIAN SYNDROM)- ஏற்பட்டுள்ளது தெரிய வந்தது. இதற்கு பெண் நோயியல் நிபுணர் PRIMOLUTN மூன்று மாதமும் பின்னர் குடும்பக்கட்டுப்பாட்டு மாத்திரைகள் மூன்று மாதமும் கொடுத்தார். ஐந்து மாதங்களுக்கு முன்னர் இந்த சிகிச்சை நிறைவடைந்தும் அவருக்கு மாதவிலக்கு ஏற்படவில்லை. தைராய்ட் சுரப்பு பிரச்சினைக்கு பரிசோதித்து பார்த்தும்-அது போல் எதுவும் இல்லையென அறியப்பட்டது. அவருக்கு மாதவிலக்கு ஒழுங்காக வர ஆலோசனை கூறவும்.

**பதில்:** அநேகமான பெண் குழந்தைகள் மிகவும் குறைந்த வயதில் பருவமடையும் போது மாதவிலக்கு ஒழுங்கீனங்கள் ஏற்படுவது சகஜமானதே. இதற்கு சூலகக் கட்டிகள் தான் காரணம் என்பது எப்பொழுதும் சரியான காரணம் இல்லை. ஆனால், உங்கள் மகள் விஷயத்தில் குறைந்தது ஒரு வருட காலத்துக்கு கருத்தடை மாத்திரைகளை தொடர்ந்து உபயோகித்து வந்தால் அவரது மாதவிலக்கு வட்டம் சீராகலாம் என்று நம்புகின்றேன். அவர் -அவரது வயது, உயரம் என்பவற்றுக்கு ஏற்ப எடை இல்லாமல்-எடை அதிகரித்து இருந்தால், சரியான உணவுமுறை மற்றும் உடல் பயிற்சி மூலம் எடையைக் குறைக்க வேண்டும்.

கருத்தடை மாத்திரைகளை கன்னிப் பெண்-அதுவும் வளர் இளம் பராயப் பெண் உபயோகிக்கலாமா என்று சந்தேகப்படுவீர்கள்.

கருத்தடை மாத்திரைகள் என்பது மாதவிலக்கு ஏற்படுவதற்கு தேவையான ஈஸ்ரஜோன், (OESTROGEN), புரஜெஸ்டோரன் (PROGESTERONE)- ஹோர்மோன்களை அளவாக கொண்ட மருந்துகள். இந்த ஹோர்மோன்கள் தொடர்ந்து உடலில் இருக்கும் போது கருத்தரிக்காது. ஆனால், இந்த ஹோர்மோன்களின் ஏற்ற இறக்க அளவுகளில்தான் கருத்தரிக்கும் என்ற அடிப்படையில் இவை கருத்தடை மாத்திரைகளாக உபயோகப்படுத்தப்படுகின்றன. அதே வேளையில் இந்த ஹோர்மோன்களை அளவாக உபயோகிக்கும் போது மாதவிலக்கு வட்டத்தை சீர்படுத்த உதவுகின்றது. இந்த அடிப்படையில் தான் உங்கள் மகளுக்கு இந்த மாத்திரைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

**கேள்வி:** பெண் வயது 26. கடந்த மூன்று வருடங்களாக தீராத தலைவலியால் கஷ்டப்படுகின்றேன். ஒரு நரம்பியல் (NEROLOGIST) நிபுணரின் ஆலோசனை பெற்றபோது-அவர்-எனது காதருகில் உள்ள இரத்தோட்டம் குறைவாக இருப்பதாக கூறி-இது 'VASCULAR HEADACHE' என்று நிதானித்து VASOGRAIN என்ற மாத்திரைகளை உபயோகிக்க பரிந்துரைத்தார். இந்த மேற்குறிப்பிட்ட மாத்திரையை உபயோகித்து வரும்போது-தலைவலி ஏற்படும் சந்தர்ப்பங்கள் குறைந்தன. ஆனாலும், சிலவேளைகளில் தலைவலி ஏற்படுகிறது. இந்த தலைவலியை முற்றாக குணமாக்க முடியாதா? ஆங்கில வைத்தியம் தவிர்த்து ஹோமியோபதி, தமிழ், மற்றும் அக்குபஞ்சர் வைத்திய முறைகளில் சிகிச்சை பெற்று முற்றாக குணமடைய வழி உண்டா?

**பதில்:** உங்களுக்கிருப்பது MIGRAINE என்ற ஒற்றைத் தலைவலி. அதற்கு PROPHLACTIC என்ற வகையில் இந்த தலைவலி ஏற்படாமல் முன்னேற்பாடாக உபயோகிக்கும் மருந்தை உங்கள் நரம்பியல் நிபுணர் தந்துள்ளார். இது தலைவலியை முற்றாக குணப்படுத்தாது. ஆனால், அடிக்கடி ஏற்படாமல் தலைவலிகளுக்கு இடைப்பட்ட காலத்தை அதிகரிக்கும். அப்படி தலைவலி ஏற்பட்டாலும் அது அவ்வளவு வீரியமாக வராது. அதுவே தலைவலி ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டாலும் தொடர்ந்து இந்த மாத்திரையை உபயோகிக்க வேண்டும். தலைவலி ஏற்படும் பொழுது மாத்திரம் இந்த மாத்திரையை உபயோகிப்பதால் பெரிதளவில் எதுவித நன்மையும் ஏற்படப் போவதில்லை.

உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் என்பவை போல இந்த ஒற்றைத் தலைவலியும் ஆங்கில மருத்துவத்தில்-முற்றாக குணமாக்க முடியாத நோய்.

ஆயுள்வேதம், அக்யூபஞ்சர் முறைகளில்-இந்த வகைத் தலைவலிகளை முற்றாக குணமாக்கலாம் என்று கருதப்படுகிறது. இதற்கு காரணம் ஒவ்வொரு மருத்துவ முறையின் அடிப்படையும் வித்தியாசமாக இருப்பதே. ஆங்கில மருத்துவ முறையில் அதிகளவில் நோய்க்கிருமிகள் தான் நோய்க்குக் காரணம் என்ற அடிப்படையில் சிகிச்சை செய்யப்படுகிறது. ஆனால்-வாதம், பித்தம், கபம் என்கின்ற மூன்று குணங்களின் வெவ்வேறு விகிதமான கலப்புகளில்தான் நோயின் அடிப்படையை ஆயுள் வேதம் ஏற்றுக் கொள்கிறது. சீன அக்யூபஞ்சர் மருத்துவமோ-- YIN, YANG என்ற எதிர்மறை சக்திகளினதும், பஞ்ச பூத தாக்கங்களினதும், உடலின் சக்தி என்கின்ற Qi யின் சுற்றோட்டத்திலும் நோய்களின் அடிப்படையை வலியுறுத்துகிறது. இந்நிலையில் எந்த மருத்துவ முறையிலும்- அனுபவமும், அறிவும் உள்ளவர்களால்- உங்கள் தலைவலிக்கு பெரிதளவில் குணம் காண சிகிச்சையளிக்க முடியும்.

**கேள்வி:** வயது 24 ஆண். சிறிய விஷயத்துக்கும் எனக்கு பயஉணர்வு ஏற்படுகிறது. தேவையற்ற, முக்கியமற்ற விஷயங்கள் கூட எனக்கு அச்சத்தைத் தருகின்றன. இதனால் சதா எனது இருதயம் பலமாக துடிப்பதை உணர்கின்றேன். கடந்த ஒரு மாதமாகத் தான் இப்படி அவதிப்படுகின்றேன். இதனால் எனது தொழில் ரீதியான வாழ்க்கையும், மணவாழ்க்கையும் வெகுவாக பாதிக்கப்படுகின்றன. எனக்கு உதவுங்கள்.

**பதில்:** நீங்கள் தந்த சிறு விவரங்களிலிருந்து- உங்களுக்கு ANXIETY என்கின்ற பயக்க மனம், பதகளிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்று நான் எண்ணுகின்றேன். ஏன், எதற்காக ஏற்பட்டிருக்கின்றது என்பதை- ஒரு மாத கால சோளாறு என்பதால் - கண்டறிய கஷ்டமாயிருக்கும். எதுவாகு மன அழுத்தம் (STRESS) வாழ்க்கை முறையில் (LIFE STYLE) மாற்றம், உங்களை மனக்கஷ்டப்படுத்திக் கொண்டிருந்த விஷயம், கூபவம் ஏதாவது ஒன்று திடீரென்று உக்கிரம் பெற்றதால் ஏற்பட்ட பிரச்சினை இது என்று சொல்லலாம்.

இந்த பிரச்சினைக்கு முடிவு காண-முதலில் உங்கள் வாழ்க்கை முறையில் மாற்றத்தை ஏற்படுத்துங்கள். நிறைய நீராகாரம் அருந்துங்கள், தினமும் 2-3 லீட்டர் நீர் அருந்துவது நல்லது. ஆரோக்கியமான-சத்துள்ள உணவு உட்கொள்ளவும். உடலுக்கும், மனதுக்கும் பயிற்சி தேவை. காலாற நடந்து பயிற்சி செய்யவும் மூளைக்கு வேலை கொடுக்கும் சதுரங்கம், SUDOKU போன்ற விளையாட்டுகளை, விளையாடுங்கள். உங்கள் குடும்பத்தினருடன் நீண்ட நேரம் செலவழியுங்கள். ஆக்கபூர்வமான பொழுது போக்கு (HOBBY) ஒன்றைப் பழகுங்கள். புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ளவரென்றால், உடனடியாக புகைப்பிடித்தலை கைவிடுங்கள். அதேபோல மது, தேநீர், காப்பி என்பவற்றை தவிருங்கள். மன அழுத்தத்துக்கு காலையில்-MID MORNING என்ற வேளையில் வாழைப் பழம் சாப்பிடுவது அழுத்தத்தை குறைப்பதாக சமீபத்திய ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது. இவைகளை கடைப்பிடித்தீர்களென்றால் நிச்சயம் உங்கள் பிரச்சினை தீரும் என்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளது. அப்படியும் உங்களுக்கு குணம் காணப்படாவிடில்-ஒரு மனோவியல் (PSYCHIATRIST) நிபுணரின் ஆலோசனை பெறுவது நல்லது.

**கேள்வி:** பெண், எனது குருதி வகை 'O' POSITIVE. நான் மணம் முடிக்க இருப்பவரின் குருதி வகை 'A' POSITIVE. இப்படி இரத்த வகைகள் வெவ்வேறாக இருப்பதால் எமக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு பிரச்சினை ஏற்படுமா?

**பதில்:** அநேகமானோருக்கு Rh குருதிவகைகளில் அதுவும் தாய்க்கு Rh NEGATIVE ஆகவும் வயிற்றில் உள்ள குழந்தைக்கு Rh POSITIVE ஆகவும் இருந்தால் ஒவ்வாத்தன்மை ஏற்பட்டு அடுத்து வரும் பிரசவங்களில் பிரச்சினை ஏற்படும் என்பது தெரியும். ஆனால், குருதிவகை ABO ஒவ்வாத்தன்மை பற்றி சமீபகாலமாகத்தான் கண்டறியப் பட்டுள்ளது. இந்த ஒவ்வாத் தன்மையை ABO HAEMOLYTIC DISEASE OF THE NEW BORN-ABO HDN என்று குறிப்பிடுவார்கள். நீங்கள் 'O' வகையாகவும்-கணவர் A வகையாகவும் இருப்பதால் இந்த ஒவ்வாத்தன்மை ஏற்படவாய்ப்பு உள்ளது. ஆனால், இந்த ஒவ்வாத்தன்மை ஏற்படுத்தும் ANTIBODIES இலகுவில் PLACENTA என்கின்ற தாய் குழந்தை தொடர்பு உறுப்பை கடந்து சென்று கருவைத் தாக்குவது அபூர்வம். இந்த ANTIBODIES இலகுவில் சிவப்பு இரத்த துணிக்கைகள் தாக்கி சேதப்படுத்துவதும் இல்லை. இதனால் உங்களுக்கு பிரச்சினை ஏற்படாது. எனினும் இதுபற்றி மேலதிக தகவல், அறிவு, ஆலோசனை என்பவற்றை உங்கள் மகப்பேற்று நிபுணர் மற்றும் HAEMATOLOGIST என்கின்ற விசேட நிபுணரிடம் ஆலோசனைபெறவும்.

※ ※ ※

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர்
எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஐயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை, கொழும்பு - 14.

# விவேகானந்தர் வாக்கும் சாமியார்களின் போக்கும்

அரசியல்வாதிகள், அதிகார மையங்கள், தொழிலதி பர்கள், சமூக சேவை அமைப்புகள், இவற்றுடன் ஆன்மிக வகுப்புகள் என்ற அவியல் சேர்க்கைதான் இன்றைய கோர்ப்பிரேட் சாமியார்கள்.

கையில் இருந்த சில்லறைக் காசுகளையும் குளத்தில் வீசிவிட்டு தபசில் ஆழ்ந்த ரமணர், 'காசும், பணமும், நகையும், ஆட்கொல்லி' என்றார்.

தனக்குத் தினமும் பக்தர்கள் தரும் பழங்களை மட்டுமல்ல; வெள்ளி, தங்கத்தையும் அன்றைய தினமே அடுத்து வருகிற பக்தனுக்குக் கொடுத்தவர் மகா பெரியவர். 'இதெல்லாம் வாசலுடன் போய் விட வேண்டும்' என்பது அவரது அருள் வாக்கு.


ரஜ்னீஷ்

பக்கத்தில் ஒரு குச்சி... கையில் விசிறி... இரண்டு சிரட்டைகள்...மட்டும் சொத்தாக வைத்திருந்த யோகி ராம்சுரத்குமாரிடம் யாராவது ஏதாவது கேட்டால், 'ஐ யம் எ பெக்கர். உனக்கும் சேர்த்து நான் ஆண்டவனிடம் பிச்சை கேட்கிறேன்' என்று மட்டும் சொல்வார்.

இந்து மதத்தின் தத்துவத்தை உலகம் அறியச் செய்த விவேகானந்தருக்கு கும்பகோணத்தில் பாராட்டு விழா நடந்தது. 'உங்களுடைய விசுவாசம் எப்போதும் கொள்கைகளில்தான் இருக்க வேண்டும். தனி நபர்களிடம் இருக்கக் கூடாது' என்று அவர் சொல்லி விட்டுப் போனார்.

இவர்களில் எவரும் இன்று இல்லை. இன்று இருப்பவர் களில் எவரும் அவர்கள் இல்லை!


சந்திராசாமி

கடந்த இரண்டு வாரங்களாக நித்யானந்தர் மட்டும் நித்திரையை இழக்க வில்லை. அவரைப் போலவே அலைந்து திரிந்து வரும் பல திகம்பர சாமியார்களும் நிம்மதி இல்லாமல் தவிக்கிறார்கள்.

நாடி சாமி, ரேகை சாமி, சுவடி சாமி, சித்து சாமி, பீடி சாமி, சுருட்டு சாமி, கஞ்சா சாமி, எச்சில் துப்பும் சாமி (வாழைப் பழச் சாமி), கெட்ட வார்த்தை சாமி, கற்பூரச் சாமி, ஊதுவத்திச் சாமி, பீர் சாமி, சாக்கடைச் சாமி என்று சாமிகளால் ஆனது இந்தியா. இவர்கள் எல்லாரும் அன்றாட வயிற்றுப்பாட்டுக்குக் கூட உத்தரவாதம் இல்லாமல் எதையாவது சொல்லி, சில தட்சணைகளைப் பெற்று வாழ்க்கையை ஓட்டிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், இன்று பெரியளவான விளம்பரங்களால் ஜொலித்து காலையில் ஒரு நாடு, மாலையில் இன்னொரு நாடு எனக் கதா காலட்சேபம் நடத்தி வருபவர்களின் கஜானாக்களோ கோடிகளால் ஆனது. இவர்கள் தங்களது உருவப்படங் களையே கொடுத்து பூஜிக்கச் சொல்கிறார்கள். சாமிகள் செய்யாததைச் சாமியாரால் செய்ய முடியும் என்று பக்தர்களை நம்பவைத்தது தான் இவர்களது பெரிய பலம்.

பல ஆண்டுகளுக்கு முன்பு இதுபற்றி எழுத்தாளர் சுஜாதாவிடம் கேட்டபோது, 'டொமினோ எபெக்ட் தான் இதற்குக் காரணம்' என்று சொன்னார். சைக்கிள் ஸ்டாண்டில் உள்ள சைக்கிள்களில் ஒன்றைத் தள்ளி விட்டால் வரிசையாக அனைத்தும் விழும் அல்லவா... அதையே அவர் உதாரணமாகச் சொன்னார். 'யாரோ ஒருத்தர் தனக்கு நிகழ்ந்த நல்லதைச் சொல்ல... அவர் மற்றவர்களுக்கும் சொல்ல.. அது விரிகிறது' என்பது சுஜாதாவின் கணிப்பு.

"யாருடைய சுயபுத்தியும் சொல்லாத எந்த விஷயத்தையும் இந்தச் சாமியார்கள் சொல்லிவிடுவது இல்லை. ஆனால், அவர்களின் தோற்றம் தரும் மாயை, அவர்களைச் சுற்றிப் பின்னப்பட்டு இருக்கும் அற்புத விளம்பர ஜோடனைதான் இதற்குக் காரணம்" என்று சொல்லும் தமிழ்நாடு மனநல மருத்துவர் ஒருவர், "இவர்களுக்கான தேவை இந்தச் சமூகத்தில் உள்ளது. அந்தத் தேவையை நிறை வேற்றிக் கொள்ள இவர்கள் தங்களை நிறுவிக் கொள்கிறார்கள். பெரும் அமைப்புகளை உருவாக்கும் போது அந்த அமைப்புகளுக்குரிய அத்தனைச் சிக்கல்களையும் சந்திக்க வேண்டியிருக்கிறது" என்று சொன்னார். நித்யானந்தர் உள்ளிட்ட சாமியார்களின் சிக்கல் இப்படித்தான் ஆரம்பிக்கிறது.


பிரேமானந்தா

இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது புறப்பட்ட தீரேந்திர பிரம்மச்சாரி தான் இவர்களின் ஆரம்பம்.

இந்திராவிடம் நட்பு இருந்த போதே அவரது எதிரிகளாக இருந்த ஜெயப்பிரகாஷ் நாராயணன், ஜெகஜீவன் ராம் ஆகியோருடனும் நட்பாக இருந்தார் தீரேந்திரர். அடுத்து அதை வளர்த்தவர் சந்திராசாமி. இன்றைய எல்லாச் சாமியார்களுக்கும் ரோல் மாடல் சந்திராசாமிதான். பி.வி.நரசிம்ம ராவ் முதல் சந்திரசேகர் வரை அவரது ஆசிரமத்துக்கு வராதவர் எவரும் இல்லை. ஆன்மிகத்தில் சம்பாதித்தாரா... ஆயுத வியாபாரத்தில் கொழித்தாரா என்று தெரியாத வகையில் கோடிக்கணக்கான பணம் அவருக்குச் சேர்ந்தது. மத்திய அமலாக்கப் பிரிவு மட்டும் 11 வழக்குகளைப் பதிவு செய்து வெளி நாட்டுக்குப் போக முடியாமல் அவரை முடக்கியது.


கல்கி

இன்னொரு பக்கத்தில் சாமியாராக வளர்ந்து வந்தார் ரஜ்னீஷ். அவரை செக்ஸ் குரு என்று சொன்னார்கள். அவர் அதைப்பற்றி எல்லாம் கவலைப்படவில்லை. அன்பின் ஆழம்பற்றிச் சொன்னது போலவே செக்ஸில் ஆழமாகப் போவதுபற்றி வெளிப் படையாகக் கற்பித்தார். 'செக்ஸ் என்பது சமாதி நிலைக் குச் செல்வதற் கான ஒரு படிக்கல். அதை ஆழ்ந்து அனுபவித்தால், அதில் இருந்து விடுதலை அடைவார்கள்' என்றார். அவரது வெளிப்படையான தன்மையால் யாரும் கேள்வி கேட்க முடியவில்லை.

இன்று இருக்கும் எல்லா சாமியார்கள் மீதும் ஏதாவது ஒரு சந்தேக ரேகை படர்ந்தே வருகிறது. தன்னிடம் இருந்த சிறுவர்களுடன் ஹோமோ செக்ஸில் ஈடுபட்டார், அதைக் கண்டுவிட்ட மற்றச் சிறுவர்களைக் கொன்று விட்டார்... கொலை வழக்கில் இருந்து தப்பிக் கொள்ள சாமியார் ஆனார். பெரிய சாமியாரைக் கொல்ல சின்ன சாமியார் மருந்துவைத்தார்... தனக்குப் பிறந்த வரையே அடுத்த வாரிசாக ஆக்கி, பிறகு பிரச்சினை வந்ததும் பொலீஸில் புகார் சொன்னார்... என்று இன்று இருக்கும் கோடீஸ்வர சாமியார்கள் அத்தனை பேர் மீதும் புகார்க் கதைகள் உண்டு. தான் எடுத்து வளர்த்த சிறுமிகள் வயதுக்கு வந்ததும் அவர்களைத் தனது பாலியல் இச்சைகளுக்குப் பயன்படுத்தியது மட்டுமல்லாமல், கொலை வரைக்கும் போய் சிக்கிய பிரேமானந்தா, இரட்டை ஆயுள் தண்டனை பெற்று உள்ளே இருக்கிறார்.


கோயல்

ஜெயேந்திரர் மற்றும் விஜயேந்திரர் மீதான கொலை வழக்கின் விசாரணை பாண்டிச்சேரியில் நடந்து வருகிறது. கல்கி சாமியார் பற்றி ஏராளமான புகார்கள். தியானம், யோகா, ஹீலிங், பிரசங்கம், மெடிடேஷன் என்று பக்தர்களை வளைப்பதாகக்குற்றச் சாட்டுகள் இருக்கின்றன. இது போன்ற வகுப்புகளை நடத்துவதால் சாமியார்களிடம் கோடிக் கணக்கான பணம் சேர்ந்து விடுவது இல்லை. பணம் சேருவது பகீர் வழியாக இருக்கிறது.

இந்தியாவில் மட்டுமல்ல... வெளிநாட்டிலும் சாமியார்கள் தான் அடிக்கடி இப்படியான சிக்கல்களில் சிக்கிக் கொள்கிறார்கள். சமீபத்தில் சிக்கி சின்னாபின்னம் ஆனவர் இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த கோயல் ராட்ஸன்.

இஸ்ரேல் நகரமான டெல்அவிவ் பகுதியில் ஒரு பெரிய வீட்டில் நீண்ட நாட்களாக வசித்து வந்தார் கோயல். எப்போதும் அவரது வீட்டில் பெண்கள் கூட்டம் அலை மோதும். அவர்களோடு வரும் குழந்தைகள் சாந்தமாக விளையாடிக் கொண்டு இருக் கும். லோக்கல் சேனல் ஒன்று கோயலின் வாழ்க்கையை டாக்குமென்டரியாக எடுக்க அனுமதி வாங்கினார்கள். வீட்டில் இருந்த பெண் கள் சமைத்தார்கள். கோயலுக்கு மேக்கப் போட்டார்கள். சாப்பாடு ஊட்டினார்கள். தங்களுடைய குழந்தைகளை அவர்கள் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. குழந்தைகளை அங்கேயே விட்டுவிட்டு வெளியே சென்றுவிட்டார்கள். சேனல் காரர்களுக்கு சந்தேகம் முளைத்தது.


நித்யானந்தா



## சங்கரும் பாலாவும்

ரசிகர்களுடன் நேரடித் தொடர்பில் இருக்க வேண்டும் என்பதற்காகவே இயக்குநர் ஷங்கரும் (www.directorshankaronline.com), பாலாவும் (www.directorbala.net) தனியாக வெப்சைட் ஆரம்பித்திருக்கிறார்கள். 'எந்திரன்' மற்றும் 'அவன் இவன்' தகவல்களை உலகத்துடன் முதலில் அவர்களே பகிர்ந்து கொள்கிறார்கள்.



## தீபிகா

தனியார் சேனலில் பாலிவுட் நடிகர்களுக்குக் கன்னடம் கற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சியை ஸ்லிம் குல்ப தீபிகா தொகுத்து வழங்கி வருகிறார். தீபிகாவின் தயவால் கன்னடம் கற்ற முதல் ஹீரோ... அபிஷேக் பச்சன்.





## நாய்க் கூட்டம்

பதினான்கு நாய்கள் சூழ்ந்தால் பயமாக இருக்காதா? அத்தனை நாய்களையும் வளர்ப்பவர் ரிஷிகா என்ற மாணவி.

சமீபத்தில் சென்னையில் நடந்த நாய் கண்காட்சியில் சிறந்த நாய் வளர்ப்புக்கான பரிசை இவர் வென்றிருக்கிறார். இவ்வளவு இளம் வயதில் இந்தப் பரிசை வென்றவர் இவரே.

வீட்டில் ஒரு நாய் இருந்தாலே தெருவை அலற வைத்துவிடும். டசின் கணக்கில் நாய்களை வளர்க்கும் ரிஷிகாவின் குடும்பம் எப்படி சமாளிக்கிறது?

அது ஒன்றும் அவ்வளவு கஷ்டமான விஷயம் இல்லை. எப்பவும் உரக்க கத்தி உத்தரவு போட்டால் தான் நாய்கள் புரிஞ்சு கொள்ளும் என்று சிலர் நினைக்கிறார்கள். சில வீடுகளில் நாயை கவனிப்பதற்காக ஏதாவது பிரம்பு வைச்சிருப்பார்கள். இதெல்லாம் தவறு. மென்மையாகச் சொன்னாலே போதும், என்ன செய்ய வேண்டும் என்பதை நாய்கள் புரிந்து கொள்ளும். ஆகவே கத்தாதீங்க! எங்களின் உத்தரவு நீளமான வார்த்தையாக இல்லாமல், சின்னச் சின்ன வார்த்தைகளாக இருக்க வேண்டும். நாம் ஒரு குறிப்பிட்ட விஷயத்தை செய்து அதன் மூலம் இன்னொரு விஷயத்தை நாய்களுக்கு உணர்த்தவும் முடியும். கழுத்தில் லெதர் பட்டி கட்டிவிட்டால், எனது நாய்கள் வாக்கிங் போக தயாராகிடும். மெல்லிசா செயின் கட்டினால், ஜாலியாக விளையாடுவதற்கான சிக்னல். இப்படி நாய் சிக்னல்களை விளக்குகிறார் ரிஷிகா. இவர் நாய்களுக்கு பிரசவம் கூட பார்த்திருக்கிறாராம். இவர்கள் வீட்டுக் குட்டிகளை விற்கவும் செய்கிறார்கள். ஆனால் எல்லோருக்கும் அல்ல. இவர்கள் போடும் நிபந்தனைகளை ஏற்பவர்களுக்கு. சில குடும்பங்களில் நாய் வளர்க்க ஆசைப்படுவார்கள். அம்மாக்களுக்கு நாய் என்றாலே அலர்ஜியாக இருக்கும். அப்பா ஆபீஸுக்கும், மகன் ஸ்கூலுக்கும் போய்விட்டால்; பகலில் நாயை அவர்கள் எப்படி கவனிப்பார்கள்? நாய் அந்தப் பெண்ணுக்குத் தொந்தரவு தானே? சில சமயங்களில் கணவன், மனைவி இருவரும் வேலைக்குப் போய்விடுவார்கள். நாயை வீட்டுக்குள்ளேயே கட்டி வைச்சு வளர்க்கிறோம் என்று சொல்வாங்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாய்கள் வளரக் கூடாது. ஒரு நாய் ஏறக்குறைய 13 வருஷம் வாழும். அதற்கு எல்லா விதத்திலும் தயாராக இருக்கிறவர்கள்தான் நாய் வளர்க்க வேண்டும். ஆசைக்கு நாயைக் கூட்டிட்டு வந்துட்டு அம்போ என்று விட்டுவிடக் கூடாது என கறாராகச் சொல்கிறார் ரிஷிகா.



# வேலையில்லாதவன்

சிறுகதை

-ச.முருகானந்தன்

அமைதியான ரவிச்சந்திரனுக்கு இப்படி ஆகுமென்று நினைத்திருக்கவில்லை. இதனால் எனக்கும் ஏதாவது இடைஞ்சல் ஏற்படுமோ என்று பயமாகவும் இருந்தது. வடபகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞனாக இருந்தமை அவன் செய்த குற்றமா?

நேற்றுப் போலிருக்கிறது, வேலை கேட்டு அவன் என்னிடம் வந்து நின்றது! மெலிதான தோற்றம். சற்று உயரமாக இருந்தான். முகத்தில் மகிழ்வு இல்லா விட்டாலும் அழகாக இருந்தான். எனக்கு முன்னால் வந்து தயங்கித் தயங்கி நின்றான், என்ன வேண்டும் எனக் கேட்டேன். வேலை வேண்டும் என்றான்.

''இப்போது என்ன வேலை செய்கிறாய்?''

''வேலையில்லாதவன்.......'' என்று சிரித்தான்.

''எங்கே இருக்கிறாய்?''

''இங்கே வெள்ளவத்தையில் தான். மனிங் பிளேஸில் மாமா வீட்டில்......''

''சொந்த இடம் எது?''

''யாழ்ப்பாணம்....... கரணவாய்.....''

''இங்கே பொலிஸ் பதிவு இருக்கோ.....''

''ஓம் முதலாளி.....''

''என்ன வேலை தெரியும்? போட்டோஸ்ரற், ரெலிபோன் வேலையள் தெரியுமா?...''

''ஓரளவுக்கு தெரியும். சொல்லித் தந்தியள் என்றால் பிடிச்சிடுவன்.....''

''சரி..... என்னால கன சம்பளம் தரேலாது''

''பரவாயில்லை....''

''கொழும்புக்கு ஏன் வந்தனி?''

''ஊரில இருக்கப் பயம்... அதோட வெளிநாட்டுக்குப் போவமெண்டு வந்தனான். மாமாவைக்கும் கஷ்டம்தானே? ஏஜென்சியும் இழுத்தடிக்கிறாங்கள்.....''

''ஆர் வெளிநாடு போக உதவி செய்யினம்?''

''சிநேகிதன் ஒருத்தன் சுவிற்சிலாந்திலை இருக்கிறான்.... சின்ன வயதிலயிருந்து ஒண்டாகப் படிச்சனாங்கள்... இப்பவும் தொடர்பு இருக்கு.....''

அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது. கூடவே எனது கடையில் வெற்றிடமும் இருந்தது. அவனை வேலையில் சேர்த்துக் கொண்டேன்.

''எல்லாம் சரி, உன்னுடைய பேரை சரியாக மறந்து போனேன்...''

''ரவி.......ரவிச்சந்திரன்.....''

''சரி நாளையில இருந்து வேலைக்கு வா. காலமை எட்டு மணிக்கு வந்திடவேண்டும்....இரவு எட்டு மணிக்குத்தான் போகலாம்.....''

''சரி....'' மகிழ்ச்சியோடு கூறி விடைபெற்றான். மறுநாள் நான் கடை திறக்க வரும்போதே வாசலில் காத்து நின்றான். வெகு சீக்கிரத்திலேயே எல்லா வேலைகளையும் பழகிக் கொண்டான். வலு சுறுசுறுப்பாக வேலை செய்தான். அவன் வந்த பலனோ என்னவோ எனது வியாபாரமும் ஓகோ என்றுவளர்ந்தது. இப்படியான விசுவாசமான, சுறுசுறுப்பான வேலையாள் கிடைப்பது கஷ்டம்....அவன் கிடைத்தது அதிஷ்டம் தான் என எண்ணிக் கொண்டேன்.

காசு லாச்சியையும் அவனை நம்பி விட்டுவிட்டுப் போகலாம் என அவனில் நம்பிக்கை ஏற்பட்டது. அவனது வேலையில் சேதாரம் கிடையாது. போட்டோ பிரதிகள் எடுக்கும் போது கச்சிதமாக எடுப்பான். தவறு ஏற்படுவதில்லை. கோளாறுகளையும் உடனுக்குடன் இனங் கண்டு கூறுவான். இப்போதெல்லாம் சேவிஸ் பண்ண யாரையும் கூப்பிடுவதில்லை. அவனே செய்வான்.

வாடிக்கையாளர்களுடன் நல்ல உறவைப் பேணினான். பெண் பிள்ளைகள் என்று அதிகம் வழிய மாட்டான். அத்துடன் அவன் ஆங்கிலத்தில் சரளமாக பேசுவான். அத்தோடு மனம் நோகாமல் பகிடி விடுவான். ஒரு நாள் ஒரு பெண் வாடிக்கையாளர் வந்து தமிழிலும் ஆங்கிலத்திலும் கலந்து கதைத்தார்.

''அக்கா....உங்களுக்கு தமிழ் தெரியாதா?.. இந்த தொலைக்காட்சி வானொலிக்காரர் போல கலந்து பேசிறியள்...இப்படியே போனால் தமிழ் மெல்ல இனி சாகும்'' என்றான்...

''ஏன் உமக்கு இங்கிலீஸ் தெரியாதோ?... இந்த நாளையில யூ மஸ்ட் லேன் இங்கிலீஸ் [illegible] வாற ரைமாச்சு... டிலே பண்ணாமல் தாரும்....எனக்கு லேற்றாகுது.... டின்னரும் செய்யவேண்டும்....''

''Don't worry madam. I will finish it in time..... Just wait for a few miniutes...'' என சுத்தமான ஆங்கிலத்தில் அவன் பதில் கூறிய போது அந்தப் பெண்ணைப் போல நானும் வாயடைத்துப் போய் நின்றேன்.

அந்தப் பெண் வேலையை முடித்துக் கொண்டு போனபின் அவனிடம் கேட்டேன்,

''உனக்கு இங்கிலீஸ் தெரியுமோ?''

''ஓம் ஆங்கிலம் தெரியும்...ஆனால் ஆங்கிலத்தை தனி ஆங்கிலமாகப் பேசப் பிடிக்கும். தமிழ் கதைக்கும் போது இயன்றவரை தூய தமிழில் கதைப்பது தான் பிடிக்கும்....ஆங்கில அறிவு அவசியம் தான். அது உலக மொழி, முதலாளி...ஆனால் நாங்கள் தமிழர் தமிழைச் சுத்தமாக பேசவேணும்...தமிழில அழகான அம்மா, அப்பா சொற்கள் இருக்கத் தக்கதாக மம்மி, டடி சொல்லுறது எனக்குப் பிடிக்காது. இப்போதைய தொலைக்காட்சி நிறுவனங்கள் கூட தமிழை ஏப்பம் விடுகின்றன. கலந்து கலந்து பேசி எங்கட செம்மொழியான தமிழ்மொழியை அழிக்கிறாங்கள். தமிழ் மெல்ல இனிச் சாகும் எண்டு யாரோ சொன்னது போல நடந்தாலும் ஆச்சரியப்படுகிறதுக்கில்லை. வேற ஒருத்தர் வந்து எங்கட மொழியைச் சாகடிக்க ஏலாது. நாங்கள் தான் சாகடிக்கப் போறம்......எங்களுக்கு ஒரு நாடில்லை. மொழியையும் கைவிட்டமென்டால் எங்கட இனம் அடையாளம் இல்லாமல் போகும்....''

அவனது யதார்த்தபூர்வமான கருத்துக்கள் என்னைக் கவர்ந்தன. இடையில் ஒரு வாடிக்கையாளர் வரவே சுறுசுறுப்பாக வேலையில் ஈடுபட்டான் ரவி. பின்னர் அவனோடு உரையாடினேன்.



''கொஞ்சக் காலத்துக்கு முந்தி தமிழில் நிறைய வடசொற்கள் கலந்திருந்தன. இப்ப ஆங்கிலம் கலப்படமாயிட்டுது. சிங்களமும் மெல்ல மெல்ல ஊடுருவுது. புதிய பொருட்களை அதே ஆங்கிலப் பெயரிலை அழைக்கலாம்... புதுச் சொல்லு கண்டுபிடிக்கும் வரை. ஆனால், இருக்கிற தமிழ்ச் சொற்களுக்குப் பதிலாக ஆங்கிலச் சொற்களை பயன்படுத்தி தமிழில் கலந்து கதைக்கிறது தான் பிழை..''

ரவி எவ்வளவு அறிவுபூர்வமாக கதைக்கிறான் என வியந்தேன்....

''முதலாளி...எனக்கு நாளைக்கு ஒரு நாள் லீவு வேணும்...ஏஜென்ஸிக்காரி கடத்துறாள்...காசையெண்டாலும் திருப்பி வாங்குவம்...''

''பொம்பிளையோ ஏஜென்சிக் காரி?....''

''ஓம் முதலாளி...கன பேரை அனுப்பியிருக்கிறாள். நிறைய சம்பாதித்துவிட்டாள்..வஜிரோ எல்லாம் வைச்சிருக்கிறாள்...''

ரவிக்கு ஒரு நாள் லீவு கொடுப்பது என்றாலே எனக்கு கஷ்டமாக இருக்கிறது. அவன் இல்லாது விட்டால் கை ஒடிஞ்ச மாதிரி...அதிகம் லீவு கேட்காதவன். அதுவும் இப்ப முக்கிய அலுவலாகத் தான் கேட்கிறான். சரி என்று கூறிவிட்டு அவனை நோக்கினேன்.

''நேரத்தோட அலுவல் முடிஞ்சிதெண்டால் பின்னேரம் வேலைக்கு வாறன்....''

அவனது தொழில் மீதான அக்கறை என்னைக் கவர்ந்தது. இவன் வேலையில்லாதவன் அல்ல, வேலையில் ஆதவன் என நினைத்துக் கொண்டேன்.

மறுநாள் வேலைக்கு மாலையில் வந்து விட்டான். முகத்தில் அவ்வளவு மகிழ்ச்சியில்லை. போன அலுவல் என்ன மாதிரி? என்று கேட்டேன்.

''காய் தான். அவள் அனுப்புறதாயும் இல்லை. காசை தாற நோக்கமும் இல்லை. பொறும் அனுப்பலாம் என்று சொல்லுறாள். ஒரு வருசத்துக்கு மேலாக இதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறாள். என்னோட கூட வந்த மாமாவுக்கு சரியான கோபம்... 'இரண்டு கிழமையில் காசைத் திருப்பித் தராட்டில் பொலிசுக்குத் தான் போவம்...' என்டு வெருட்டிப் போட்டு வந்தவர்.... அவளுக்கு பொலிசிலையும் செல்வாக்கு இருக்கெண்டு கேள்வி...'' ரவி ஏமாற்றத்துடன் கூறினான். எனக்கு அவனைப் பார்க்க பாவமாக இருந்தது. ''யோசிக்காத எல்லாம் சரிவரும்'' என்று ஆறுதல் சொன்னேன்.

''இல்லை முதலாளி... குடியிருக்கிற வீட்டை ஈடு வைச்சுத்தான் கடன்பட்டது. வட்டியும் குட்டியும் போட்டுக் கொண்டு போகுது.....தங்கைச்சிக்கும் கலியாணம் பேசுற வயது...கையில காசில்லை...நான் வெளிநாடு போய்ச் சேர்ந்தால் உழைச்சுப் போடலாம்...வேற ஏஜென்சிக்காரன் உடனை ஏத்தலாம் எண்டுறான். இப்ப என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை முதலாளி...'' ரவியின் ஆதங்கம் எனக்குப் புரிந்தது.... யோசிக்காதை கடவுள் கைவிடமாட்டார் என ஆறுதல் சொன்னேன்.

இரண்டு வாரம் சென்றதும் மறுபடியும் லீவு கேட்டான். இந்த முறையாவது நல்ல முடிவு கிட்டட்டுமே என வாழ்த்தி அனுப்பினேன்.

ஆனால் அவன் இம்முறையும் ஏமாற்றத்துடன் திரும்பினான். அவள் பணத்தைத் திரும்பிக் கொடுக்காததுமல்லாமல், செய்யுறதைச் செய்யும் படி சவால்விட்டிருக்கிறாள்.

அவனது நிலமை எனக்கு கழிவிரக்கத்தை ஏற்படுத்தியது. எப்படி ஆறுதல் சொல்வதென்றும் புரியவில்லை. ரவியின் மனம் சோர்வாக இருந்தாலும், அவன் தனது கடமையை சரிவரச் செய்தான். அவனில் மிகவும் பிடித்த அம்சம் இதுதான். இப்படியொரு நல்ல பொடியனுக்கு நல்லதே நடக்கும் என என் மனதைத் தேற்றிக் கொண்டேன்.

நாம் ஒன்று நினைக்க, நடப்பதோ வேறொன்றாகி விடுகிறது. மாலையில் தட தட என்று பூட்ஸ் ஒலிகள். நிமிர்ந்து பார்த்தேன், பொலிஸும், இராணுவமும் எனது கடைக்குள் தட தட என்று நுழைந்தார்கள்.

''கவுத ரவி...?...யார் ரவி...?'' என பெருங் குரலில் கர்ஜித்தபடி நோட்டம் விட்டான் ஒருவன். நான் என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்து நிற்க, ரவி பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்தான். இதற்கிடையில் வந்த பொலிசார் ஒருவன் கடையில் வேலை செய்யும் ஒருவனின் கன்னத்தில் அறைந்தபடி மீண்டும், 'யார் ரவி?' என்று கேட்டான். அடிவாங்கியவன் வேதனையில் அலறியபடி 'ஐயோ சேர் நானில்லை இவன் தான் ரவி' என்று ரவியைக் காட்டினான். 'கொட்டியா' என்றபடி உடனே ரவியைப் பாய்ந்து பிடித்தவர்கள், சரமாரியாக அடித்து உதைத்து அவனுக்கு விலங்கிட்டு அழைத்துச் சென்றனர். பெற்ற மகனை இழுத்துச் செல்வது போல உணர்ந்து துடிதுடித்தேன்.

இப்போது எனது பயத்திற்குக் காரணம் இதுதான்; வேலை வழங்கி வைத்திருந்தமைக்காக என்னையும் ஏதாவது செய்வார்களோ? உடனே ரவியின் மாமாவுக்குத் தகவல் கொடுத்தேன். அவர் பதறியபடி ஓடோடி வந்தார். பொலிஸ் நிலையத்திற்கு வரும்படி என்னையும் அழைத்தார். பயமாக இருந்தாலும் மறுப்பின்றி சென்றேன்.

எனக்குத் தெரிந்த சாஜன் ஒருவரை அணுகி விபரத்தைக் கூறினேன். ''அதுவா?..புலிப்பயங்கரவாதி என்று தகவல் கிடைத்தது....அதுதான் கைது செய்துள்ளார்கள். ஓ.ஐ.சியிடம் போய் கதையுங்கள்....'' என்றார்.

அவனுக்கும் தீவிரவாத இயக்கத்திற்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று மாமனார் வலியுறுத்திக் கூறினார். எதற்கும் விசாரித்து விட்டுத் தான் கூறமுடியும் என்று ஓ.ஐ.சி கூறினார். ''யாரோ ஏஜென்சி பெண் தான் தகவல் கொடுத்தது.....''என்றார்.

நான் திகைத்துப் போய் நின்றேன்.

# வன்னித் தேர்தல்களம் எப்படியுள்ளது?



வன்னிக்கான வேட்பாளர்கள் வன்னியில் சென்று தேர்தல் பணிகளைச் செய்ய முடியாமல் உள்ளது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இது தேர்தல் சட்டத்தின் படி ஏற்றுக்கொள்ள முடியாத அடிப்படை உரிமை மீறல் விதியாகும். எனவே, அங்கே சென்று தேர்தல் பணிகளில் ஈடுபடுவதற்கு சகல கட்சிகளுக்கும் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்.

இதற்குரிய அனுமதியை வழங்க வேண்டியதும் கட்சிகளுக்கான சுதந்திரத்தை உறுதிப்படுத்த வேண்டியதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

ஆனால், வன்னியில் தேர்தல் பணிகளில் ஈடுபடுவதற்கான மனப்பாங்கும் துணிச்சலும் எப்படி இந்த கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் வந்தது?

பாதிக்கப்பட்ட மக்களை முழுமையாகக் கொண்டதே வன்னிப்பகுதி. இதில் கிளிநொச்சி மாவட்டமும் உள்ளடங்கும். சில வேட்பாளர்கள், தாம் இறுதி வரை வன்னியில் இருந்ததாகவும், யுத்தச் சூழலில் வாழ்ந்ததாகவும் குறிப்பிடுகின்றனர். ஆனால் அவர்கள் அப்படி வாழவில்லை என்பதை மக்களில் பலரும் தெளிவாகவே அறிவர். தவிர, முகாம்களுக்கு வெளியேதான் வாழ்ந்தனர் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

இதை இங்கே ஏன் குறிப்பிட வேண்டுமென்றால், பிரசாரத்தின் போதே முழுப் பூசணிக்காயைச் சோற்றுக்குள் மறைக்கும் முயற்சிகள் நடந்தால், பதவி கிடைத்த பின்னர் நிலைமையை விளக்கத் தேவையில்லை.

வேறு சில தலைவர்கள் பிரசாரப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக வன்னிப் படைத் தளபதிகளுடன் பேச்சுக்கள் நடத்துகின்றனர்.

இவர்கள் இதற்கு முன்னர் வன்னி அகதிகளுக்கான உதவிப் பொருட்களைச் சேர்த்துக் கொண்டு போய், அவற்றை மக்களுக்கு கொடுப்பதற்குச் சிந்திக்கவில்லை. மீள் குடியேறிய மக்களைச் சந்திப்பதற்கும் அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கும் படையினரிடம் அனுமதி கேட்கவில்லை. மக்களிடம் செல்வதற்கு முயலவில்லையே! இது ஏன்?

அரசாங்கம் இந்த மக்களை இன்னும் சரியாக பராமரிக்கவில்லை. இவர்கள் போர்ச் சூழலில் புலிகளாலும் படைத்தரப்பாலும் பாதிக்கப்பட்டிருந்தனர். பின்னர் மிகக் கடினமான முகாம் வாழ்க்கையில் அவலப்பட்டவர்கள். இப்பொழுது மீள்குடியேறி வரும் சூழலிலும் ஏராளமான பிரச்சினைகளுடன் தான் வாழ்கின்றனர்.

குறிப்பாக, வன்னியில் அரச அதிகாரிகளின் அசிரத்தை பாராமுகப் போக்குகளாலும் தன்னிச்சையான நடவடிக்கைகளாலும் மக்கள் பெரும் அவலங்களுக்குள்ளாகியுள்ளனர்.

அகதிகளுக்கான உதவிப் பொருட்களை வழங்குவதில் கூட நிறைய ஒழுங்கமைப்பு குறைபாடுகள் உள்ளன. மீள் குடியேற்றிகளுக்கான உதவிகள், ஆதரவு என்பவற்றை வழங்குவதற்குப் பதிலாக கடுமையான விதிகள், இறுக்கமான நடைமுறைகளால் மக்கள் அவதிப்படுகின்றனர்.

இந்த நிலை குறித்து அரசியல்வாதிகள் வாய்திறப்பதே இல்லை. ஊடகங்களில் பலவும் அரசு அதிகாரிகளுடன் முரண்படாமல் ஒத்தோடுகின்றன.

வன்னி அவலம் என்பது தனியே அரசாங்கத்துடன் மட்டும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. அது முன்னர் தமிழ் அரசியலாளர்களுடனும் தொடர்புபட்டேயிருந்தது. இப்போது அரசு படைத்தரப்பு, தமிழ் அரசியலாளர், அரச அதிகாரிகள், கூட்டுறவாளர்கள் எனப் பல

**யாதுமானவன்**

தரப்புக்களுடன் சம்பந்தப்பட்டுள்ளது.

வன்னியில் இப்பொழுது கூட்டுறவுச் சங்கங்கள் தான் ஏகபோக வாணிபத்தில் ஈடுபட்டுள்ளன. இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் முழுமையாக பாதிப்புக்குட்பட்டவை. அப்படி இருந்தும் பல சிரமங்களின் மத்தியில்தான் மக்களுக்கான தேவைகளை நிறைவேற்றி வருகின்றன என்பது உண்மையே. ஆனாலும் கிடைத்திருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி ஏற்பட்ட பாதிப்புக்களை எல்லாம் குறுகிய காலப்பகுதிக்குள் ஈடுசெய்து கொள்ள வேண்டுமென்ற நோக்கில் பல சங்கங்கள் செயற்படுகின்றன. இதனால் பொருட்களின் விலை மிக அதிகமாக உள்ளது. தனியார் கடைகளுக்கான அனுமதி முழுமையாகக் கிடைக்காமையே இந்த நிலைக்கு காரணம் என்று சொல்லப்படுகிறது. அனுமதி கிடைத்துள்ள கடைகளில் கூட்டுறவுச் சங்கங்களையும் விடக்குறைந்த விலையில் பொருட்களை வாங்கக்கூடியதாக இருக்கிறது.

இதைத்தவிர, இந்த மக்களின் தொழில் துறைகள், கல்வி, தொடர்பாடல், வீதி அபிவிருத்தி, மின்சாரம், வீட்டுவசதி போன்ற பல பிரச்சினைகள் உள்ளன.

ஆனால், தேர்தலில் இறங்கியுள்ள வேட்பாளர்களில் பலருக்கும் இந்த பிரச்சினைகளைப் பற்றி எதுவுமே தெரியாது. சில தரப்பினர் தொடர்ச்சியாக மக்களைச் சந்திப்பதையும் கவனிக்கக் கூடியதாக உள்ளது. சில தரப்புக்கள் சில உதவிகளை மேற்கொண்டுள்ளனர். ஆனால், இவை முழுமையானவை அல்ல.

பொதுவாக வாக்குகளைத் தேடுவதிலுள்ள கரிசனை மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் காணப்படவில்லை. ''எரிந்த வீட்டில் பிடுங்கியது மிச்சம்'' என்பதைப் போலவே இவர்கள் இந்த மக்களிடம் செல்ல முற்படுகின்றனர். இந்த நிலை குறித்து ஊடகங்களும் அதிக அக்கறை காட்டுவதில்லை என்ற ஆதங்கம் மக்களிடம் உண்டு. அரசியல் தீர்வுக்கு முன்னர் மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதே மக்களின் விருப்பம். அதை நிறைவேற்றும் தரப்பினருக்குத் தம்மால் ஆதரவளிக்க முடியும் என மக்கள் சொல்கின்றனர்.

விடுதலைப்புலிகள் கூட தமது பேச்சுவார்த்தைக் காலங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பற்றியே அதிகம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர். பிரேமதாசா, சந்திரிகா, மஹிந்த ஆகியோருடனான பேச்சுக்கள் முறிவடைந்தமைக்கான காரணங்களில் முக்கியமான ஒன்று, இயல்பு வாழ்க்கையை உருவாக்குவதில் எழுந்த முரண்பாடுகள்தான்.

ஆகவே, வன்னிமக்கள் இழந்துபோன தங்கள் வாழ்வை மீண்டும் பெற்றுக் கொள்ளவே துடிக்கின்றனர். அந்தத் துடிப்பைக் கொண்டு ஆக்கபூர்வமாக உதவிக்கரம் நீட்டுவோரையே மக்கள் ஆதரிப்பர்.

வெற்று வார்த்தைகள், தேர்தல் கால வாக்குறுதிகள், தீவிரப்பற்று போன்றவற்றுக்கு இலகுவில் இவர்கள் எடுபடப்போவதில்லை எனலாம்.

***





**சந்தேகம் என்றொரு கோட்டையின் அதிபதியே அவநம்பிக்கை.**




"**நா**ன்" எனும் தனித்துவத்தைப் பேணுவதற்காக நான் வகிக்கும் பாத்திரங்கள், நான் கொண்டிருக்கும் தொடர்புகள், எனக்கிருக்க வேண்டிய இலக்குகள் என்பவற்றைத் தீர்மானிக்கும் பொறுப்பு என்னிடமே உள்ளது என்பதைப் பற்றிக் கடந்த தொடர்களில் நாம் விரிவாகக் கண்டோம்.

நமது மனம், ஆன்மா, மனச்சாட்சி, உடல் ஆகிய அனைத்தையும் வழிநடத்தக் கூடிய முழுமையான சுதந்திரம் நம்மிடமே உள்ளது.

நம்பிக்கைச் சுதந்திரம், மனச்சாட்சி சுதந்திரம், கொள்கைகளைக் கொண்டிருக்கும் உரிமை என்பன நம்மிடம் உள்ளன.

இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட மனித




பிறவியினாகிய நாம் அவரவர் செய்த செயல்களுக்கு அவரவரே பொறுப்பேற்க வேண்டும். அவரவர் செய்த செயல்களின் பலாபலனை அவரவரே அடைந்து கொள்ளும் நியதி இருக்கிறது.

மனிதனின் புற இயல்புகள், அக இயல்புகளைப் போலவே விரிவானதும் விசாலமானதுமாகும். மனிதரின் அக இயல்புகளைப் பொறுத்துத் தான் மனிதனின் புற இயல்புகள் அமையும்.

அது போலவே மனிதரின் புற இயல்புகளின் வலிவைப் பொறுத்துத்தான் மனிதரின் அக இயல்புகள் வலிவு அமையும். ஏனெனில் மனிதரின் பொதுவான இயல்புகள் இந்த இரண்டு அம்சங்களையும் உள்ளடக்கியதேயாகும்.

இவை பற்றி நாம் ஏற்கனவே விலாவாரியாகப் பார்த்திருக்கின்றோம்.

இருந்த போதிலும் மேலும் அதனை விளங்கிக் கொள்வதற்காக மீண்டும் நினைவூட்டல் சிறந்தது என்பதனால் இவ்வாரத் தொடரிலும் அந்த விடயம் விரவாக இடம்பெறுகிறது.

மனிதனின் புற இயல்புகளை நாம் சில கூறுகளாக பிரித்திட வேண்டும்.

அதாவது மனிதரது தனிவாழ்வு, மனிதரது குடும்ப வாழ்க்கை, மனிதரது சமுதாய வாழ்க்கை,. மனிதரது பொருளாதார வாழ்க்கை, மனிதரது சர்வதேச வாழ்க்கை என்ற பிரிவுகளாக மனிதரது வாழ்க்கையைப் பிரித்து ஆராயலாம்.

மனிதரது அக இயல்பு, புற இயல்பு ஆகிய இரு நிலைகளுக்கிடையேயும் இருக்க வேண்டிய சமநிலையில் ஏதேனும் தடுமாற்றங்கள் நிகழ்ந்தால், அது மிகவும் கொடிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மனிதனின் அக இயல்புகளும் புற இயல்புகளும் மிகவும் சீரிய முறையில் ஒன்றோடொன்று இசைந்து செயல்பட வேண்டும். மனிதரின் இந்த இரண்டு இயல்புகளும் இசைந்து செயப்படும் விதத்திலேதான் வாழ்க்கை நெறி இருக்க வேண்டும்.

**தனிமனிதரின் தனி வாழ்வு**

மனிதரின் தனிவாழ்க்கை தூய்மை நிறைந்த ஒன்றாக இருந்திட வேண்டும். மனிதர்கள் ஆரோக்கியம் நிறைந்தவர்களாக இருந்திட உணவும், உடையும் ஒழுக்கமும், உறைவிடமும் சிறந்ததாக இருக்க வேண்டும்.

**-ஏ.எச்.ஏ.ஹுஸைன்-**

மனிதர்கள் ஆரோக்கியமாக இருந்திட தூய்மை முக்கியம். தூய்மையில் இரு பிரிவுகள் உண்டு. ஒன்று உளத்தூய்மை. மற்றையது உடல் தூய்மை. எப்பொழுதும் உடலும் உள்ளமும் தூய்மையாக இருப்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒருபோதும் மனதில் கெடுதலான எண்ணங்களைக் கொண்டிருக்கக் கூடாது. ஏனேனில் அது உளத்தூய்மையை மாசுபடுத்தி கறைபடிய வைக்கும். உள்ளத்தில் ஒரு சிறிய கரும்புள்ளி போன்ற தீய எண்ணங்கள் உருவாகுமாக இருந்தால் அது முழு உள்ளத்திலும் கருமைப் படரச் செய்து கடைசியில் உடலையும் பாதிக்கும்.

எனவே மின்னல் வெட்டி மறையும் கணப்பொழுது நேர அளவில் கூட நம் உள்ளத்தில் ஏதேனும் கசப்பான உணர்வுகளோ எண்ணங்களோ உருவாக நாம் சந்தர்ப்பத்தை அமைத்து விடக் கூடாது.

நமது அற்புதமான உள்ளத்தை நாம் எப்பொழுதும் கறை படியாதபடி வெள்ளையாக வைத்திருந்தால் அதிலிருந்து நம்மையும் மற்றவர்களையும் ஆட்கொள்ளக் கூடிய, ஆகர்ஷிக்கக் கூடிய சக்தி உருவாகும்.

இத்தகையதொரு ஒளி நம்மையும் நம்மைச் சூழவும் உள்ள இந்த அகிலத்தையே அமைதியின் உறைவிடமாகவும், ஆனந்தத்தின் பூங்காவாகவும் மாற்றும் சக்தி கொண்டது.

நாம் நெருங்கும் இடமெல்லாம் நிறைவும் நிம்மதியும் கிடைக்கும்.

***

உங்களது
அந்தரங்க பிரச்சினைகள் மற்றும் குடும்பப் பிரச்சினைகள், சந்தேகங்கள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார் உளநல ஆலோசகர்
**ஏ.எச்.ஏ.ஹுஸைன்.**
கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:
'உளநல ஆலோசனை'
சுடர் ஒளி வாரமலர்,
85, ஜெயந்தமல்லி மாராச்சி
மாவத்தை, கொழும்பு - 14.
ஈமெயில் :
abdulhussein525@gmail.com

## மகளும், நானும் ஒரே நேரத்தில் கர்ப்பவதியாகியிருப்பதால் சமுதாயப் பார்வையில் அது சங்கடத்தை ஏற்படுத்துமா?

**கேள்வி:**

எனக்கு வயது 38 பல்வேறு நெருக்கடியான சூழ்நிலைகள் காரணமாக மிக இளயவயதில் திருமணம் முடித்து மூன்று பெண் மக்கள் உள்ளார்கள். மூத்தவளுக்கு 22 வயது, அவளுக்கு திருமணம் முடித்து கர்ப்பவதியாகி இருக்கிறாள். எனது முதல் கணவர் மூலம்தான் இந்த மூன்று பிள்ளைகளும் எனக்கு கிடைத்தார்கள். நான் முடித்த இரண்டாவது திருமணத்தின் மூலம் நீண்ட காலத்திற்கு பின் மீண்டும் கர்ப்பமாகியுள்ளேன். எனது பிரச்சினை என்னவென்றால் எனது மூத்த மகளும் கர்ப்பவதியாகியுள்ள நிலையில் நானும் கர்ப்பவதியாகியுள்ளது சமுதாயப் பார்வையில் சங்கடத்தை ஏற்படுத்துகிறது. எனினும் வாழ்வளித்த இரண்டாவது கணவனின் குழந்தை வேண்டும் என்ற மன நிறைவையும் நான் நிறைவேற்ற வேண்டியவளாய் உள்ளேன். எனது மனநெருக்கடிக்கு நான் என்ன செய்யலாம்?

**பதில்:**

உலகில் பிறந்த ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். அவர்களுக்கு சகல உரிமைகள், கடமைகள், தார்மீகப் பொறுப்புக்கள், அபிலாசைகள் உண்டு. எந்தவொரு நிலைமையிலும் மனிதப் பிறவியினர் ஒவ்வொருவருக்குமுள்ள தனிப்பட்ட உரிமைகளைப் பிறருக்காவோ அல்லது சமுதாய புனைவுகளுக்காகவோ தாரை வார்க்க முடியாது.

உங்களுக்குள்ள உடல்நலம், பொருளாதார பலம், குடும்ப மகிழ்ச்சி, அபிலாஷைகள் என்பனவற்றின் அடிப்படையில் உங்களது தனித்துவத்தையும் கருத்திற்கொண்டு முடிவெடுப்பதில் எந்தவித சங்கடமும் ஏற்படபோவதில்லை.

இந்த இடத்தில் வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந்தாலும் ஏசும் வையகம் இதுதானடா என்ற சினிமாப் பாடலும் இவ்விடத்தில் நினைவுக்கு வருகிறது.

சமுதாயப் பார்வையில் தூற்றுவதும் போற்றுவதும் கலந்துதானிருக்கும். இதனை பொருட்படுத்த வேண்டாம். மற்றவருக்கு தீங்கு இல்லாத தனக்கும் துன்பம் தராத எந்த விடயத்தினாலும் அவமானம் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

**கேள்வி:**

எனக்கு வயது 48 பெண். எனக்கு 4 பிள்ளைகள் உள்ளார்கள். இவர்களில் இருவர் பெண்கள். எனது கணவர் எதற்கெடுத்தாலும் பெண் பிள்ளைகளுக்கே முன்னுரிமை கொடுக்கிறார். இது எனது ஆண் பிள்ளைகளுக்கு மனவருத்தத்தை ஏற்படுத்துகிறது. அவர்கள் மனமுடைந்து போயுள்ளார்கள். முடிந்தளவு நான் சமாளிக்கிறேன். இதனையும் மீறி ஏதும் ஏடாகூடமாக நடந்தால் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறுகிறேன். நான் என்ன செய்வது?

**பதில்:**

மகள்மாருக்கு தகப்பன் ஆதரவளிப்பதும், தாய்மார் ஆண் பிள்ளைகளுக்கு இரக்கம் காட்டுவதும் வழமையாக இருந்து வரும் நடைமுறையாகும். இது "எதிர்பால்" ஆதரவும், அக்கறையும் என்று பொருள்படும்.

எனினும் இத்தகைய அன்பும், ஆதரவும், அரவணைப்பும் எல்லை மீறி விடும்போதுதான் எதிர்ப்புக்கள் ஆரம்பிக்கின்றன.

அதேவேளை இப்பொழுதிருந்தே நம்பால் நிலை சமத்துவத்தைப் பேணுவதற்கும் பாரபட்சங்களைத் தவிர்ப்பதற்கும் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

பிள்ளைகள் சிறுவயதாயிருக்கும் போதே அவர்களுக்கு சிறந்த மனப்பாங்குகளைக் கற்பித்து அன்பால் வழிநடத்த வேண்டும்.

சிறுவயதில் ஏதோ ஒரு காரணத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பின்னாட்களில் பழி வாங்கும் உணர்வுகளுக்கு உந்தப் பட்டு காரியத்தில் இறங்குவார்கள். அதுவே ஆண் - பெண் பாரபட்சமாகவும், குடும்ப வன்முறையாகவும் மாறும்.

இப்பொழுது உங்கள் பிள்ளைகள் எல்லோரும் வளர்ந்தவர்கள் என்கின்ற படியால் அவர்களிடையே பால் ரீதியான அதீத அக்கறை எடுத்து பாரபட்சங்களை வளர்த்து விடாமல் பக்குவமாக ஆணும்-பெண்ணும் சரிநிகர் சமானம் என்பதை எடுத்துக் கூறுங்கள் எல்லாம் நல்லபடி நடக்கும்.

**பலரின் வேண்டுகோளுக் கிணங்கி இப்பகுதியில் பிரசுரிக்கப்படும் வாசகர்களால் அனுப்பப்படும் உளவியல் சார்ந்த கேள்விகளுக்கு அவர்களின் பெயர், இடம் என்பவை குறிப்பிடப்படவில்லை.**



# துணிவான பெண் ஜன்சிலா

பல்வேறு துயரங்களுக்கு ஆளாக்கப்படுவது பெண்ணினமே. பிரச்சினைகள், சவால்களுக்கு முகம் கொடுத்து சொந்த வாழ்விலும், சமூகத்திலும் வென்று தலை நிமிரும் பெண்கள் இன்று அதிகம்.

யுத்தத்தின் போது தங்களுடைய உயிர்களையும், உறவுகளையும், உடமைகளையும் காப்பாற்ற இடம் பெயர்ந்த பலர் தங்களுடைய தனிப்பட்ட குடும்ப நலனில் மாத்திரமே அக்கறை எடுத்து வாழ்ந்தனர். ஆனால் இவர்களில் இருந்து மாறுபட்டவராக இளம் தலைமுறையினருக்கு முன்மாதிரியாக வாழ்ந்து சாதித்திருப்பவர்தான் ஜன்சிலா மஜீத்.

முல்லைத்தீவு தண்ணீரூற்றை பிறப்பிடமாகக் கொண்ட சகோதரி ஜன்சிலா மஜீத், யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்திருந்த வேளையில் 1990 ஆம் ஆண்டு யாழ் மண்ணை விட்டு குடும்பத்துடன் இடம்பெயர்ந்தார். கடந்த 20 வருடங்களாக புத்தளம் மாவட்டத்தில் அகதியாக வாழ்ந்து வருகிறார். இடம்பெயர்ந்த தமிழ், முஸ்லிம் மக்களிடையில் நல்லுறவை வளர்க்கும் நோக்கில், சமூக நம்பிக்கை நிதியம் என்ற தனியார் அமைப்பை நடத்தி சேவை புரிந்து வருகிறார். அத்துடன் மிதிவெடி அபாயம் குறித்த அறிவூட்டும் செயற்றிட்டங்களையும் மக்களிடத்தில், விழிப்புணர்வு ஊட்டும் வகையில் செயற்படுத்தி வருகின்றார்.



கிளாரி கிளின்டன், மிச்செல் ஒபாமாவுடன் ஜன்சிலா

இவருடைய இந்த சேவையைப் பாராட்டி உலகில் துணிச்சல் மிக்க பெண்களுக்கான விருதுக்கு இவர் தெரிவு செய்யப்பட்டார்.

கடந்தவாரம் இந்த விருதை, அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளிங்டனிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

இது தொடர்பாக நிகழ்வு அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில் நடைபெற்றது. நிகழ்வின் போது அமெரிக்க ஜனாதிபதியின் பாரியார் மிச்செல் பங்கேற்று விசேட உரையாற்றினார்.

விருது வழங்கும் பொது வாழ்த்து தெரிவித்து இராஜாங்கச் செயலாளர் கிளாரி கிளின்டன் பேசுகையில், "கடந்த 20 வருடங்களாக இடம் பெயர்ந்து வாழும் சகோதரி ஜன்சிலா மஜீத், புத்தளம் மாவட்டத்தில் வாழும் இடம்பெயர்ந்த தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையேயான ஓர் குறிப்பிடத்தக்க பெண். புத்தளம் பிராந்திய சக நம்பிக்கை நிதியத்தின் நிருவாக நம்பிக்கையாளராக திகழ்கின்றார். அவருக்கு கொடுக்கப்படும் விருது, அவரின் இடம்பெயர்ந்த தமிழ், முஸ்லிம் சிறுபான்மையிரையிடையான தலைமைத்துவம், புணர்வாழ்வு, இடம்பெயர்ந்தவர்களுக்கான மீள் குடியேற்றம், மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற் கும், அந்த சமூகங்களிடையே ஒற்றுமையை மேலோங்கச் செய்வதற் கும், முக்கிய பங்களிப்பு வழங்கியுள்ள தற்கும் ஆகும்" எனத் தெரிவித்தார்.

ஜன்சிலா மஜீத் துயருற்றவர்களை அணைக்கும் கரமாகவும், வாழ்வை இழந்த நிலையில் எதிர்காலமே கேள்விக்குறியாக இருக்கும் குடும்பங்களுக்கு ஆலோசனை வழங்கும் அன்னையாகவும் திகழ வேண்டும்.

பெண்ணுக்கு மறு பெயர் 'சக்தி' அந்த சக்தியை வெளிப்படுத்தி சாதிக்க துணிய வேண்டும், நம்மில் இன்னும் பல ஜன்சிலாக்கள் உருவாக வேண்டும். உதவவேண்டும்.

***

பெண்

தொகுப்பு:சாந்தி

# சகோதரிகளின் பார்வைக்கு...

**சகோதரிகளே,**

குடும்பத்தில் முதல் பெண் பிள்ளையாக பிறந்த நான் அனைவருக்கும் செல்லப் பிள்ளை. என் சகோதரிகளுக்கு மாத்திரமன்றி என் தந்தை வழி பெரியப்பா, சித்தப்பா பிள்ளைகளுக்கும் நான் தான் ஒரே செல்லத் தங்கை.

# சிரித்துக் கொண்டே அழுகிறேன்!

பிறந்த வீட்டில் துடுக்குத்தனமும், விளையாட்டுத்தனமுமாக வலம் வந்த எனக்கு திருமணம் பேசி முடித்து வைத்தார்கள். எல்லாப் பெண்களையும் போல கண்களில் கனவுகள் ஆயிரம் சுமந்துதான் கல்யாணப் பந்தலில் அமர்ந்தேன். திருமணம் முடித்து பதினைந்தே நாட்களில் என் கணவர் வேலை நிமிர்த்தம் வெளிநாட்டிற்குச் சென்று விட்டார். நான் என் மாமனார், மாமியாருடன் தான் வசித்து வந்தேன். எந்த நேரமும் கலகலப்பாக இருப்பதுடன் இருக்கும் இடத்தில் இருப்பவர்களையும் கலகலப்பாகவே வைத்திருப்பேன். நாளடைவில் என்னைப் போலவே என் மாமனார், மாமியாரும் மாறிவிட்டார்கள். இப்போது இந்த கலகலப்பான குணமே எனக்கு எதிராக வந்து நிற்கிறது.

என் கணவருடைய பெற்றோரும் என் வீட்டார்களை போலவே என்னில் அன்பும், நம்பிக்கையும் உடையவர்கள். என் கணவன் அருகில் இல்லாத ஒரு குறையை தவிர எந்த வித கவலையும் எனக்கு ஏற்பட்ட தில்லை.

இப்படி என் கணவர் வெளியூர் சென்று 9 மாதங்கள் ஓடின. கடந்த 2007 ஆம் ஆண்டு என் கணவ ரின் நண்பர் ஒருவரின் குடும்பம் இடம் பெயர்ந்து எங்கள் ஊருக்கு வந்தது. நண்பர் என் கணவருடன் வேலை செய்கிறார் என்பதால் என் கணவர் அவர்களுக்கு வீடு பார்த்து குடியமர்த்தும் பணியை என் மாமனாரிடம் ஒப்படைத்தார்.

வந்தவர்கள் என் கணவனின் நண்பனின் மனைவி, அவரது நான்கு வயது மகள் மற்றும் அப்பெண்ணின் தாயார். நண்பனின் மனைவி இளம் வயது பெண் என்பதால் நாங்கள் இருவரும் விரைவில் சினேகிதிகளாகினோம்.

விடுமுறையில் என் கணவரின் நண்பர் ஊர் வந்தார். என் கணவர் எனக்கும் மாமிக்கும் மாமாவுக்கும் சில பொருட்களைக் கொடுத்து அனுப்பியிருந்தார். அவற்றோடு வீடு வந்தவர் தன் மனைவியுடன் எனக்கிருந்த நட்பை பற்றி பேசி மகிழ்ந்தார். நல்ல பெண். அவர்கள் குடும்பமும் என்னைப் போலவே கலகலப்பான குணம் கொண்டவர்கள் அந்த தம்பதிகள் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவார்கள். அவர்களுடைய வீட்டுக்கு நாங்களும் போவோம். இது எங்கள் வீட்டு அயலவர்களுக்கு கண்ணை உறுத்தியி ருக்கிறது.

என் கணவரின் நண்பர் விடுமுறை கழித்து வெளியூர் சென்று இரண்டு மாதங்களில் என் கணவர் விடுமுறையில் இலங்கை வந்தார். திருமணம் முடித்து 15 நாட்களில் சென்றவர் ஒரு வருடம் கழித்து திரும்பி வந்தபோது எவ்வளவு சந்தோசத்தின் உச்சத்தில் இருந்திருப்போம் என்று சொல்லித் தெரியவேண்டியதல்ல. ஆனால் சந்தோஷத்தை பொறுக்க முடியாத சிலர் என் வாழ்க்கைக்கு கல் எறிய ஆரம்பித்தனர். ஆமாம் என் கணவருடைய வீட்டுக்கு அயலில் உள்ளவர்கள் சிலர் என் கணவரிடம் என்னைப் பற்றி தவறாக கூறியுள்ளனர். என்னையும் என் கணவரின் நண்பரையும் இணைத்து பல கட்டுக் கதைகளை சொல்லி உள்ளனர். இவற்றை நம்பாத என் கணவர் இறைவனுக்கும் மேலானவர். ஆனால் நான் இந்த சமூகத்தை நினைத்து தான் வேதனைப் படுகிறேன்.



என் சிநேகிதி (நண்பனின் மனைவி) கூட ஏன் நீ மற்றவர்களுடைய கதையைக் கேட் கிறாய் நானும் உன் கணவரும் உன்னிலும் என் கணவரிலும் நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்று எனக்கு ஆறுதல் கூறுகிறார்கள். நாங்கள் கொஞ்சம் வீட்டில் சிரித்து பேசினாலும் உடனே பக்கத்து வீட்டார்கள் தொலைக் காட்சி சத்தத்தையோ, ரேடியோ சத்தத்தையோ அதிகமாக வைத்து விடுகிறார்கள். அது மட்டுமன்றி வீதிகளில் கண்டால் நக்கல் பேச்சுக்களும், வேடிக்கையான சிரிப்புகளும் என நடந்து கொள்கிறார்கள்.

இதற்கு பொறாமை தான் காரணமா? பொறாமை தான் காரணம் என்றால் இதை நான் கண்டு கொள்ளாமல் இருப்பது சரியா? நான் பிறந்த வீடும் சரி, புகுந்த வீடும் சரி என்னை புரிந்து கொண்டது. ஆனால் எங்களை சுற்றி இருப்போரின் இதுபோன்ற நடவடிக்கைகளும் கேலிப் பேச்சுக்களும் நல்ல மனிதர்கள் மனதிலும், சந்தேகத்தை உண்டு பண்ணிவிடுமோ என்றுதான் அஞ்சுகிறேன். மனம் முழுவதும் கேள்விகள் தான். வெளியில் சிரிக்கிறேன் உள்ளுக்குள் அழுகிறேன். இதிலிருந்து மீள வழி சொல்வீர்களா?

பெயர் குறிப்பிட விரும்பாத வாசகி.





**(சென்ற வாரத் தொடர்ச்சி)**

இல்லாவிட்டால் மறுபடி அதை உபயோகிக்கும்போது தொற்றுக் கிருமிகள் பரவ வாய்ப்புண்டு.

இரவு படுக்கச் செல்வதற்கு முன்பாக உதடுகளில் உள்ள லிப்ஸ்டிக்கை சுத்தமாக அகற்றி விட வேண்டியது மிக முக்கியம்.

லிப்ஸ்டிக்கை நேரடியாக அப்படியே தடவக்கூடாது. அது உதடுகளின் முழுமையான அழகை வெளிப்படுத்தாது. எனவே லிப் பிரஷ்ஷின் உதவியாலேயே லிப்ஸ்டிக் போட வேண்டும்.

முட்டையின் வெள்ளைக் கருவோடு தேன் கலந்து உதடுகளில் தடவி வந்தால் அவை அழகு பெறும்.

தினமும் நெய் அல்லது வெண்ணெயை உதடுகளில் தடவி வர, அவற்றில் உள்ள வெடிப்புகள் நீங்கி, உதடுகள் வழவழப்பாகும்.

முட்டையின் வெள்ளைக் கருவோடு அரை ஸ்பூன் பாதாம் பவுடரைக் கலந்து, அத்துடன் கொஞ்சம் பாலாடையையும் சேர்த்து உதடுகளில் தடவி வர, வறண்ட உதடுகள் குணமாகும்.

இரண்டு டீஸ்பூன் ஆலிவ் எண்ணெயுடன் இரண்டு கிராம் தேன் மெழுகும், பன்னீரும் கலந்து உதடுகளில் தடவி வந்தால் அவை சிவப்பாகவும், மென்மையாகவும் மாறும்.

கொத்துமல்லிச் சாற்றை உதடுகளில் தினமும் தடவி வந்தால் அவை இயற்கையிலேயே சிவப்பு நிறத்தைப் பெறும்.

உதடுகளில் தடவிய லிப்ஸ்டிக்கை நீக்க பேஸ் வாஷ் அல்லது தேங்காய் எண்ணெயை உபயோகிக்கலாம்.

லிப்ஸ்டிக் போடுவதற்கு முன்பாக உதடுகளில் ஐஸ் கட்டிகளை ஒற்றி எடுத்தால், லிப்ஸ்டிக் நீண்ட நேரத்திற்கு அப்படியே இருக்கும்.

உடல்நலக் கோளாறுகள் இருந்தாலும் உதடுகள் பொலிவிழந்து காணப்படும்.

(தொடரும்...)

# அழகான பொண்ணுதான் சப்ரைஸ்

'அழகான பொண்ணுதான்' படத்தில் நமீதா நடிப்பது அனைவருக்கும் தெரிந்த செய்தி. ஆனால், தெரியாத செய்தி இந்தப் படத்தில் பார்த்திபனும் நடிக்கிறாராம். அட என்னப்பா இது... 16 வயசுப் பையன் தானே ஹீரோ... என்றுதான் எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்தார்கள். படம் விரைவில் வெளிவர விருப்பதால் படம் பற்றிய சஸ்பென்ஸை உடைத் திருக்கிறார்கள். படத்தில் நிஜ ஹீரோ பார்த்திபன்தானாம். அவர் தனது வாழ்வில் 16 வயதில் நடந்த சம்பவத்தை நினைத்துப் பார்ப்பதுதான் படத்தின் கதையாம். பதினாறு வயதில் பையன் ஒருவர் நடித்துள்ளார். படத்தின் கதை நகரும் இடத்தில் ஓவர்லேப்பில் பார்த்திபன் குரல்தான் ஒலிக்குமாம். இது படத்திற்கு இன்னும் மெருகேற்றும் வகையில் அமையும் என்கிறார் படத்தின் இயக்குநர். இப்பவாவது சஸ்பென்ஸை ஒப்பன் பண்ணுணீங்களே...!



படம்-உத்தம புத்திரன்



படம்-பழனிச்சாமி

# வருகிறார் சதா

"போய்யா போ..." என்ற டயலாக்குடன் 'ஜெயம்' படத்தில் அறிமுகமான சதாவுக்கு சமீப காலமாக தமிழில் எந்தப் பட வாய்ப்புகளும் இல்லாமல் இருந்தன. யாராவது கேட்டால், நான் தெலுங்கு, ஹிந்தியில் எல்லாம் ரொம்ப ரொம்பப் பிஸி. அதனால் கால்ஷீட் இப்ப இல்லவே இல்ல... என்று கைவிரித்து வந்தார். இப்போது இயக்குநர் வாசு சதாவைக் கூப்பிட்டு வாய்ப்புக் கொடுத்துள்ளார். இவர் கன்னடத்தில் இயக்கிய 'ஆப்தரக்கா' படம் சக்கை போடு போடுகிறது.

இதை அப்படியே தமிழில் இயக்குகிறார் இவர். ஹீரோவாக நடிப்பவர் ஆர்.கே. 'எல்லாம் அவன் செயல்', 'அழகர்மலை' போன்ற படங்களில் ஹீரோவாக நடித்தவரும் இவரே. (அந்தப் படங்கள் எல்லாம் வடிவேல் தயவால் நான்கு நாட்களாவது ஓடின. இது எத்தனை நாட்கள் ஓடுமோ...?) இந்தப் படத்தில் இரண்டு ஹீரோயின்கள். ஒரு இடத்தைச் சதா நிரப்பி விட இன்னொரு இடத்தை நிரப்புவதற்காக கேரளாவில் இருந்து திவ்யா விஸ்வநாத் என்ற புதுமுகத்தை இறக்குமதி செய்திருக்கிறார்களாம்.

ம்... யார் வந்து என்ன... நடிக்கவா போறாங்க...!

# சிம்புவைப் புகழும் சத்யா

'விண்ணைத் தாண்டி வருவாயா' படத்தில் திரிஷாவுக்கு அண்ணனாக நடித்திருப்பாரே சத்யா, இவர் இப்போது சென்னை யிலேயே செட்டிலாகிவிட்டார்.

ஏன் என்றால் தமிழ்ச் சினிமாவை ஒரு கை பார்க்காமல் விடுவதில்லை என்பதற்காகதான். மலையாளத்தில் ஓரிரு படங்களில் நடித்திருந்தாலும், வரவேற்பெல்லாம் தமிழ்நாட்டிலதான் கிடைக்குது என்பது சத்யாவின் சந்தோஷம்.

படம் பார்த்திட்டு வெளியே வாற ரசிகர்கள் அடையாளம் கண்டுகொண்டால் கையைக் குலுக்குவதும், ஓட்டோகிராப் வாங்குவதும் கேரளாவுல அவ்வளவு சீக்கிரம் நடந்திடாது. இங்கே ரொம்ப வேகமாக இருக்கு. எதார்த்தமாகப் பேச ஆரம்பிக்கும் சத்யாவுக்கு 'விண்ணைத் தாண்டி வருவாயா' படத்திற்குப் பிறகு ஏராளமான வாய்ப்புகள் வருகிறதாம். ஒரு கதவு திறந் திருக்கு. படார்னு பாய்ந்திடக்கூடாது. நிதானமாக நுழையவேண்டும் என்பதற்காகப் பக்குவமாக பேசுகிறார். மொத்தம் 20 நாட்கள் அந்த படத்திற்காக நடித்தி ருக்கிறேன். கவுதம் சாருக்கு தான் நன்றி சொல்லணும். சிம்புவும் ரொம்ப நல்ல நடிகர். அவரைப் பார்க்கிறதுக்கு முன்னர் நிறையச் சொன்னாங்க. ஆனால், நான் கேள்விப்பட்டதை விட வேற மாதிரி இருந்தார். அவர் கிட்ட அவருடைய நடிப்பையே விமர்சிச்சு பேசுற அளவுக்கு "என்னை அனுமதிச்சாருன்னா பாருங்களேன் என்று கண்கள் மின்னப் பேசும் சத்யாவுக்கு, ரகுவரன் போல வில்லனாகவும், குணச்சித்திர வேடங்களில் நடிக்க வேண்டும் என்பதுதான் ஆசை.





படம்-சிங்கம்

...யுளிக்ஸ் புரடக்ஸ்... இந்தத் தயாரிப்பு நிறுவனத்தின் சார்பி... தயாரிக்கும் படம் '2010... பாக்யராஜ்'. இந்தப் படத்தில் ஹீரோ பிரேம்... கதாநாயகி மும்பை வரவான அங்கிதா என்... மொடல் அழகி. இந்தப் படத்தை இயக்கு... திருமலைராஜன். இவர் இயக்குநர் வெங்கட்பிரபுவிடம் உதவி இயக்குநராக இருந்தவர்.



படம்-உனக்காக என் காதல்



படம்-பையா



படம்-ஆறாவது வனம்

பல படங்களில் கவர்ச்சி நடிகையாக வலம் வந்து குத்தாட்டம் போட்டு ரசிகர்களின் மனதில் நீங்காத இடம் (?) பிடித்தவர் கவர்ச்சி நடிகை சோனா. இவர் அழகுசாதனப் பொருட்கள் விற்பனை செய்யும் ஷோரூமும் நடத்திக் கொண்டிருக்கிறார். இவர் தற்போது தொடங்கியிருக்கும் ...நிறுவனம் ... புரடக்ஸன்ஸ். ...தயாரிப்பு ...த்தின் சார்பில் இவர் ...டம் '2010 ...ரா பிரேம்ஜி. ...திதா என்னும் ... இயக்குபவர் ...இயக்குநர் ... உதவி ...ந்தவர்.

# தூள் கிளப்பும் பிரியாமணி!

பிரியாமணி நடித்த 'பருத்தி வீரன்' திரைப்படம் பல்வேறு விருதுகளைக் குவித்தாலும் அதில் பெரிதும் சந்தோஷம் அடையாமல் இருந்து வந்தார். காரணம் தன் அழகான முகத்தை டல் மேக்கப் போட்டு கருப்பாக்கி தன் வசீகரத்தையே கெடுத்துவிட்டார்கள் எனப் புலம்பித் தீர்த்தார் பிரியாமணி. அப்போது, அதுபோன்ற கரக்டரில் நடிக்கவும் மாட்டேன் என்று அறிக்கையும் விட்டார். அதன்பின் ஒன்றிரண்டு கிளாமர் வேடத்திலும் நடித்தார். தற்போது தெலுங்கில் இன்னும் ஒரு படி மேலே சென்று கவர்ச்சியாக நடித்தும் எடுபடவில்லை. அதனால் மீண்டும் தமிழகத்திற்கு வந்து, தெரிந்த இயக்குனர்களிடம் நடிப்புத் திறமையை வெளிப்படுத்தும் முத்தழகு கரக்டர் போல கரக்டர் இருந்தால் சொல்லுங்கள் எனத் தூது விட்டுக் கொண்டிருக்கிறார்.



தொகுப்பு-
எஸ்.ஜெய்

# ரஜினி சௌந்தர்யாவின் புதிய படத்தில் கௌதம்

சௌந்தர்யாவின் ஆக்கர் பிக்சர்ஸ் தயாரிப்பில் கௌதம் ஒரு படம் இயக்குவுள்ளார் எனப் பல வருடங்களுக்கு முன்பே பேசப்பட்டது. 'சுல்தான் தி வாரியர்' படத்தின் தாமதத்தால் தள்ளிப்போன அந்த புராஜெக்ட் வெகு விரைவில் தொடங்கப்படவுள்ளது. ஆக்கர் பிக்சர்ஸ் சுல்தான் தி வாரியரை முதலில் தொடங்கினாலும் இரண்டாவதாகத் தொடங்கப்பட்ட 'கோவா'தான் முதலில் வெளிவந்தது.

சுல்தானை விரைந்து முடிக்கும் பணியில் பிஸியாக இருக்கும் ஆக்கர் நிறுவனம் மூன்றாவது படத்தை இந்த வருட இறுதியில் தொடங்குகிறது. இதனை இயக்குகிறவர் கௌதம். அஜித்தின் ஐம்பதாவது படத்தைக் கௌதம் இயக்குகிறார். தயாநிதி அழகிரியின் 'கிளவுட் நைன்' நிறுவனம் இந்தப் படத்தைத் தயாரிக்கிறது. இதையடுத்து கௌதம் ஆக்கர் பிக்சர் தயாரிக்கும் படத்தை இயக்குகிறார். நடிகர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் யார் என்பது இன்னும் முடிவாகவில்லை. ஆனால் இசை கண்டிப்பாக ஹாரிஸ் கிடையாது என்பதை மட்டும் கௌதம் தெளிவுப்படுத்தியுள்ளார்.

பரத் நடித்து வெளியான படம் 'தம்பிக்கு இந்த ஊரு'. இந்தப் படம் எதிர்பார்த்த அளவு கல்லாக்கட்டவில்லை. இதற்குக் காரணம் என்ன என்பதைத் தயாரிப்பாளர் அலசி ஆராய்ந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில், பரத்துக்கும் இந்தப் படம் அவ்வளவாக நடிப்பில் பெயரை வாங்கித் தரவில்லை. காரணம் பரத் வருகின்ற காட்சிகள் எதுவும் அழுத்தமானதாக இல்லையாம். இதனால் பரத் மிகுந்த டென்ஷனுடன் இருக்கிறார்.

இதேபோல் அடுத்த படமும் ஊத்திக் கொண்டால் அப்புறம் வெளியே தலை காட்ட முடியாது என்று புலம்பித் தவிக்கும் பரத்துக்குப் பெயர் வாங்கித் தந்த படங்கள் 'காதல்' மற்றும் 'வெயில்'தான். எனவே அதுபோன்ற கதைகள் வைத்திருக்கும் இயக்குநர்கள் யாராவது நடிக்கக் கேட்டால் உடனே போய்விடுவேன். அடுத்த படத்தையாவது ஹிட் படமாகக் கொடுத்தாகணும் என்கிறார் இந்தத் தம்பி...

# குழப்பத்தில் தம்பி பரத்!



அஜித்துக்குக் கார் பந்தயத்தில் கலந்து கொண்டு சாதிக்க வேண்டும் என்பது நீண்டகால இலட்சியமாக இருந்தது. அதற்கான பயிற்சியிலும் ஈடுபட்டு கார்ப் பந்தயங்களில் கலந்துகொண்டார். இடையில் சிலர் அட்வைஸ் செய்ததால் பந்தயங்களில் கலந்து கொள்வதைக் கைவிட்டு முழுக் கவனத்தையும் சினிமாவில் செலுத்தினார். ஆனால், சில படங்களுக்குப் பிறகு மீண்டும் கார்ப் பந்தய ஆசை வந்துவிட்டது. தற்போது ஐரோப்பிய நாடுகளில்நடக்கவிருக்கும் 'பார்முலா-2' பந்தயத்தில் கலந்துகொள்ளத் தீர்மானித்த அஜித், அதில் கலந்துகொள்ளத் தேவைப்படும் தொகையான 23 கோடி ரூபாயைக் கொடுத்து உதவும்படி தமிழக முதல்வரிடம் கோரிக்கை வைத்துள்ளார். பரிசீலனை செய்து முடிவெடுக்கப்படும் எனத் தெரிவித்த முதல்வர், தொகை வழங்க ஆலோசித்து வருவதால் 'பார்முலா-2'இல் கலந்துகொள்வது கிட்டத்தட்ட உறுதியாகி இருக்கிறது.

# அஜித்தின் பந்தயம்!



படம்-சுறா

# கவிதைப்புனல்

## கானக கானம்!

வானமீது தவழ்ந்துவரும் வெண்ணிலாவே-பழைய
வாழ்வுமீள வந்திடுமா சொல்நிலாவே
கானகத்தின் மத்தியில் யான் வாழுகின்றேன்-என்
கண்ணீரில் நின்பதிலைத் தேடுகின்றேன்!

தோட்டந்துரவு என்னைவிட்டுத் தூரப்போனது-வாழ்வில்
துன்பமயம் தொடர்கதையாய் வந்துசேருது
நோட்டமிட்டு வாட்டந்தரும் கூட்டமோங்குது-அங்கம்
நொண்டியாக்கி நோகடித்து மகிழ்வுகொள்ளுது!?

நெடும்பனையாய் நிமிர்ந்தவாழ்வு நிலம் வீழ்ந்ததே-பயணம்
நிர்க்கதிக்குள் வீழ்ந்தாழ்ந்து நீண்டுசெல்லுதே
படுந்துயரில் நெஞ்சமின்று பரிதவிக்குது-யாக்கை
பாடையிலே போம்நாளைப் பார்த்துயேங்குது!

இந்தவாழ்வு எனக்கென்றும் தொடர்கதையோ?-ஏற்றம்
இறக்கமென்று சொல்வதெலாம் பழங்கதையோ?
சொந்தமில்லை சுகமில்லை இந்தவாழ்விலே-இதை
சொல்லியழ யாருமில்லை எந்தனருகிலே!

-அலக்ஸ் பரந்தாமன், புதுக்குடியிருப்பு, முல்லை.

## என்ன பயன்?

கருவறையில் குடியிருத்தி
கண்ணயரா விழித்திருந்து
பிறக்கும்வரை காத்திருப்பாள்
பிள்ளைபெற்ற அன்னையவள்
மறுபிறவி எடுத்தல்லோ
மகவுன்னைக் காக்கின்றாள்!

பத்துமாதம் உனைச்சுமந்து
பகலிரவாய் மருந்துண்டு
எத்தனையோ இடர்படுவாள்
அவளேயுன் நல்லன்னை
குத்துக்கல் போல்நீயும்
கொழுகொழுத்து வளர்ந்துமென்ன?

யார்பெற்ற பெண்ணோடு
ஊர்சுற்றித் திரிகின்றாய்
மார்நோகப் பாலூட்டி
மணிக்கணக்காய் காத்தவன்னை
பேர்கூட மறந்துவிட்டாய்
பெற்றெடுத்து என்னபயன்?

-கலாபூஷணம் மூதூர் கலைமேகம்

## மலையக எழுச்சி

## அங்கங்கள் வாட்டம்!

தொழிற்சங்கப் போட்டாப் போட்டி
தொழிலாளர் களத்தில்; அன்று
ஒழிப்பிங்கு உறவு, பாசம்
ஓலங்கள்; தர்பார்; வெட்டு!
அழிப்புச்சீர் கட்டுக் கோப்பு
ஆள்சேர்ப்பு; வேட்டைக் காடு!
வழியின்றி செழிப்புத் தேய்ந்து
மன்றங்கள், இதழ்கள் மாய்வு!

தலைமைக்குப் பித்து; தம்மோர்
தழைப்புக்கு வித்து; தம்மின்
நிலையினை உயர்த்த சித்து
நீதானா? நானா? கூத்து!
குலைப்பிங்கு கட்டுக் கோப்பு
குறிஞ்சியின் சமூகக் கட்டு
உலைவைப்பு ஒற்றுமைக்கு
உதிப்பிங்கு பிரிவு, பேதம்!

சங்கங்கள் உதிப்பு; மதச்
சந்தங்கள் பிரிப்பு; மேதல்
பங்கங்கள் விளைவு; சிலோர்
பலியானார்; குருதி வெள்ளம்!
சிங்கங்கள் என்று தம்மைச்
சிறப்பித்த கயவர் பேச்சால்
அங்கங்கள் அநேக மன்று
அவதிக்குள் சிறைக்குள் வாட்டம்!

ஒற்றுமை ஓம்பிக் காத்த
உன்னத சங்கத் துக்குள்
தொற்றுநோய்; மக்கள் தியாக
சங்கத்துள் பதவிப் பித்து
புற்றுநோய் பேதப் பித்து
புரையோடிப் போன சொத்து
குற்றுயிர் சங்கம் தீய்க்கும்
குஷ்டத்தால்; இஷ்டக் காடு!

கவிஞர் வி.எஸ். கார்த்தி

## உழவன் வாழி!

வாழைமரம் இதழ்விரித்துக் காற்றி லாடும்
வரிவரியாய் வனப்புமிகக் காய்கள் ஈனும்
தோள்கொடுத்துச் சுமக்கின்ற குலைகள் சாயும்
தொங்குகின்ற குலைகளாலே சோலை தேங்கும்
நீள்நிலத்து மங்கைதரும் செல்வம் எல்லாம்
நீர்வடியு முடல்வலுவி னாலே மொண்டு
ஆள்பவனுக் குறுதுணையாய்க் கரங்கள் நீட்டும்
உழைப்பினாலே உயர்வடையும் உழவன் வாழி!

கற்றவர்கள் மெய்மறைக்கு மாடை யோடு
கால்நடையில் வீதியூடு சென்றி டுவார்
அற்றவர்க்கு முறுதுணையாய்க் கைகொ டுக்கும்
மண்வளமும் ஏதிலிகள் உயிர்கள் காக்கும்
விற்பன்ன ராலேயிந் நாடே ஓங்கும்
வீழுகின்ற ஆட்சிநிமிர்ந் தெழுந்து நிற்கும்
சொற்சிலம்ப மாடுகின்ற பெருவாய்க் கெல்லாம்
சுவையுடனே உணவளிக்கும் உழவன் வாழி!

புல்செருக்கி மண்ணுதறிப் பறியிற் போட்டு
தொழுவத்தில் காத்திருக்கும் ஆவுக் கீந்து
நல்லுடலைப் பேணியதன் அழகைப் பார்த்து
நாளுமதன் பால்சுவைத்து நோய்கள் நீக்கிச்
சொல்லரிய சத்துணவை உலகுக் கீந்து
சோர்வகற்றிப் பிணிகளையு மியல்பி னோடு
எல்லமையில் எல்லவர்க்கும் எடுகோ ளாகி
வளம்பெருக்கி வாழ்வளிக்கும் உழவன் வாழி!

"ஞானம்", வவுனியா.

## வினாவிடை மசாலா

தேர்தல் வேட்டைத் தெருவினில் ஓட்டை
தெரிந்து நடக்கணும் அண்ணாச்சி!-நாம்
தெளிந்து நடந்தது என்னாச்சு?-பெரும்
ஊர்வலம் கொண்டும் ஊழலைக் கண்டு
உருப்படி மாண்டு மண்ணாச்சு!-தினம்
உழைத்தவன் நெஞ்சம் புண்ணாச்சு!

அடிதடி சண்டை உடையுது மண்டை
அவசியந் தானா அண்ணாச்சி?-நம்
அயலவர் உறவும் என்னாச்சு?-அது
மடிதனில் கனமும் குடிவகை தினமும்
மாந்திய மல்லர் கையாச்சு!-அவர்
மல்லால் ஊரும்ப கையாச்சு!

இருப்பது வேஷம்! இழைப்பது மோசம்!
இவரா தலைவர் அண்ணாச்சி?-முன்
இருந்த கதிரையும் என்னாச்சு?-இனி
பருப்பது வேகா! பம்மாத் துமாகா
படுக்கை ஒன்றே கிடப்பாச்சு!-அவர்
பாசறை இடமும் கடப்பாச்சு!

சாக்கடை வீசும் சந்தன வாசம்
சந்தியில் கமழுது அண்ணாச்சி!-வடிகால்
சங்கதி யெல்லாம் என்னாச்சு?-எங்கள்
மூக்கடை பட்டால் முடையும் முட்டா!
முழுதும் பழைய கதையாச்சு!-மக்கள்
முனிவே இனிமேல் விதையாச்சு!

அடிப்படைத் தேவை அளந்திடும் சேவை
அரசுக் குண்டோ அண்ணாச்சி?-அதன்
அலகுத் திட்டம் என்னாச்சு?-எல்லாம்
படிப்படி யாகப் பூரண மாகும்
பல்லவி கேட்டே செவிடாச்சு!-அது
பல்லுக்(கு) இதமாய்த் தவிடாச்சு!

வாக்குச் சாவடி வரிசைக் காவடி
வனப்பைப் பாரும் அண்ணாச்சி!-நம்
வன்னி நிலைமையும் என்னாச்சு?-சிலர்
நாக்கும் சுழித்து நோக்கும் சலித்து
நடப்பே தலைகீழ் கதியாச்சு-இவர்
தொடுப்பே மாறா விதியாச்சு!

-ஏறாவூர் அனலக்தர்-

## தப்பு!

அன்பர்களை வம்பர்களாய்
எண்ணுதல் தப்பு!-அவர்
அறிவுரைகள் மறுப்பதுவோ
அதனிலும் தப்பு!

வம்பர்களை அன்பர்களாய்
நம்புதல் தப்பு-அவர்
வார்த்தைகளை ஏற்பதுவோ
அதனிலும் தப்பு!

கற்றவரைக் கேலிசெய்தல்
மாபெரும் தப்பு!-அந்த
கற்றவர்கள் கடுகடுத்தல்
அதனிலும் தப்பு!

உற்றவரை மற்றவராய்க்
கொள்ளுதல் தப்பு!-அந்த
உற்றவர்கள் பகையாதல்
அதனிலும் தப்பு!

படித்தவர்கள் நெறிதவறி
வாழுதல் தப்பு-ஏழை
படுந்துயரம் பாராமை
பாரிய தப்பு!

-லோகேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி
அக்கரைப்பற்று.

## வீடு

வீட்டின் முற்றத்தில் விதானையப்புவும் வளவனும்
வினாவினர் வீட்டிற்கு அடிக்கல் நாட்டிட
வீட்டின் அழகை விவரித்தார் விதானையப்பு
வில்லங்கம் வந்திடும் வீடற்று இருந்தால்

வீடும் கட்டி விருந்தும் முடிச்சாச்சு
விருந்தினர் வரவும் விசாலமாய் இருந்தது
வீட்டினைப் பார்க்க விரைந்தனர் வெளியோர்
விளக்கமாய் கூறினர் வீட்டினைக் காட்டி

வீதியில் விசர்நாய் விடாமல் ஊளையிட
விவரமறிந்த பெரியவர் விவரமாய்க் கூறிட
வீண்கதை யினைவிட்டு விளக்கமும் பெற்றனர்
விடை பெற்றனர் வீட்டினை நோக்கி

விடிந்ததும் செய்தி விபரீதமாய் வந்தது
வீடு தீப்பற்றியதால் விடுதிக்கு ஓட்டமாம்
விறாந்தையில் விதானையப்பு வினாவினர் நாளிதனை
வீட்டைக்காக்கமுடியாதவனுக்குவிடுதியில் விருந்துபசாரம்

விதிகொண்ட வாழ்வை வில்லங்கமாய் பெற்றுள்ளார்
விவரமறியா பிள்ளை விடுகிறது அறைகூவல்
வீடு தீப்பற்றி யதற்கு விரிவான பக்கறிக்கையாம்
விதானையப்புக்குசிரிப்பு வில்லங்கமாய் வந்தது

வீட்டினை விட்டால் விபரீதம் ஆகிடும்
வித்திட வேண்டாம் வியாபாரமாய் வீட்டினை
வீடற்றுப் போனால் விலாசம் எமக்கில்லை
விதியின் கதியென்று வீதிக்கு வந்திடுவோம்

வீட்டை மறந்து விடுதிக்கு மாறினோர்
விடிந்ததும் புரிந்திடுவார் வீட்டின் பெருமைதனை
விடுகதை தேவையில்லை விளங்கிடும் உனக்கு
வீட்டாருக்கு சந்திரன் விளக்கமாய் உரைத்தார்!

--தென்றல், வன்னி

# பரதக்கலை



ஓர் இனத்தின் அடையாளங்களாக இருப்பவை அந்த இனத்தின் மொழி, கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவையேயாகும். மொழியை நோக்கும்போது, எமது தாய்மொழியாகிய தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழாக வியாபித்து சங்ககாலம் தொட்டுப் பெருமையுடன் வாழ்ந்து வருகின்றது. தமிழர்களின் கலைகளில் மரபுவழி வந்த நடன வகைகளுள் முக்கியமானதோர் இடத்தை பரதக்கலை பெற்றுள்ளது. இக்கலை வடிவமானது தமிழ் தம் பாரம்பரியக் கலைச் சொத்தாக மதிக்கப்பட்டு வருகின்றது.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, தொல்காப்பியம் ஆகிய பழந்தமிழ் நூல்களில் கூத்து ஆடியவர்கள் கூத்தர், விரலியர் என்ற பெயர் கொண்டு விழிக்கப்பட்டனர். ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள அரங்கேற்றுக் காதையில் ஆடற்கலை பற்றிக் கூறப்பட்டுள்ளது. பண்டைய மன்னர் காலத்தில் கோயில்களில் சேவகம் செய்த தேவதாசிகள் நாட்டியம் ஆடி வந்தார்கள். அக்காலத்தில் சதிர் ஆட்டம், சதிர்க் கச்சேரி, சின்னமேளம் என்று சுட்டப்பட்ட பரத நாட்டியமானது தமிழகத்துக்கே உரித்தான தொல்சீர் கலைவடிவமாகும்.

பரத முனிவரால் எழுதப்பட்ட நாட்டிய சாஸ்திரம் என்னும் நூல் கூறும் பரத நாட்டியம், இந்தியத் துணைக் கண்டத்தில் ஆடப்பட்டு வருகின்ற சகல விதமான நடனவடிவங்களுக்கும் பொதுவானதாக இருக்கின்றதென ஆய்வாளர் டாக்டர் இரா.நாகசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அந்த வகையில் பரதநாட்டியம், கதக்களி, குச்சுப்புடி, கதக், ஒடிசி போன்ற நாட்டிய வடிவங்களைக் குறிப்பிடலாம். மேலும் 'பரத சாஸ்திர' என்னும் வடமொழி நூலுக்கு இணையாகத் தமிழ் மொழியிலும் எழுதப்பட்ட நாட்டிய நூல் ஒன்று சிதம்பரத்தில், இருந்ததாகவும் சொல்லப்படுகின்றது.

வரலாற்றின் அடிப்படையில் தமிழகத்தில் காலங்காலமாக இருந்து வந்த ஆடற்கரை, பரதநாட்டியம் என்று அழைக்கப்பட்டு வந்ததாகவும் அதற்குச் சான்றாகப் பாரதியாரின் ''பரத நாட்டியக் கூத்திடுவீரே'' என்ற கவிதையிலிருந்தும் 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓலைச் சுவடி ஒன்றில் காணப்பட்ட ''பரதவி நாட்டியம் பயில்கின்ற பல மாதர்'' என்ற சொற்றொடரும் சான்றாக இருக்கின்றன என்று 'வரலாற்றில் பரத நாட்டியம்' என்ற தமது நூலில் டாக்டர் இரா.நாகசாமி குறிப்பிட்டுள்ளார்.

பரதநாட்டிய மரபினைப் பேணிப் பாதுகாத்த தேவதாசிகள் பற்றிக் கூறுகையில்,

அவர்களுக்கு நடனம் கற்றபித்த ஆசிரியர்கள் நட்டுவனார் என்று அழைக்கப்பட்டனர். நட்டுவனாரின் செயற்பாட்டினை நட்டுவாங்கம் என்று அழைத்தனர். ஆலயங்களிலும் அரச அவைக் களத்திலும் நடன ஆசிரியரின் பணி இவ்வாறு சுட்டப்பட்டது. இன்று வரை 'நட்டுவாங்கம்' பரதநாட்டியத்தின் முக்கிய அணியாக நிலைத்து நிற்கிறது.

கோயில்களில் தேவதாசிகளினால் ஆடப்பட்டு வந்த சதிர் நாட்டியத்தை மக்கள் மதிக்கும் கலையாக மேடைக்குக் கொண்டு வந்து சமூக அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுத்த பெருமைக்குரியவர் ஸ்ரீமதி ருக்மிணிதேவி அருண்டேல் ஆவர். பரதநாட்டியக் கலைக்குப் புத்துயிர் கொடுத்தவர் என்ற வகையில் அவரின் நாமம் பரதநாட்டியக் கலை வரலாற்றில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளது. மரபு வழிவந்த கலைஞர் அபிநய அரசி பாலசரஸ்வதியும் அன்று போற்றப்பட்டார்.

மரபு வழிவந்த பரதக்கலையின் உயிர் நாடியாய், காவலாய் வாழ்ந்து மறைந்த நட்டுவனார்களும், தம் உடல் பொருள் ஆவி ஆகியவற்றை நடனக்கலைக்காகவும் ஆண்டவனின் சேவைக்காகவும் பூரணமாக அர்ப்பணித்த தேவதாசிகளும் வரலாற்றில் இடம் பிடித்துள்ளனர். பரத நாட்டியம் மதிக்கப்படும் கலையாக இன்று வளர்ச்சி பெற்றுள்ளது. இப்பரத நாட்டியக் கலையின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் டாக்டர் திருமதி ருக்மிணி தேவி அருண்டேல் என்றால் மிகையாகாது.



தமிழகத்திலிருந்து இலங்கையில் கால் பதித்த காலத்தில் சதிர் ஆட்டம் என்றும் சின்னமேளம் என்றும் கூறி நடனம் ஆடுகிறவர்களை சதிராட்டக்காரி என்று ஒரு வகையான தாழ்வு மனப்போக்குடன் மக்கள் நோக்கினர். அந்த வேளையில் தமிழகம் சென்று முறையாகப் பரதநாட்டியத்தைப் பயின்று இலங்கை திரும்பிய இணுவில் ஏரம்பு சுப்பையா அவர்கள் எதிர் நீச்சல் போட்டு பிரபல்யமான கலையாக இலங்கையில் நிலைத்திடப் பெரும் பணியாற்றினார். அவரிடம் பரதம் பயின்ற மாணவிகள் பலர் இலங்கையின் பல பாகங்களிலும் நடன ஆசிரியர்களாக மிளிர்கின்றார்கள்.

பரத முனிவரின் 'நாட்டிய சாஸ்திரத்தில்' பரதக்கலை அன்று நாட்டிய நாடகமாகவே ஆடப்பட்டு வந்துள்ளது என்பதற்கான ஆதாரங்கள் காணக்கிடக்கின்றன. இன்று அரங்குகளில் ஆடப்படும் நாட்டிய நாடகங்கள் கதை தழுவிய ஆடல் எனவும் பாவங்களையும் இரஸங்களையும் வெளிப்படுத்தி இராகம், தாளம் என்பனவற்றுடன் நிருத்தம், நிருத்தியம் என்பன இணைந்து காணப்படுவதென்று 'அபிநயதர்ப்பணம்' கூறுகிறது.

இலங்கையின் புகழை உலகறியச் செய்த மேதையும் பல நாட்டிய நாடகங்களை ஆக்கி மேடையேற்றியவரும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடன விரிவுரையாளராக கடமையாற்றியவருமாகிய இயலிசை வாரிதி இணுவில் என்.வீரமணி ஐயர் அவர்களால் பரதநாட்டியக் கலை பெருமை பெற்றிருந்தது. இலங்கையில் பிரபல்யம் பெற்ற குறவஞ்சி நாட்டிய நாடகங்களான 'மயிலைக் குறவஞ்சி; 'நல்லைக் குறவஞ்சி', 'திருக்கேதீஸ்வரர் குறவஞ்சி ஆகியவற்றை உருவாக்கிய பெருமையும் என். வீரமணி ஐயரையே சாரும்.

உலகளவில் மதிப்புப் பெற்றிருக்கின்ற கலை பரதநாட்டியம். பாடசாலைகள், ஆசிரிய கலாசாலைகள், பல்கலைக் கழகங்கள் என்று பரந்த அளவில் கற்றல் பாடவிதானத்தில் பரதநாட்டியமும் சேர்க்கப்பட்டுள்ளதால், பலர் அக்கலையைப் பயிலும் ஆர்வத்துடன் முன் வந்துள்ளார்கள். அதேவேளை சமூக அந்தஸ்தைப் பெற்ற நிலையில் தனியார் நடனப்பள்ளிகள் இலங்கையின் பல பாகங்களிலும் தோன்றிப் பெரும் சேவையை ஆற்றி வருகின்றன. அங்கு பயிலும் மாணவர்களின் அரங்கேற்றங்களும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

அரங்கேற்றம் என்பது ஒரு நடனமாது தான் கற்கவேண்டிய பரதநாட்டிய உருக்கள் யாவற்றையும் கற்றபின் முதன் முதலாக அவையோர் முன் தனது ஆற்றலை வெளிக்காட்டும் நிகழ்வாகும். எமது நாட்டைப் பொறுத்தளவில் பெரும் தொகையான சிங்கள மாணவர்களும் இக்கலையைப் பயின்று வருவதுடன், இந்தியாவுக்கும் சென்று தமது ஆற்றலை வளர்த்து வருகின்றார்கள்.

---

# கலைப்பூங்கா




# உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்க ஐந்தாம் மாநில மாநாடு



நெல்லை மாவட்டம் குற்றாலம் நகரில் உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத்தின் ஐந்தாம் மாநில மாநாடு 2010, பெப்ரவரி 21 ஆம் திகதி முழு நாள் அமர்வாக நடைபெற்றது. மாநாட்டு நிகழ்ச்சிகள் குற்றாலம் கேரளா பலஸில் காலை 10 மணிக்கு உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத் தலைவர் கவிஞர் வதிலை பிரபா தலைமையில் ஆரம்பமாகியது. பாரதி வாசவன், திரு வள்ளுவர் கா.நாராயணசாமி, ஜோசப் ஆதிரியன் ஆண்டோ, வே.அரசு ஆகியோர் முன்னிலையாளர்களாக வருகை தந்திருந்தனர். வரவேற்புரையை மாநாட்டு அமைப்பாளர்களில் ஒருவராகிய சொக்கம்பட்டி ரஹீம் நிகழ்த்தினார்.

பொதுச் செயலாளர் கவிஞர் சொர்ண பாரதி ஆண்டறிக்கையையும், பொருளாளர் நந்தவனம் சந்திர சேகரன் பொருளறிக்கையையும் வாசித்தனர். இலங்கைக் கிளையின் அறிக்கையை அதன் செயலாளர் அந்தனி ஜீவா சமர்ப்பித்தார். உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் சிற்றிதழ்களுக்குத் தனி அமர்வு, கண்காட்சி அரங்கம் அமைக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன், சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் சங்கத்தின் கிளைகளை அமைக்க நடவடிக்கை எடுத்தல், கலை மாமணி விருது சிற்றிதழாளர்களுக்கு வழங்குதல் ஆகிய தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. மாநாட்டு அமைப்பாளர்களில் ஒருவராகிய ஜாஹிர் உசேன் நன்றி நல்கினார்.

அதைத் தொடர்ந்து இடம்பெற்ற சிற்றிதழ்களின் கண்காட்சியை மகாத்மா காந்தி சேவா மையத்தின் நிறுவனர் வி.விவேகானந்தன் அவர்கள் தொடக்கி வைத்தார். பல இந்தியச் சிற்றிதழ்களுடன் இலங்கையிலிருந்து கொண்டு செல்லப்பட்ட முப்பத்திரண்டு சஞ்சிகைகளும் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தமை விசேட அம்சமாகும்.

சிற்றிதழ் குறித்த கருத்தரங்கம், உதயம் ராம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில், தமிழ் மணவாளன், அ.சுபாஷ், பாரதி, சந்திரா மனோகரன், வாழைகுமார், அ.மண்ணுலிங்கம், அ.செல்வதரன் ஆகியோர் தத்தம் கருத்துக்களை வழங்கினர்.

மதிய உணவு இடைவேளையைத் தொடர்ந்து திரைப்பட இயக்குநர் இராஜ மோகன் தலைமை வகித்து நூல்களை வெளியிட்டார்.

கவிஞர் ஞானபாரதியின் 'இன்னும் இருக்கின்றேன்' திருமதி சுந்தரியின் 'கருத்துக் கருவூலம்', கவிஞர் சந்திரா மனோகரனின் 'தூறலின் கடைசித்துளி', கடையநல்லூர் ஜமிலாவின் 'ஊமைக் காயங்கள்' ஆகிய நான்கு நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. அடுத்து விருது வழங்கள் நிகழ்வு இடம்பெற்றது.

மூத்த படைப்பாளருக்கான விருதுகள் எழுத்தாளர் தி.க.சிவசங்கரனுக்கும், கொழுந்து ஆசிரியர் அந்தனி ஜீவாவுக்கும் வழங்கப்பட்டன. 'தினமணி' பத்திரிகையின் ஆசிரியர் கே.வைத்திய நாதன், பாரதி இலக்கிய விருதை எழுத்தாளர் தி.க.சிவசங்கரனுக்கும், வல்லிக்கண்ணன் இதழியல் விருதை அந்தனி ஜீவாவுக்கும் வழங்கி வைத்தார். புதியம் திரை குறும்பட விருது திரைப்பட இயக்குநர் இராஜ மோகனுக்கும் வழங்கப்பட்டது. பெண் படைப்பாளிக்கான அவ்வை இலக்கிய விருதுக்கு திருமதி அரங்க மல்லிகா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இலங்கையிலிருந்து இம் மாநாட்டில் சிற்றிதழ்கள் சங்கச் செயலாளர் அந்தனி ஜீவாவும் பொருளாளர் த.கோபாலக்கிருஷ்ணனும் கலந்து சிறப்பித்தனர். அங்கு பேசிய கொழுந்து ஆசிரியர் அந்தனி ஜீவா ''உலகத்தமிழ் எழுத்தாளர்கள் மாநாட்டை நடத்த வேண்டும் அடுத்த ஆண்டு ஜனவரியில் இலங்கையில் அத்தகைய ஒரு மாநாட்டை நடத்தவும், அதற்குத் தமிழக எழுத்தாளர்களை அழைக்கவும் திட்டமிட்டுள்ளோம். எழுத்தாளர்களும் தினமணிப் பத்திரிகையும் ஆதரவு அளிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.



தமிழ்த்தாய் அறக்கட்டளை விருது 'ஞானம்' ஆசிரியர் தி.ஞானசேகரனுக்கும், அய்யன் திருவள்ளுவர் இலக்கியப் பேரவை விருது 'செங்கதிர்' ஆசிரியர் த.கோபாலக்கிருஷ்ணனுக்கும், இனியமனா இலக்கிய விருது 'ஜீவ நதி' ஆசிரியர் கலாமணி பரணிதரனுக்கும். வழங்கப்பட்டன. ஞானம், செங்கதிர், ஜீவநதி ஆகிய மூன்று சிற்றிதழ்களும் முறையே கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலிருந்து வெளிவருகின்றன.

''எதில் எழுதுகிறோம் என்பது, முக்கியமல்ல. என்ன எழுதுகிறோம் என்பதுதான் முக்கியம். நல்ல எழுத்துக்கள் பேசப்படும். அறிவியல் நம்மை வேறு ஒரு தளத்திற்கு அழைத்துச் சென்று கொண்டிருக்கிறது. இணையத்தளம் என்ற அறிவியல் முன்னேற்றத்தை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இணையத்தள சிற்றிதழ்களையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும்'' என்று எழுத்தாளர் கழனியூரன் தமது உரையில் தெரிவித்தார்.

பாரதி இலக்கிய விருது பெற்ற மூத்த எழுத்தாளர் தி.க.சிவசங்கரன் தமது உரையில் ''சிற்றிதழ்களுக்கு நல்ல படைப்புகளைத் தந்து கொண்டே இருக்க வேண்டும். அறிமுகப் படைப்பாளிகள், இளைஞர்கள், மாணவர்களுக்கு சிற்றிதழ்களே நாற்றங்காலாகவும், நடைவண்டியாகவும் இருக்கின்றன. இதில் பயிற்சி பெற்றவர்கள் பின் நாளில் தரமான படைப்பாளிகளாக உருவாகின்றனர். பாரதி முதல் புதுமைப் பித்தன் முதலான மாபெரும் எழுத்தாளர்களும், கவிஞர்களும் சிற்றிதழ்களால் வளர்ந்தவர்கள்'' என்று கூறினார்.

சுருதகேவலி இலக்கிய விருதை எஸ்.பி.வெங்கடாசலமும், களம் இலக்கிய விருதை உதயம் ராம் அவர்களும். 'மகாகவி' என்ற சிற்றிதழின் ஆசிரியர் வதிலை பிரபாவுக்கு சிகரம் இலக்கிய விருதும், 'கிழக்கு வாசல்' சிற்றிதழின் ஆசிரியர் உத்தம சோழனுக்கு நாகம்மாள் நினைவு இலக்கிய விருதும் வழங்கப்பட்டன.

சுமார் அறுபது சிற்றிதழ்களின் ஆசிரியர்கள் மாநாட்டில் கலந்து கொண்டதுடன், மாநாட்டின் வெற்றிக்கு எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், ஆர்வலர்கள் போன்றோரும் தத்தமது மேலான பங்களிப்பை வழங்கியிருந்தனர். மாநாட்டு சிறப்பு மலர் ஒன்றும் அழகான முறையில் உருவாக்கப்பட்டிருந்தது. அந்த மலரில் இலங்கையரான தம்பு சிவாவின் கட்டுரை ஒன்று, இடம் பெற்றிருந்தமை விசேட அம்சமாகும். உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத்தின் ஆறாவது மாநாடு இலங்கையில் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிய முடிகிறது. ✱

# பெண்கள் அதிகம் சிரிப்பது ஏன்?



'அவள் புன்னகை என்னை ஈர்த்தது' இப்படிச் சொல்லும் ஆண்கள் ஏராளம். சிரிப்பு மனிதனுக்கு அழகு. அதிலும் பெண்களின் சிரிப்புக்கு ஈர்ப்பு அதிகம்.

சின்ன சந்தோஷம் தரும் விஷயமாக இருந்தாலும் பெண்கள் நீண்ட நேரம் சிரித்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் ஏன் அப்படி இடைவிடாமல் சிரிக்கிறார்கள் என்று ஓர் ஆய்வு நடத்தப்பட்டது.

கலிபோர்ணியாவில் உள்ள ஸ்டேன்போட் பல்கலைக்கழகம் இந்த ஆய்வை மேற்கொண்டது. 10 ஆண்களையும் 10 பெண்களையும் தேர்வு செய்து கார்ட்டூன் படங்களைக் கொடுத்து ஆய்வு செய்யப்பட்டது. அவர்களின் மூளையில் ஏற்படும் மாற்றங்களும் கண் காணிக்கப்பட்டன.

கார்ட்டூன் படத்தில் இருந்த வசனம் அவர்களின் சிந்தனையைத் தூண்டி சிரிப்பை வரவழைத்தது. இதில் பெண்கள் நீண்ட நேரம் சிரித்தபடி இருந்தனர்.

இதற்கு அவர்களின் மூளையில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாகும். அதாவது பெண்களின் மூளையின் கார்டெக்ஸ் பகுதிக்கு அடுத்து இதில் முக்கிய பங்காற்றுகிறது. அவர்களின் மூளை விவேகமாக செயல்படுவதுடன் அதிக எதிர்பார்ப்பின்றி இருக்கிறது. எனவே இயல்பான ஜோக்குகள் கூட அவர்களுக்கு விசேஷமாகத் தெரிகின்றன. இதனால் எளிதில் சிரிப்பைத் தூண்டி விடுகிறது.

பெண்களின் சிரிப்பானது உறவை வளர்க்கும் விதமாகவும், பிறரை நோகச் செய்யாமல் இருக்கும் வகையிலும் அமைகிறது என்கிறது ஆய்வு. பிறர் நோகாமல் சிரியுங்கள் நோயின்றி வாழுங்கள்! *

# செக்ஸ் வாழ்க்கை 70 இல் முடிகிறது!



ஆரோக்கியமான உடல்நிலை உள்ளவர்களுக்கு 70 வயது வரை செக்ஸ் உணர்வு இருப்பதாக ஒரு ஆய்வு முடிவை மேற்கோள் காட்டி பிரிட்டிஷ் மெடிகல் ஜேர்னல் செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்காவின் சிகாக்கோ பல்கலைக் கழகத்தின் மகப்பேறு மருந்தியல் பிரிவின் ஸ்டேசி டெஸ்லர் லிண்டாவ் தலைமையிலான குழுவினர் வயதான ஆண் மற்றும் பெண்களின் செக்ஸ் உணர்வு குறித்து வெவ்வேறு ஆய்வுகளை நடத்தினர். 1995, 96 இல் 25 முதல் 74 வயதுக்குட்பட்ட 3000 ஆண், பெண்களிடமும், 2005, 06 இல் 57 முதல் 85 வயதுடைய 3000 ஆண், பெண்களிடமும் தகவல்கள் திரட்டப்பட்டன. இதன் முடிவுகள் வருமாறு:

பொதுவாக, முதுமைக் காலத்தில் ஆண்களுக்கு பெண்களைவிட செக்ஸ் உணர்வு அதிகம் என்பது ஆய்வில் தெரிய வந்துள்ளது. மேலும், ஆரோக்கியமான உடல்நிலை உள்ளவர்களுக்கு 70 வயது வரை செக்ஸ் உணர்வு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. சராசரியாக 30 வயதுடைய ஆண்கள் மேலும் 35 ஆண்டுகள் வரையும் அதே வயதுள்ள பெண்கள் 31 ஆண்டுகள் வரையும் செக்ஸில் ஈடுபாடு காட்ட முடியும் என கூறப்பட்டுள்ளது. 55 வயதான ஆண்கள் மேலும் 15 ஆண்டுகளுக்கு அதாவது 70 வயது வரை செக்ஸில் ஈடுபட முடியும் என தெரிவித்துள்ளனர். *



இலங்கைக்கான

அபிவிருத்தி தசாப்தத்தின் ஆரம்பம்

இலங்கை மத்திய வங்கி சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் அபிவிருத்திக்காக சிறப்புக் கொடுகடன் நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்திருக்கிறது

"சௌபாக்யா"


- சிறப்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மையாளர்களுக்கானது
- அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளை மீள தொழிற்படுத்துவதற்கு ரூ.20 மில்லியன் வரையான குறுங்கால நடுத்தரகால கடன் வசதிகள் கிடைக்கத்தக்கதாகவுள்ளன
- புதிதாக சிறிய தொழில் முயற்சியொன்றினை ஆரம்பிப்பதற்கு அல்லது ஏற்கனவேயுள்ள தொழில் முயற்சியினை விரிவாக்குவதற்கு ரூ.500,000 வரை
- இத்திட்டத்தின் கீழ் மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்பட்ட அனைத்து வர்த்தக வங்கிகளும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களாக பணியாற்றும்



மேலதிக விபரங்களுக்கு

பணிப்பாளர்,
பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1
தொலைபேசி: 2477437 / 2477437
தொலைநகல்: 2477731 / 2477734

யுத்தம் நடைபெற்ற நாட்களில் வன்னியில் எவ்வளவோ சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றை கதை வடிவில் தற்போது பலர் சுடர் ஒளி வார இதழுக்கு எழுதிக் கொண்டிருக்கின்றனர். 'என்னுயிர்க் குழந்தை', 'மடியில் உறங்கினான்' 'அகல்யா என் குழந்தை' ஆகிய உண்மைக் கதைகள் ஏற்கனவே பிரசுரமாகி உள்ளன. இந்தத் வரிசையில் தற்போது இடம் பெறுவது 'இரத்தக் கஞ்சி'.




யோ. புரட்சி

பின்னிரவு 2.00 மணி.

கொஞ்ச நேரத்திற்கு முன்பு முள்ளி வாய்க்கால் கப்பலடியில் இருந்த பிரதீபனும் மனைவி ஜெயமாலினியும் இப்போது ஓட்டமும் நடையுமாக வந்து நந்திக்கடற்கரையோரத்தின் தில்லை மரங்களும், விடத்தல் மரங்களும் நிறைந்த முட்பற்றைப் பகுதியிலே தஞ்சம் அடைகிறார்கள். கப்பலடியில் எவருமே எதிர்பாராத வகையில் யுத்தத்தின் எதிரொலிகள் கேட்டன. துப்பாக்கி ரவைகள் எவரையும் நகரமுடியாதவாறு வேலியிட்டபோதும் விழுந்து படுப்பதும், எழுந்து ஓடுவதுமாக பயணித்து இங்கு வந்து விட்டார்கள். சிறிய உடைமைப் பையை தவிர கையிலே ஏதும் இல்லை.

''மாலினி இன்னும் கொஞ்ச நேரம் தானே. பிறகு விடிஞ்சிரும். பிறகு அங்க இஞ்ச திரிஞ்சு சரி ஒரு தறப்பாள் எடுப்பம். யோசிக்காதையுங்கோ.'' ஜெயமாலினிக்கு ஆறுதல் சொன்னான் பிரதீபன்.

அவர்கள் மட்டுமல்ல. அந்த இடம் முழுவதும் இப்போது நூற்றுக்கணக்கான குடும்பங்கள் குவிந்து விட்டன. சிலர் தரப்பாள் கூடாரங்கள் கொண்டு வந்திருந்தார்கள். பலர் எதுவுமே இல்லாமல் வந்திருந்தார்கள். அந்த இடத்திலும் ஒரு பனை உயரத்தில் துப்பாக்கி ரவைகள் பாய்ந்து கொண்டு இருந்தன. அதைவிட வேறு இடமும் கிடையாது. அந்தப் பகுதியிலே ஏற்கனவே இரண்டொரு நாட்களுக்கு முன் வந்தவர்கள் மலம் கழிக்க பயன்படுத்திய அந்த முட்கள் நிறைந்த பற்றைகளில் தான் இப்போது வந்தவர்கள் தஞ்சம்.

தான் கொண்டு வந்த உடைமைப் பையை பிரதீபன் திறக்கிறான். அதில் ஒரு போர்வை இருந்தது. ஒரு தடியை எடுத்து இந்த இடத்தை சுத்தம் செய்கிறான். பின்பு போர்வையை அந்த இடத்திலே விரித்து விடுகிறான். ஜெயமாலினி எட்டு மாதக் கர்ப்பிணி. அவள் நித்திரைமுழித்து இருக்கக் கூடாது. அதை விட இப்போது ஓடி வந்ததில் அவள் நன்றாகவே சோர்ந்து இருந்தாள்.

''இதில் படுங்கோ மாலினி. உங்களுக்கு ஏலாமல் இருக்கும். எனக்கு நித்திரை வரயில்ல....'' பரிவோடு மாலினிக்கு சொன்னான் பிரதீபன். அவள் பாவம். என்னதான் செய்வாள். அந்த போர்வையிலே மெதுவாகச் சரிந்தாள். அப்போது போர்வையின் கீழிருந்து போர்வையூடே தன் மேனியில் குத்திய முட்களையும், சிறு குச்சிகளையும் எடுத்து எறிந்த படியே அயர்ந்து விட்டாள். சிலர் அந்த இரவில் பதுங்கு குழி வெட்டிக் கொண்டிருந்தார்கள். மண் வெட்டும் சத்தம் தவிர வேறு எந்த சத்தமும் இல்லை. பிரதீபனும், ஜெய மாலினியும் வவுனியா மாவட்ட கனக ராயன் குளத்தில் வாழ்ந்தவர்கள். யுத்தம் அங்கே துரத்திய போது ஓடத் தொடங்கியவர்கள். ஒவ்வொரு இடத்திலும் ஆகக்கூடியது இருபது நாள் வாழ்வு. இது அவர்களின் இருபத்தியோராவது இடம்.

அந்த இரவின் அமைதியிலும் ''திரேசா .......... திரேசா .........'' என அழுது கொண்டிருந்தது ஒரு குரல். அது யாருடைய குரல் என பிரதீபனுக்கு புரிய வில்லை. சற்று நகர்ந்து சென்று பார்த்தான். அப்போதுதான் அது யாரென புரிந்தது.

அது கணபதி அண்ணையின் குரல்.

''பாரடா பிரதீபா ... நா.... என்னடா செய்வேன்''

''என்ன ... என்ன ... கணபதி அண்ணை''

''ஷெல் விழேக்க கப்பலடியில பங்கருக்கு வெளியேதான்டா படுத்துக் கிடந்தம். மனிசியும், புள்ளையும் அதிலே செத்திட்டினமடா. எனக்கு தொடையில காயம். உடலைக்கூட எடுக்கவில்ல. அங்க அப்படியே விட்டிட்டு வந்திட்டன்.'' கத்திக் கதறி கணபதி அண்ணா சொன்னபோது அவரை அணைத்துக்கொண்டான் பிரதீபன். றெட்பானா வள்ளுவர் புரத்தில் பிரதீபன் இடம் பெயர்ந்து இருந்தபோது அறிமுகமானவர் தான் கணபதி அண்ணா. அவரின் மனைவி திரேசாவும், ஒரே பிள்ளையான அன்ரனியும் கொஞ்ச நேரத்திற்கு முன் கப்பலடியில் வீழ்ந்த ஷெல்லில் இறந்திருக்கிறார்கள். ''கணபதி அண்ணை வாங்கோ... அந்த ஈச்சமர கூடலோடதான் இருக்கிறம். வாங்கோ அண்ணை அந்த இடத்துக்குப் போவோம்.'' அவரை தன் கையோடு அணைத்து தனது இடத்துக்கு கூட்டிச் சென்றான் பிரதீபன். அவரின் வலது கால் தொடையில் ஷெல் தாக்கிய காயம். உடுத்திருந்த உடையைத் தவிர அவரிடம் வேறு எதுவும் இல்லை.

அதிகாலை 6.00 மணி.

அடுத்த கட்டம் என்ன செய்வது என்பதை சிந்திக்க முடியாத நிலை. முதலில் நந்திக்கடற் கரை ஓரம் சென்று காலைக்கடன்களை முடித்த பின்பு மீண்டும் அதே ஈச்ச மர கூடலருகே வந்தார்கள். மெதுவாக வெயில் ஏறுகிறது. பதுங்கு குழி அமைக்க மண்வெட்டி இல்லை. கூடாரம் அமைக்க தறப்பாள் இல்லை. சுடுநீர் வைக்க பாத்திரம் இல்லை. ஒரு கிலோ சீனி மூவாயிரத்து ஐநூறு போகிறது. தன்னிடம் இருந்த கடைசிப்பணம் இருநூறு ரூபாயில் ஐம்பது கிராம் சீனி வாங்கினான் பிரதீபன். பக்கத்து கூடாரத்துள் இருந்த தெரிந்த ஒருவரிடம் சீனியை கொடுத்து தேநீர் பெற்று அருந்தினார்கள்.

''இஞ்சே அப்பா ...... சாப்பாட்டுக்கு என்னப்பா செய்கிறது?'' பிரதீபனிடம் கேட்டாள் மாலினி.

''அது தான் நானும் யோசிக்கிறன்''

''அந்த ஆலமரத்தடியில் வைச்சு பதினொரு மணிக்கு கஞ்சி குடுப்பினமாம். யாரிட்டையா வது ஒரு கோப்பை வாங்கி கஞ்சி எடுத்தால் சரி; ஒரு மாதிரி மத்தியானச் சாப்பாட்டைச் சமாளிக்கலாம்.''

''ஓ ..... மாலினி ....... அதுக்கு இப்பவே போய் லைனில் நிற்க வேணும். அப்பதான் எடுக்கலாம். நான் இதில யாரிட்ட சரி ஒரு கோப்பை வாங்கி வாறன். கணபதி அண்ணையை நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கோ''

இதற்கிடையில் அடுத்த ஒரு திட்டம் தீட்டினார்கள். இரவு விரித்துப் படுத்த அந்த போர்வையை ஒரு சிறிய விடத்தல் மரத்தோடும், தில்லை மரத்தோடும் இழுத்துக் கட்டி ஒரு சிறிய நிழல் ஒழுங்கினை செய்து கொண்டார்கள். அந்த நிழலில் தான் மாலினியும் கணபதி அண்ணாவும் இருக்கிறார்கள். ''மாலினி, கணபதி அண்ணை ..... ஷெல்லும் வந்து விழுகுது ரவுன்ஸுகளும் வருகுது. எழும்பி திரியாதையுங்கோ. பங்கரும் இல்ல. அங்க பாக்கிறீங்கதானே! அந்த பனையில இப்ப ரெண்டு ரவுன்ஸ் வந்து பட்டது....'' என்று பிரதீபன் சொல்ல ''எங்களுக்குப் பிரச்சினை இல்லை. நீ கவனமாப் போ. ஷெல்லுகள் விழுந்தா வேகமா கீழ விழுந்து படுத்திரு.'' என்று ஆலாசனை சொன்னார் கணபதி அண்ணா. இப்போது மாலினி கேட்டாள். ''இஞ்சே அப்பா.... கொஞ்ச தூரம் தள்ளிப் போனால் ஈச்ச மரங்கள் நிக்குதாம். யாரிட்டையாவது கத்தி வேண்டி ஈச்சங் குருத்து வெட்டி தந்திட்டுப் போங்களன் பசிக்குது.....'' மாலினி அவனிடம் சின்னப்பிள்ளை போல கேட்டாள்.

அங்கே எந்த வளர்ந்த ஈச்ச மரங்களையும் காண்பது அரிது. உணவு நெருக்கடியால் பலரும் அதை வெட்டி அந்த குருத்துக்களை உண்டார்கள். மாலினி குருத்து கேட்டதும் பக்கத்து கூடாரத்துள் இருந்த இராகுலனையும் கூட்டிக்கொண்டு குருத்து வெட்டப் போனான் பிரதீபன். இராகுலனின் வீட்டிலும் அரிசி இல்லாததால் அவனும் தன் பிள்ளைகளுக்கு ஈச்சங் குருத்து வெட்ட புறப்படுகிறான். போன இடத்திலும் துப்பாக்கி ரவைகள். தூரத்தே ஷெல் வீழ்ந்து கரும்புகை கிளம்புகிறது. அங்கே ஈச்ச மரங்களில் குருத்துக்கள் இல்லை. எல்லாம் ஏற்கனவே வெட்டப்பட்டு இருந்தன. தேடித்தேடி பார்த்தபோது இவர்களின் அதிஷ்டம் இரண்டு ஈச்சமரங்கள் கண்ணில் தென்பட்டன. அதில் குருத்து வெட்டி எடுத்தார்கள். ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒவ்வொரு குருத்து. எட்டு மாதக் கர்ப்பிணியான மாலினிக்கும் காயப்பட்ட கணபதி அண்ணைக்கும் அதுதான் காலை உணவு. சின்னக் குருத்து அதுதான் கிடைத்தது. என்ன செய்வது.

அந்தப் பகுதியிலே தேடிப் பார்த்த போது எந்த ஆட்களிடமும் கோப்பை பெற முடியவில்லை. எல்லோரும் பாத்திரங்களை விட்டு விட்டுத்தான் வந்திருக்கிறார்கள். சிலர் கொண்டு வந்த பாத்திரங்களை கஞ்சி எடுக்க கொண்டு போய் விட்டார்கள். இப்போ கஞ்சி வாங்க என்ன செய்வது? பிரதீபனும், இராகுலனும் சிறிய பனை ஓலை இரண்டை வெட்டி 'பிளா' செய்தார்கள். கள் குடிப்பது பிளாவில் தான். இப்போது கஞ்சி எடுப்பதற்கு.

பிரதீபனும், இராகுலனும் கஞ்சி வாங்கும் இடத்தை அண்மித்த போது, சிறுவர், பெரியோர், பெண்கள் என நூற்றுக் கணக்கானோர் அந்த வெயிலில் வரிசையில் கஞ்சிக்காய் நிற்கிறார்கள். இவர்கள் எப்படியும் நானூறாவது ஆட்களாகத் தான் இருப்பார்கள். இதை விட்டால் வேறு வழியில்லை. அந்த வரிசையோடு தங்களையும் இணைத்துக் கொண்டார்கள். இந்த கஞ்சிதான் இன்றைய சீவியம். இப்போது மதிய கஞ்சி வாங்கினால் இனி நாளை தான் அடுத்த கஞ்சி. ஈச்சங் குருத்து இருந்தால் அதனோடு சீவியம் போய்விடும்.

'கஞ்சி வாங்கிவிட்டு போனதும் யாரிடமாவது மண்வெட்டி வாங்கி பங்கர் ஒன்று வெட்ட வேண்டும்' என மனதுள் நினைத்தான் பிரதீபன். கஞ்சி பெறும் இடத்தில் இருந்து கொஞ்ச தூரத்தில் ஷெல்கள் வீழ்ந்து கொண்டிருந்தன ஒவ்வொரு ஷெல் சத்தத்துக்கும் நூற்றுக்கணக் கானோர் கீழே படுப்பதும் எழுவதுமாக இருந்தனர். இடையிடையே சிறு சிதறல்கள் எங்கள் பக்கமும் கூவியபடி வருகின்றன. தூரத்தே ஒரு தறப்பாள் கொட்டகை மீது ஷெல் வீழ்ந்ததில் தறப்பாளின் வெள்ளை நிற துண்டுகள் மேலே தூக்கியெறிப்படுவது இங்கிருந்து பார்க்கும்போதே தெரிகிறது. கூடவே அவலக்குரல்கள். காயப்பட்ட சிறு பிள்ளையை ஒருவர் தூக்கிக் கொண்டு ஓடுகிறார். ''வேகமா கஞ்சிய தந்தா எடுத்துக்கொண்டு போயிரலாம் இராகுலன்'' என்றான் பிரதீபன்.

நேரம் 11.45

முன்னே கஞ்சி கொடுக்கிறார் கள். இருபது நிமிடத்தில் இவர்களின் முறை வந்து விடும். அளந்து தான் கஞ்சி கொடுத்தார் கள். தங்களின் கஞ்சிக்காக அங்கே குடும்பத்தவர்கள் காத்துக் கொண்டு இருப்பார் கள் என்பதால் பிரதீபனும், இராகு லனும் கஞ்சிய வாங்கிக் கொண்டு வேகமாக போய்க் கொண்டிருக்கிறார்கள்.

குடியிருக்கும் இடத்தருகே அவர்கள் இருவரும் வந்து விட்டார்கள். இராகுலன் தனது இடம் போகிறான். பிரதீபன் போர்வையினால் அமைத்த தனது இடம் போகிறான். அவனைக் கண்டதும் ஜெயமாலினி எழுந்து விட்டாள். ''மாலினி ........ மாலினி ........ எனக்கு பிரச்சினை இல்ல. உங்கட நிலைமையில பசி கிடக்கக் கூடாது. இந்தாங்கோ குடியுங்கோ. கணபதி அண்ணை குடியுங்கோ. நேற்று சாப்பிட்டதுக்கு சாப்பிட்டிருக்க மாட்டியள்'' என சொல்லியவாறு பிரதீபன் கஞ்சியை மாலினியிடம் நீட்டும்போது பெரிதாக ஓர் சத்தம். பளீர் என வெளிச்சம் கரும்புகை சூழ்கிறது. கந்தக மணம். எதிர்பாராத வேளை அவ்விடத்தில் வீழ்ந்த ஷெல்லினால் பிரதீபனுக்கு இடது கால் தொடையில் பலத்த காயம். குருதி பாய்கிறது. கணபதி அண்ணாவுக்கு நெஞ்சில் பெரியதோர் ஷெல் சிதறல் பட்டதால் அவர் அவ்விடத்திலேயே உயிர் துறக்கிறார். இன்னும் பிரதீபன் சுய நினைவு இழக்கவில்லை. புகை மூட்டத்தினூடு ஜெயமாலினியை பார்க்கிறான். '' மா....லி...னி ம்..... மா....லி.....னி'' என அவன் வாய் அசைகிறது. மாலினியின் உடல் எல்லாம் குருதி. சிதறிய கஞ்சி செந்நிறமாய் அவள் வாயில் கிடக்கிறது. மாலினி இனி எழ மாட்டாள். பிரதீபனை விட்டு அவள் நிரந்தரமாய் போய்விட்டாள். அவள் வயிற்றிலே ஷெல் சிதறல். யாரோ வந்து காயப்பட்ட பிரதீபனை தூக்குகிறார்கள்.

இப்போ பிரதீபன் முஸ்லிம் மகா வித்தியாலய புனர் வாழ்வு நிலையத்தில் பழைய நினைவுகளில் மூழ்கிக் கிடக்கிறான். ''பிரதீபன்'' என நண்பன் யோகராசா அழைக்க பிரதீபன் கண்ணீருடனே பார்க்கிறான் யோகராசாவை.


இறைவா நிம்மதி கொடு.

(முற்றும்)

# நரியும் எலிகளும்

இளஞ்சுடர் — தயாரிப்பு: தினா

புத்தாக்கம்: கே.கான்



வனதேவதைக் கதை

# தங்க வாத்து

ஓர் இளைஞன் தனது பெற்றோர்களுடனும் இரு சகோதரர்களுடனும் காட்டில் வாழ்ந்து வந்தான். அவனுடைய பெயர் டம்லிங். குடும்பத்தவர்கள் எல்லோரும் அவனை ஒரு முட்டாள் என்றே நினைத்தார்கள். அவர்கள் அவனோடு இரக்கமற்ற முறையில் நடந்து கொண்டார்கள்.

ஒரு நாள் மூத்த சகோதரன் தனது தாயை நோக்கி, ''அம்மா, எங்களுக்கு எரிப்பதற்கு இன்னும் விறகு தேவைப்படுகிறது; காட்டுக்குச் சென்று கொஞ்சம் விறகு வெட்டி வருகிறேனே'' என்றான். ''நீ ரொம்ப நல்ல பிள்ளையாக இருக்கிறாயே! ஒரே நிமிடம் பொறு ; உண்பதற்கும் குடிப்பதற்கும் ஏதாவது தருகிறேன், எடுத்துக் கொண்டு போ'' என்று கூறிய அவனுடைய தாய், ஒரு போத்தல் வைனையும் வேகவைத்த இறைச்சித் துண்டு ஒன்றையும் ஓர் உறையில் போட்டுக் கொடுத்தாள்.

மூத்த சகோதரன் காடெல்லாம் அலைந்து திரிந்தான். கடைசியில் பட்டுப்போன மரமொன்றைக் கண்டான்.

''இது நல்லதொரு மரம்; விறகு வைரமாகவும் காய்ந்தும் இருக்கிறது. நன்றாக எரியும்'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

மரத்தை வெட்டி வீழ்த்த முன்னர் நிலத்திலே அமர்ந்து இறைச்சித்துண்டையும், வைன் போத்தலையும் உறையிலிருந்து எடுத்து சாப்பிட ஆயத்தமானான்.

அப்போது ஒரு சிறிய கிழவன் வந்தான். ''இளைஞனே, வணக்கம். எனக்குச் சிறியதொரு இறைச்சித் துண்டும் கொஞ்சம் வைனும் தருவாயா? பசியாக இருக்கிறது'' என்றான். அதற்கு அந்த இளைஞன், ''இறைச்சித் துண்டில் ஒரு பகுதியும் தரவேண்டும்.... வைன் கொஞ்சமும் தரவேண்டும்..ஓ... முடியாது. எனக்கே இது போதாது... போய் விடு'' என்றான்.

சிறிய கிழவன் ஒன்றும் பேசாமல் காட்டுக்குள் போய்விட்டான்.

மூத்த சகோதரன் தனது கோடரியால் காய்ந்து போன மரத்தை வெட்ட ஆரம்பித்தான். ஒரு முறை வெட்டினான். இரண்டாம் முறை வெட்டினான்; மூன்றாம் முறையும் வெட்டினான். அதன் பிறகு அவன் கையில் விழுந்தது வெட்டு. காயம் ஆழமானதாக இருந்தது. விறகு எதுவுமின்றி அவன் வீடு திரும்ப வேண்டியவனானான்.

அடுத்து இரண்டாவது சகோதரன் விறகு வெட்டச் சென்றான். அவனுடைய தாய் அவனுக்கும் இறைச்சியும் வைனும் கொடுத்து அனுப்பினாள். அவனும் பட்டுப்போன அதே மரத்தடியை வந்தடைந்தான். மீண்டும் அந்தச் சிறிய கிழவன் அந்த இடத்துக்கு வந்தான். அவன் அந்த இளைஞனைப் பார்த்து, ''தயவு செய்து எனக்கு உண்பதற்கும் குடிப்பதற்கும் ஏதாவது தருவாயா?'' என்று கேட்டான். ''நான் உனக்குத் தந்தால் எனக்குக் குறைந்து விடும் ; போ, போ'' என்று விரட்டினான். கிழவன் எதுவும் பேசவில்லை; காட்டுக்குள் போய்விட்டான்.

அதன் பிறகு இரண்டாவது சகோதரன் செத்த மரத்தைக் கோடரியால் வெட்டத் தொடங்கினான். ஒரு முறை வெட்டினான். இரண்டாம் முறை வெட்டினான் அத்தோடு அவனுடைய காலில் வெட்டு விழுந்தது. காயம் ஆழமானதாக இருந்தது. அவனும் விறகு எதுவுமின்றி வெறுங்கையோடு வீடுதிரும்ப வேண்டியதாயிற்று.

அப்போது ''அம்மா, நான் காட்டுக்குச் சென்று விறகு வெட்டிக் கொண்டு வரட்டுமா?'' என்று டம்லிங் கேட்டான்.

''அடே முட்டாள்! உனது சகோதரர்கள் நன்றாக விறகு வெட்டக் கூடியவர்கள். அவர்கள் தங்களைத் தங்களே காயப்படுத்தி கொண்டு திரும்பி வந்து விட்டார்கள். அவர்களை விட நன்றாக உன்னால் செய்ய முடியுமென்று நினைக்கின்றாயா? என்று கேட்டார் தந்தை.

டம்லிங் மீண்டும் மீண்டும் தகப்பனை வற்புறுத்திக் கொண்டிருந்தான். கடைசியில் தகப்பனும் ''நீ விரும்பியப்படி செய். நீயும் உன்னைக் காயப்படுத்திக் கொள்வாய் என்று தான் நினைக்கிறேன்.அது உனக்கு ஒரு பாடமாக இருக்கும்'' என்றார்.

டம்லிங் தனது தாயாரிடம் வைனும் இறைச்சித் துண்டும் தருமாறு கேட்டான். ஆனால், அவள் காய்ந்த பாணையும், புளித்த பாலையும் கொடுத்தாள்.

அவனும் அதே காய்ந்த மரத்தடியைச் சென்றடைந்தான். அதே சிறிய கிழவனை அவனும் சந்தித்தான்.

''எனக்குப் பசியாகவும் தாகமாகவும் இருக்கிறது. அதனால், தயவுசெய்து உண்பதற்கும் குடிப்பதற்கும் ஏதாவது தரமுடியுமா?'' என்று கேட்டான் கிழவன்.

''காய்ந்த பாணும் புளித்த பால் கொஞ்சமும் தான் என்னிடம் உண்டு. இது நல்லதென்று நீங்கள் நினைத்தால் நாம் இருவரும் ஒன்றாக அமர்ந்து உண்போம்''. என்றான்.


சிறிய கிழவன் மகிழ்ச்சியடைந்தான். செத்த மரத்தடியில் இருவரும் அமர்ந்து கொண்டனர்.

டம்லிங் காய்ந்த பாணை வெளியே எடுத்த போது பேராச்சரியமடைந்தான். அது பதப்படுத்தப்பட்ட பெரியதொரு இறைச்சித் துண்டாக மாறியிருந்தது. புளித்த பாலை வெளியே எடுத்த போது அவன் அடைந்த ஆச்சரியத்துக்கு அளவில்லை. டம்லினும் சிறிய கிழவனும் இறைச்சியைத் தின்று வைனைக் குடித்தனர்.

அதன் பிறகு கிழவன் அவனைப் பார்த்து'' நீ என் மீது இரக்கம் காட்டினாய். நீ எனக்குத் தந்தவற்றுக்குப் பதிலாக நானும் உனக்கு ஒரு பொருள் தருவேன். இந்த மரத்தை வெட்டி முடிந்த பிறகு அதனுடைய வேர் இருக்கின்ற இடத்தை அவதானித்துப்பார். அங்கே அரியதொரு பொருள் இருக்கும்; அது உனக்குத் தான்'' என்று கூறிவிட்டு காட்டினுள் சென்று மறைந்தான்.

டம்லிங் எழுந்து வேலை செய்ய ஆரம்பித்தான். தனது கோடரியால் ஒரேயொரு முறை மரத்தை ஓங்கிவெட்டினான். அவ்வளவுதான். மரம் விழுந்து விட்டது! மரவேரின் கீழ் நிலத்திலே ஒரு துளை இருப்பது தெரிந்தது.


(தொடரும்)



# இளஞ்சுடர்

தயாரிப்பு : தினா

காற்றில் பறந்து போன முயலாரின் தொப்பியைக் கண்டுபிடிக்க வழிகாட்டுங்கள்



## வர்ணம் தீட்டுங்கள்



## நத்தை



நத்தை வரேன் நத்தை வரேன்
நகர்ந்து போங்களேன்-என்னுள்
வித்தை இங்கே ஒன்றும் இல்லை
விலகிப் போங்களேன்!

ஊசி மூக்கை நீட்டி நீட்டி
ஊர்ந்து போகிறேன்-நானும்
காசி சென்று கங்கை நீரில்
குளிக்கப் போகிறேன்!

அத்தை வீடு தூர மில்லை
அங்கும் போகிறேன்-பயண
மெத்தை ஒன்றை முதுகில் சுமந்தே
மெல்லப் போகிறேன்!

பாதை வழியே பார்த்துப் பார்த்துப்
பயந்து போகிறேன்-சிறுவர்
வேதனையாய் விரட்டும் போது
வேர்த்துப் போகிறேன்!

தொல்லை வந்தால் ஆமை போல
சுருங்கிப் போகிறேன்-ஊரின்
எல்லை எப்போ வருமோ என்று
ஏங்கிப் போகிறேன்!

கே. நாகரத்தினம்



# முள்ளிவாய்க்காலும் முள்ளுக்கம்பி வேலியும் 12

**முள்ளிவாய்க்கால்வரை தாம் பட்ட துன்பங்களையும், அதனுடன் முடிவுறாது தொடர்கின்ற முள்ளுக்கம்பிக் கூண்டுச் சுமைகளையும் மனதில் சுமந்தபடி பல லட்சம் பேர் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு கதைகள் பொதிந்துள்ளன. அதை வெளிக்கொண்டுவர எல்லோராலும் முடிவதில்லை. இதனால் அவர்களது துன்பங்கள் அவர்களுக்குள்ளேயே மீண்டும் உறங்கிப் போகின்றன. இவற்றை வெளிக்கொணர வேண்டும் என்பதற்காக எழுதப்பட்டதுதான் 'முள்ளிவாய்க்காலும் முள்ளுக்கம்பி வேலியும்'. ஈழத் தமிழரின் வரலாற்றில் வேதனைகள், சோகங்கள், மரணங்கள், பிரிவுகள் நிறைந்த வன்னி மக்களின் நெருப்பாற்றுப் பயணம் வரலாற்றுப் பதிவுகளில் கறைபடிந்த அத்தியாயமாகிவிட்டது.**

## உலகமே பார்த்திருக்க... முள்ளிவாய்க்கால் கருகியது; முள்வேலி அவலம் தொடர்கிறது

அனுராதபுர விமானப்படைத் தளத்திற்குள் சென்று வெடித்தவர்களையும், மீண்டுமொரு முறை பறந்து குண்டுபோட்டு திரும்பி வந்தவர்களையும், சாவிலும் சரித்திரம் படைக்க வேண்டுமென்று மீண்டும் கொழும்பு சென்று வெடித்துச் சிதறிப்போன இரு விமானங்களையும், அதோடு உறங்கிப்போன தமிழனின் வான்பறப்பையும் எப்படி மறப்பது? ஆட்லறியைக் கொண்டு தாக்கினான் எதிரி எம் தலைமீது, எங்கள் வீடுமீது, எங்கள் பாடசாலை மீது. நாங்கள் செத்துச் செத்து மடிந்தோம். யாரும் நிறுத்தச் சொல்லவில்லை. உலகம் பார்த்துக் கொண்டேயிருந்தது. தமிழக முதலமைச்சரால் பிரதமருக்கு கடிதத்தையும், ஐ.நா செயலாளரினால் கவலையையுமே தெரிவிக்க முடிந்தது. ஆனால் எங்கள் பிள்ளைகள் பதில் தாக்குதல்கள் கொடுத்தார்கள். அதே ஆட்லறியால் பூநகரியிலிருந்து பலாலிக்கும், மன்னாரிலிருந்து தள்ளாடிக்கும், புளியங்குளத்திலிருந்து ஜோசப் முகாமுக்கும், என் சம்பூரிலிருந்து திருகோணமலை தளத்திற்கும் குண்டுகள் போட்டார்கள். அப்போது நீங்களும் நாங்களும் தான் சந்தோஷப்பட்டோம், குண்டு போட்டவன் குண்டால் சாகிறான் என்று.

இந்த சாதனைக்குள்ளும் சோதனைகள் எங்கள் பிள்ளைகளின் புதைகுழிகளும் கூடின. எத்தனை ஆசைகளுடன் பாலூட்டி சீராட்டி பாசம் வைத்து பல கற்பனைகளுடன் வளர்த்து வந்த எம் பிள்ளைகள் எம் கண் முன்னே வீழ்வதை, வீழ்ந்ததை எப்படி மறப்பது? அவர்களை ஒருசேர தீபமேற்றி நினைவு கொள்ளும் அந்த நவ-27 ஐயும் எப்படி மறப்பது. பல சோகங்களின் மத்தியிலும் எல்லாதத் தடைகளையும் உடைத் தெறிந்தபடி தமிழன் எழுந்தான். உயர்ந்து நின்றான்.

யார் கண்பட்டதோ தெரியவில்லை உடல்கள் பிணமாக விழ விழ எங்கள் வீடுகள் எரிய எரிய எங்கள் உறவுகளை இழந்தபடி, பிரிந்தபடி, ஓய்வின்றி, உறக்கமின்றி, உணவின்றி ஓடினோம் முள்ளிவாய்க்கால் வரை.

அதுவரை எதை எதையோ எல்லாம் இழந்து விட்டோம். எதை மறப்பது? எப்படி மறப்பது? புரண்டு புரண்டு படுக்கிறோம், இரவில் தூக்கமில்லை எல்லாம் கண்முன்னே வந்துபோகின்றன. இதுதான் எங்கள் வாழ்கையின் முடிவா என எண்ணத்தோன்றுகிறது.

எல்லாவற்றையும் இழந்துவிட்ட அநாதைகளா நாங்கள். கம்பிக் கூண்டும் அதற்குள் கையேந்தி உண்பதும் தான் எங்கள் வாழ்க்கையா? அதற்காகவா இவ்வளவையும் இழந்தோம்? இவற்றையெல்லாம் இழந்தபின் கூண்டின் வெளியே இருக்கும் உங்களுடன் நான்கு உரப்பை நிரப்பிய சொத்துடன் வந்து வாழ்வதற்கான உரிமையைத் தான் கோருகின்றோம்.

**-டொமினிக்-**

இந்நிலையில் எப்படி உங்களோடு கை கோத்து புதிய வாழ்க்கையைத் தொடங்க முடியும் என்ற கேள்வி எங்கள் ஒவ்வொருவர் மனதிலும் நாளாந்தம் மீண்டும் மீண்டும் எழுகிறது. விடையின்றி விடிவின்றித் தவிக்கிறோம்.

இது இவ்வாறிருக்க தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி வாழ் மக்கள் என்றும், அரசகட்டுப்பாட்டு பகுதி வாழ்மக்கள் என்றும், புலம்பெயர் வாழ்மக்கள் என்றும், தமிழகத்தில் அடைக்கலம் புகுந்த மக்களென்றும் பிரிக்கப்பட்டு தமிழனின் போராட்ட அரசியல் பலம் குறைக்கப்பட்ட நிலையில் தொடர்ச்சியான அழிவுகளையும், இடம் பெயர்வுகளையும், சிறைவாசத்தையுமே எம்மில் பலர் அனுபவித்து வருகின்றார்கள். அத்தோடு தமிழர்களின் ஆயுதப்போராட்டம் அழிவையும், துன்பத்தையும், துயரையுமே தந்தது என்கிறார்கள் சிலர். அதில் ஓரளவு உண்மையும் இருக்கத்தான் செய்கிறது. நாங்கள்தான் எல்லாவற்றையும் சுமப்பவர்கள். ஆனால் ஒன்றை மட்டும் எல்லோரும் உணர வேண்டும். இரத்தம் சிந்தாமல் ஆயுதம் ஏந்தாமல் சுதந்திரம் என்னும் உன்னத நிலையை எவரும் அடைந்ததாக வரலாறு இல்லை. நாங்களும் அதற்கு விதிவிலக்கல்ல.



அந்த இழப்பும் துயரும் துன்பமும் தோய்ந்த இந்த போராட்டம்தான் எங்களை சுதந்திரத்தின் வாசல்வரை கொண்டுவந்து விட்டிருக்கிறது. இதையாரும் மறுக்க முடியாது. பார் எங்கும் தமிழன் பேச்சு ஒலிக்கிறது. இறுதித் தீர்வுக்காக போராடுவோம். நாங்கள் கூடு கலைந்திட்ட குருவிகளாக திக்கெட்டும் சிதறிப் போனாலும் ஒருமித்த குரலுடன் ஓங்கி ஒலிப்போம். எம்முள் முளைத்து இருக்கின்ற போலிமுகம் கொண்ட அரசியல்வாதிகளையும் தனது கட்சிக்கும், கட்சித் தொண்டர்களுக்கும், அதனுடன் சேர்ந்த அடியாட்களுக்குமென சுயலாப அரசியல் நடத்துபவர்களையும், துரோகத்தனம் இழைத்தோர்களையும் இனம் காண்போம். எங்களுடைய நிலம் ஒவ்வொரு அங்குலம் அங்குலமாக, பறிபோனதும், எம்மவர்கள் படுகொலைசெய்யப்பட்டு அகதி வாழ்க்கையை நாம் தொடரும் போது வெற்றிக்களிப்பிலும், கண்காட்சியிலும், கேக் வெட்டியும், பட்டாசு கொளுத்தியும் மகிழும் பெரும்பான்மை சமூகத்துடன் கைகோத்து முண்டு கொடுத்து வாழ்வோரையும் புறந்தள்ளுவோம். இழந்துவிட்ட, பறிக்கப்பட்ட எமது உரிமைகளை பெற்றுத்தர, இதய சுத்தியுடன் உழைக்கும் தலைவர்களின் கட்சிகளை இனங்கண்டு எம் கையில் தற்போது வழங்கப்பட்டிருக்கும் கடைசி ஆயுதமாம் வாக்களித்தல் எனும் ஆயுதத்தை தேர்தல் காலத்தில் ஒவ்வொருவரும் சரியாகப் பயன்படுத்தி எமது பலத்தைப் பெருக்கிப் புதிய வாழ்விற்கு ஆயத்தப்படுத்துவோம் என நீங்களும் நாங்களும் உறுதியெடுத்துக் கொள்வோம்.

உலகிற்கும் ஐ.நா. சபைக்கும் நாங்கள் அடுத்தது என்ன செய்யவேண்டும்? நாங்கள் அடுத்து என்ன ஆயுதம் வைத்திருக்க வேண்டும்? நாங்கள் அடுத்து யாரைக் கொலை செய்யவேணடும் என்பதை எங்கள் எதிரிதான் தீர்மானிக்கிறான். தமிழரின் போராட்ட வரலாற்றுப் பதிவுகளில் உள்ள சிலவரிகள் தான் இவை. அதற்கமையத்தான் தமிழர்களின் போராட்ட வரலாறு ஏ.கே 47ற்குப் பதில் ஏ.கே 47 என்றும், கொலைக்குப் பதில் கொலை என்றும், விமானத் தாக்குதல்களுக்கு பதில் விமானத்தாக்குதல் அல்லது விமானத்தள அழிப்பென்றும் போராட்டம் நீண்டு சென்று இலங்கைத்தீவே போர்க்களமாக மாறியது.

இந்தநிலையில் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை உலகம் பயங்கரவாதப் போராட்டமாகப் பார்த்து எம்மை ஒதுக்கி தனிமைப்படுத்தியது. அதுவே எம் இனத்தை அழிப்பதற்கான கருவியாக மாறி முள்ளிவாய்க்கால் வரை இருந்ததையெல்லாம் இழந்து, இழந்து வந்து இறுதியாக மெனிக்பாமில் சிறைவைக்கப்பட்டவர்களாக இருக்கிறோம்.

உங்களின் ஒரு பக்கத் தீர்ப்பு ஓர் இனத்தையே அழிவுக்குட்படுத்தி விட்டதை நீங்கள் இப்போதாவது உணர்கிறீர்களா? உங்களால் ஒரு கிழக்கு தீமோரை, ஒரு எரித்திரியாவை, ஒரு கொசோவாவை சுதந்திர நாடாக்க முடிந்தது. ஏன் எங்களை கைவிட்டு விட்டீர்கள்?

உங்கள் கூடாரத்திற்குள் உலக உணவுத் திட்ட உணவை உண்டு வாழ்வதையே எங்களுக்கான சுதந்திரமாக நீங்கள் கருதுகிறீர்களா? நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு நிற்கின்றோம். எங்களையும் வாழ விடுங்கள்-- வாழ வையுங்கள். அடக்குமுறைகளற்ற, அனைத்து உரிமைகளும் பெற்ற ஒரு புதிய உலகிற்குள், முட்கிரீடம் பதித்த நிலையில் இதைத்தான் உங்களிடம் கேட்கிறோம்.

(முற்றும்)

# ரகசியக் கமெராவை பொருத்தியவர் யார்?



சுவாமி நித்யானந்தா

நித்யானந்தா, ரஞ்சிதா விவகாரத்தில் அடுத்தகட்டத்தை நோக்கி தமிழ்நாட்டு ஊடகங்கள் தூக்கத்தைத் தொலைத்துக் கொண்டிருக்க, இதுதொடர்பாக நாள் தோறும் புதிய தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. கைது நடவடிக்கையில் இருந்து நித்யானந்தாவைக் காப்பாற்ற தமிழக, கர்நாடக அரசுகள் முயல்கின்றனவா? என்ற விவாதங்களும் தொடங்கி விட்டன.

**யார் பாதுகாப்பில் லெனின்?**

பெங்களூர் பீடாதி ஆசிரமத்தில் தற்போது இரண்டு பொலீஸ் படைகளை காவலுக்கு நிறுத்தியிருக்கின்றனர் கர்நாடக பொலீஸார்.

எந்தவிதத் தாக்குதலுக்கும் ஆசிரமம் ஆளாகக் கூடாது என கர்நாடக முதல்வர் எடியூரப்பா ரகசிய உத்தரவு போட்டுள்ளார் என்று சொல்கின்றனர் பெங்களூர் பத்திரிகையாளர்கள். தனது விளக்கத்தை வீடியோவில் மட்டுமே அனுப்பிக் கொண்டிருக்கும் நித்யானந்தா, தமிழகத்தில் நடக்கும் பிரச்சினைகளைக் கண்டு கொள்ளாமல் ஹரித்துவாரில் நடக்கும் கும்பமேளாவின் இறுதிக்கட்ட நிகழ்வில் இருக்கிறார். நித்யானந்தாவைச் சிக்க வைத்த தர்மானந்தா எனப்படும் லெனின் தற்போது சென்னையைச் சேர்ந்த முக்கிய வி.ஐ.பி. ஒருவரின் பாதுகாப்பில் இருக்கிறார். லெனினுக்கு முழுப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று கூறிய சென்னை பொலீஸார், தற்போது லெனின் இருக்கும் விவரத்தைச் சொல்ல மறுப்பதுதான் விவகாரத்தை உற்று நோக்க வைக்கிறது.

**நித்யானந்தாவின் இருபால் ஆசை...**

நித்யானந்தாவுக்கு எதிராக லெனின் கூறியுள்ள பல தகவல்கள் மிகவும் பாரதூரமானவை. அவரது அத்தனை கிரிமினல் வேலைகளையும் பொலீஸாரிடம் விவரித்திருக்கிறார் லெனின். இது தொடர்பான விசாரணையில் ஈடுபட்டிருக்கும் உயர் பொலீஸ் அதிகாரி ஒருவர், ''நித்யானந்தா விவகாரத்தில் எங்களுக்கு அடுத்தடுத்து கிடைக்கும் தகவல்கள் அதிர்ச்சியளிக்கின்றன. நித்யானந்தாவின் செக்ஸ் ஆர்வம் எங்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஆண், பெண் என இருபாலரிடமும் உறவு கொள்பவர் நித்யானந்தா. இதுபோன்றபை - செக்ஸுவல் ஆட்கள் சிலரைத்தான் பார்க்க முடியும். ஆசிரமத்தில் இருந்த சுவாமி நித்ய விமலானந்தாவுடனும், ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டிருக்கிறார். இதில், அதிர்ச்சியடைந்த விமலானந்தா ஆசிரமத்தை விட்டே வெளியேறிவிட்டார்.

இதேபோல்,சாமியாரின் செயலாளராக் கடமையாற்றிய நித்ய கோபகா பல முறை நித்யானந்தாவால் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் துன்புறுத்தப்பட்டிருக்கிறார். ''செயலாளர் கோபகா, சதானந்தா, பிராணானந்தா, சச்சிதானந்தா, பக்தானந்தா, ஆத்மானந்தா, ஞானானந்தா, ஆத்ம பரபானந்தா, பி.ஆர்.ஓ சேவானந்தா, சாமியாரின் தம்பி நித்தேஷ்வரானந்தா ஆகியோர் மூலம் நித்யானந்தாவுக்கு விருப்பமான ஆண், பெண் சீடர்கள் அனுப்பப்படுவார்கள் என லெனின் எங்களிடம் கூறியிருக்கிறார். நடிகை ரஞ்சிதா ஒரு வருடத்திற்கு முன்புதான் ஆசிரமத்திற்கு வந்தார். சாமியாரின் அறைக்கு அருகில் உள்ள அறையில் தான் தங்குவார்.

கடந்த ஆண்டு சாமியார் அமெரிக்கா சென்ற போது,ரஞ்சிதாவும் உடன் சென்றார். சாமியாரின் வெளியூர்ப் பயணங்களில் எல்லாம் ரஞ்சிதா சென்றிருக்கிறார் என்று ஆசிரமத்தின் இன்னும் பல ரகசியங்களைக் கொட்டியிருக்கிறார் லெனின்'' என்றார் அந்த அதிகாரி.

**வருகிறார் ராம்ஜெத்மலானி...**

இது தொடர்பாக பத்திரிகையாளரிடம் பேசிய ஆசிரம நிர்வாகி ஒருவர், ''நித்யானந்தாவை கைது நடவடிக்கையில் இருந்து மீட்க முன்பிணை பெறும் வேலைகளில் தீவிரமாக இறங்கியிருக்கிறோம். அவர் மீது லெனின் கொடுத்த புகாரில் உள்ள அனைத்து விவகாரங்களையும் சட்டரீதியாக சமாளிக்க பிரபல மூத்த வழக்கறிஞர் ராம்ஜெத்மலானியிடம் பொறுப்பை ஒப்படைக்க உள்ளோம். இந்த விவகாரத்தால் ஆசிரமத்தில் இருந்து வெளிநாட்டுப் பெண் பக்தைகள் வெளியேறிவிட்டனர். இப்போது ஆசிரமத்தில் இருபது பெண்கள் மட்டும் தான் உள்ளனர். நித்யானந்தா வெளியில் வந்து சட்டரீதியாகப் போராட வேண்டும் என்றுதான் அவரது பக்தர்கள் தொடர்ந்து இ-மெயிலில் கூறி வருகின்றனர்'' என்றார்.

**3 நாள், 72 மணி நேரம்...**

இதற்கிடையே, பெங்களூர் பீடாதி ஆசிரமத்தில் உள்ள நித்யானந்தாவின் படுக்கையறையில் எடுக்கப்பட்ட சல்லாபக் காட்சிகள் அடங்கிய முழு நீள எடிட் செய்யப்படாத வீடியோ காட்சிகளில் ஆபாசமும், அருவருப்பும் நிறையவே இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. தொடர்ந்து மூன்று நாட்கள் அணைக்கப் படாத அந்த ரகசிய கமெராவின் பார்வையில் சாமியாரின் 72 மணி நேர சல்லாபங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இனி சி.டி சுழல்கிறது....



கமெரா இருக்கும் திசையில் ஏதோ ஒன்றை திருப்பும் ரஞ்சிதா....

**டிசம்பர் 23**

2009 டிசம்பர் 23 ஆம் திகதி ரகசிய கமெரா தனது முதல் பணியைத் தொடங்குகிறது. அந்த வீடியோவில் சாமியார் நித்யானந்தா தனது கட்டிலில் படுத்துக் கொண்டு புத்தகம் படிக்கிறார். டி. வி. சேனல்களை மாற்றுகிறார். வருகிறார் ரஞ்சிதா. தொடர்ந்து நாம் ஏற்கனவே பார்த்த காட்சிகள். சேவையின் இறுதிக் கட்டத்தை நெருங்கும் நேரத்தில் இதுவரை வெளிவராத அந்தக் காட்சி வீடியோவில் இடம் பெற்றிருக்கிறது.

ரகசிய கமெராவைத் திருப்பிய நித்யானந்தா..

படுக்கையில் ரஞ்சிதாவுடன் படுத்துக் கொண்டே சாமியார் கமெரா இருந்த பக்கம் கைநீட்டுகிறார். ரஞ்சிதாவிடம் ஏதோ விவரிக்க, ரஞ்சிதா எதையோ நகர்த்த கமெராவின் கோணம் மறுபக்கம் சுழல்கிறது. பின்பு பல மணி நேரங்கள் ஒரே இருட்டு.நாம் யூகித்த வகையில் ஏதோ ஒரு பொருளுக்குள் - சுவாமிப் பொம்மைக்குள்? - ரகசிய கமெராவைப் பொருத்தியிருக்கலாம். அந்த நேரத்தில் அந்தப் பொருள் சாமியாரின் கண்களை உறுத்தியதால் அதை மாற்றி வைக்குமாறு ரஞ்சிதாவிடம் சொல்லியிருக்கலாம். அது ஒரு புத்தக அலமாரி என்பதால் அது பக்திப் புத்தகமாகவோ, கடவுள் படமாகவோ இருந்திருக்கலாம். ஆக, சாமியாருக்குத் தெரியாமல் இதில் ஏதோவொரு பொருளில் தான் ரகசிய கமெரா வைக்கப்பட்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.



நித்யானந்தாவின் செயலாளர் கோபகா...

**டிசம்பர் 24**

ஆனால், மறுநாள் கமெரா மீண்டும் படுக்கையை நோக்கி இருக்கிறது. அந்த நேரத்தில் உள்ளே வருகிறார் நித்யானந்தாவின் தனி உதவியாளர் நித்ய கோபகா. படுக்கையைச் சுத்தம் செய்து விட்டு, சாமியாருக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வந்து அடுக்குகிறார்.அவர் சென்றதும், சாமியார் பிரசன்னமாகிறார். தொடர்ந்து வெள்ளைச் சுடிதாரில் ரஞ்சிதா உள்ளே வருகிறார். விளக்கு அணைக்கப்படுகிறது. படுக்கையில் சாய்கிறார்கள். அந்த மங்கலான விளக்கொளியில் நமக்குத் தெரிந்த அந்தக் காட்சிகள் ஆபாசம்.

**நிர்வாண கோலத்தில் நித்யானந்தா..!**

அந்த நேரத்தில் நித்யானந்தா விளக்கைப் போட தனது உடையைச் சரி செய்து கொண்டே படுக்கையில் இருந்து எழுகிறார் ரஞ்சிதா. சாமியாரின் கூந்த லுக்கு கிரீம் தடவுகிறார். மசாஜ் செய்கிறார். ஆடைகளைக் களைந்தவாறு சாமியார் குளிக்கச் சென்றுவிட, அறையைவிட்டு வெளியேறுகிறார் ரஞ்சிதா. அடுத்த சில நிமிடங்களில் அந்த அதிர்ச்சிக் காட்சியை நாம் காண நேர்ந்தது.

குளித்து முடித்துவிட்டு நிர்வாண கோலத்தில் கமெராவின் பார்வைக்குள் வருகிறார் நித்யானந்தா. ஒருசில விநாடிகளுக்குப் பின் உடைமாற்றச் சென்றுவிடுகிறார். பின்னர் புத்தம்புது காவி உடையை அணிந்து கொண்டு அறையை விட்டு வெளியேறு கிறார். திரும்பவும் அந்த அறைக்குள் நித்ய கோபகா வருகிறார். நித்யானந்தாவின் அறையைச் சுத்தம் செய்கிறார்.

**டிசம்பர் 25**

நித்யானந்தா படுக்கையறைக்குள் வருகிறார். பெரிய புத்தகங்களைப் படிக்கிறார். டி.வி. பார்க்கிறார். டி.வி. திரையில் தமிழ்ச் செய்திகள் ஓடுகின்றன. கருணாநிதியும், ஜெயலலிதாவும் தொலைக்காட்சியில் வந்து போகிறார்கள். நித்யானந்தா அதை ஆர்வமாகப் பார்க்கிறார். திரும்பவும் வெள்ளைச் சுடிதாரில் ரஞ்சிதா ஆஜர். ஏற்கெனவே நாம் பார்த்த மாத்திரை மற்றும் உணவு தரும் காட்சிகள் ஓடுகின்றன. திரும்பவும் விளக்கு அணைக்கப்படுகிறது. இதற்கு அடுத்து வரும் காட்சியொன்றில், நித்யானந்தா படுக்கையில் படுத்துக் கொண்டிருக்க, ரஞ்சிதா கால் அமுக்கிக் கொண்டிருப்பார். அப்போது அந்த அறைக்குள் வரும் ஒரு பெண் சீடர் இரண்டு புத்தகங்களைக் கொடுக்க, அதை வாங்கி சாமியாரிடம் கொடுப்பார் ரஞ்சிதா.

**எப்போதும் பெண்கள் மயம்..!**

எந்தவித சலனமும் இல்லாமல் மிகச் சாதாரணமாக இந்தக் காட்சிகள் வந்து போகின்றன. அப்படியென்றால் சாமியாரின் படுக்கையறைக்குப் பெண்கள் வந்து போவதும், அவருக்குக் கால் அமுக்கி விடுவதும் அங்கே மிக சகஜமாக நடந்து வந்துள்ளதாகத் தெரிகிறது. தப்பித் தவறியும் கூட இந்த மூன்று நாளில் ஒரே ஒரு ஆண் சாமியார் கூட அறைக்கு வரவில்லை. ஏற்கெனவே லெனின் சொன்னதுபோல, பெங்களூர் ஆசிரமத் தில் சாமியாரின் அறைக்குள் நித்யா னந்தா நியமிக்கும் பெண்கள் மட்டுமே போய் வர முடியும். அந்த இடம் எப்போதும் கண்காணிப்பில் இருக்கும். ஆசிரமத்தின் முக்கிய ஆண் நிர்வாகிகள் கூட அங்கே நுழைய முடியாது.

அப்படியென்றால், ஆசிரமத்தில் உள்ள பெண்களால் அல்லது பெண்களின் ஒத்துழைப்போடுதான் சாமியாரின் அந்தரங்கம் படம் பிடிக்கப்பட்டிருக்க வேண்டும். இந்தநிலையில், கமெரா வைக்கப்பட்டிருந்த ஒரு பொருளை சாமியார் அகற்றவும் செய்திருக்கிறார். அப்போதும்கூட அவரது கண்ணில் அந்த கமெரா விழவில்லை. இதிலிருந்தே ரகசிய கமெரா தொழில் நுட்பம் வாய்ந்த நுண்ணிய வகையைச் சேர்ந்தது என அறியலாம். நித்யானந்தாவின் கிருஷ்ண லீலைகளைப் படம் பிடித்த கோபயர் யார் என்பதுதான் ஆச்சரியம்!

இந்த விவகாரத்தை விசாரித்து வரும் பொலீஸ் உயர் அதிகாரி செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், ''நித்யானந்தா தற்போது தலைமறைவாக இருக்கும் இடம் எங்களுக்குத் தெரிந்தாலும், அரசிடம் இருந்து எந்த உத்தரவும் வரவில்லை. கர்நாடக பொலீஸிடம் வழக்கை மாற்றுவதாக அறிவித்தாலும்,அதற்கான எந்த வேலைகளும் இன்னும் தொடங்கவில்லை. அரசிடம் இருந்து கிரீன் சிக்னல் வரும்போது சாமியார் மீதான எங்கள் வளையத்தை இறுக்குவோம்'' என்றார்.

இதனிடைய,நித்யானந்தாவின் பேட்டி என மற்றொரு சி.டி.யும் வெளியாகியிருக்கிறது. கற்பழிப்பு குற்றச்சாட்டு பற்றி கேட்கும்போது, இதுவரை யாரும் புகார் செய்யவில்லை. ஆசிரமத்தின் பெயரைக் கெடுக்கவும் மரியாதையைக் குலைக்கவும் இதையெல்லாம் செய்கிறார்கள் எல்லாம் பொய் என்றார். ஒருவரின் மரணம் பற்றி கேட்டபோது, அதற்கு நித்யானந்தா கருத்துத் தெரிவிக்கையில், 'மாடியில் அமர்ந்து காலாட்டிக் கொண்டிருந்தபோதுதான் அவர் விழுந்து இறந்தார்' என்றார் .

நன்றி : இணையம்

# நாடாளுமன்றத் தேர்தல் : தெரிவின் முன்னாலுள்ள சவால்கள்



அருள் மனோகரன்

ஜனாதிபதித் தேர்தலின் போதிருந்த பரபரப்பையும் எழுச்சியையும் வரவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் காணமுடியவில்லை. சனங்களிடமும் இது குறித்து ஒருவித அக்கறையின்மையான நிலையே தெரிகிறது. ஆனால், இந்தத் தேர்தலில் ஊர்கள் தோறும் வேட்பாளர்கள் உள்ளனர். கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் எல்லாம் தேடித்தேடி இந்த வேட்பாளர்களை ஒவ்வொரு ஊரிலுமிருந்தும்



ஒவ்வொரு தெருவிலிருந்தும் தேர்தலில் இறக்கியிருக்கின்றன.

அளவுக்கு அதிகமான வேட்பாளர்கள், எந்தக் கட்சியிலும் நம்பிக்கை வைக்க முடியாத நிலை, தேர்தலில் நிற்போர் குறித்த அதிருப்திகள் போன்ற பல நியாயமான காரணங்கள் இந்தத் தேர்தல் குறித்து மக்களிடம் அக்கறையின்மையை உருவாக்கியுள்ளன.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இரண்டு முக்கியமான பிரச்சினைகளோடு அவர்கள் இருக்கின்றனர்.

1. நீண்டகால அரசியல் உரிமைப் பிரச்சினை.

2. அகதிகள் விவகாரம், மீள்குடியேற்றம், உயர்பாதுகாப்பு வலயம், பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வு, அபிவிருத்தி, அரசியல் கைதிகளின்



விடுதலை, போராளிகளின் விவகாரம்... என்ற நடைமுறை விசயங்கள்.

இந்த இரண்டு முக்கியமான பிரச்சினைகளுக்கும் தீர்வைக் காணக்கூடிய வல்லமையும் உபாயங்களும் உள்ள தரப்பாக அவர்களால் யாரையும் அடையாளங்காண முடியவில்லை என்பது இங்கே கவனிக்கத்தக்கது.

இதில் அரசாங்கச் சார்புக் கட்சிகளும் அடங்கும். அரசாங்கத்தை எதிர்க்கும் கட்சிகளும் அடங்கும். குறிப்பாக ஈ.பி.டி.பி. அரசாங்கத்தில் நேரடியாகப் பங்கு வகிக்கும் கட்சி என்ற போதும், மக்களின் முன்னாலுள்ள முக்கியமான பிரச்சினைகளுக்கான தீர்வை இது காண்பதில் பல குறைபாடுகளையே வைத்திருக்கிறது.

அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் போது - அரசாங்கத்துடன் ஓர் அங்கமாக இருக்கும் போது - மக்களுக்கு நிறைவேற்ற வேண்டிய பல பொறுப்புகளை நிறைவேற்றியிருக்க வேண்டும். தீர்த்திருக்க வேண்டிய பல பிரச்சினைகளைத் தீர்த்திருக்க வேண்டும்.

ஆனால், இந்த விசயத்தில் அதற்குப் பல சாத்தியங்கள் இருந் தும், அது அவற்றைச் செய்ய வில்லை. குறிப்பாக சில விசயங்களில் இந்தக் கட்சி சிலவற்றை - தென்மராட்சிப் பகுதியில் உயர் பாதுகாப்பு வலய நீக்கம், ஏ 9 வீதி திறப்பு, வேலை வாய்ப்புகள், அகதிகள் மீள் குடியேற்றம் போன்றவற்றை செய்திருந்தா லும் அவை மக்களின் தேவைகளைப் பொறுத்தவரையில் போதாதவை.

எனினும், மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியே தொடர்ந்தும் நீடிக்கப் போவதால், இந்தத் தரப்பை ஆதரித்தால்தான் எதையாவது செய்ய முடியும் எனச் சிலர் கூறுகின்றனர். அரசாங்கத்தைப் பொறுத்தவரை, அது சிங்கள மக்களுக்குச் செய்ய வேண்டிய பலதையும் செய்யவில்லை. அப்படியிருக்கும் போது தமிழர்களுக்கு எத்தளவில் அது நலன்களை நிறைவேற்றும் என வேறு சிலர் கேட்கிறார்கள்.




இதேவேளை, இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில், அதன் தேர்தல் விஞ்ஞாபனமே அதற்கு எதிர்மறையான அம்சத்தைக் கொண்டிருக்கிறது. ''அரசியல் தீர்வுக்கு அரசாங்கம் உடன்படாத பட்சத்தில் மீண்டும் அறப் போராட்டத்தில் குதிப்போம்'' என்ற அதன் அறிவிப்பு மாற்று உபாயங்களில்லாத கடந்தகால அணுகுமுறையுடையதே என சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த அறிவிப்பு மக்களை மீண்டும் அச்சமூட்டும் ஒரு விசயமாகவே தமிழ் மக்களாலும் சிங்கள தரப்பினராலும் நோக்கப்படும் என்றும் இவர்கள் சொல்கின்றனர்.

அத்துடன் மறுபடியும் அறப்போராட்டத்தில் குதிக்கக் கூடிய மக்கள் மன நிலையும் கள நிலையும் உண்டா என்பதைச் சிந்திக்க வேண்டும் என்றும் இவர்கள் கூறுகின்றனர்.

தமிழ் மக்களின் பிரச்சினையைப் பற்றி உலகத்துக்கு மிகத் தெளிவாகத் தெரியும். அவர்களுடைய அபிலாசைகளைப் பற்றியும் தெரியும். தவிர தமிழ் மக்களின் ஒற்றுமையை, விருப்பை எல்லாம் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியும் அதனால் என்னதான் கிடைத்தது என்று வேறு சிலர் கேட்கிறார்கள்.

ஏதாவது புதிய, உருப்படியான திட்டங்களையும் மக்களுக்குப் பயனுள்ள விசயங்களையும் நடைமுறைப்படுத்தினால்தான் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்னால் நிற்பர் என்று சிலர் குறிப்பிடுகின்றனர்.

இத்தகைய அதிர்ச்சிதான் கூட்டமைப்புக்கு முன்னால் பலரைத் தேர்தலில் நிறுத்தியது எனவும், கூட்டமைப்பின் பிளவுக்கான காரணங்கள் கூட இன்னும் சீர்செய்யப்படவில்லை எனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் மக்களின் எந்தப் பிரச்சினைக்கும் இவர்களிடம் தீர்வில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.



அடுத்த தரப்பு தமிழ்த் தேசியத்துக்கான முன்னணியாகும். இது விட்டுக் கொடுப்புகளற்ற, சமரசத்தீர்வுக்குச் செல்லாத அடிப்படையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான அமைப்பாகத் தன்னை அடையாளம் காட்டுகிறது. லட்சியவாதிகள் இதன் பின்னால் அணி திரளக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்ற போதும் இந்த லட்சியத்தை எட்டக்கூடிய வழிமுறைகள் என்ன? அவற்றின் சாத்தியப்பாடு எத்தகையது என்பதில் இந்தக் கட்சி எத்தகைய தெளிவையும் மக்களுக்கு வழங்கவில்லை.

எனவே இந்தத் தரப்பின் மீதும் மக்கள் நம்பிக்கையின்மையோடுதான் இருக்கின்றனர். மட்டுமல்ல, மக்களின் முன்னேயுள்ள அகதிகள் விவகாரம், உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை, பாதிக்கப்பட்ட மக்களுக்கான மறுவாழ்வு, அபிவிருத்தி போன்றவற் றைப் பற்றிய திட்டவட்டமான பார்வைகளையோ முன்வைப்புக்களையோ இந்தத் தரப்பு கொண்டிருக்கவில்லை என இந்தக் கட்சியை மதிப்பிடுவோர் கூறுகின்றனர்.

எனினும், ஒரு சாராரிடம் இந்தக் கட்சிக்கு ஆதரவுத் தளம் உருவாகியுள்ளது எனவும் அவர்கள் மதிப்பிடுகின்றனர்.

அடுத்த முக்கிய மான தரப்பு அரசாங்கத் தின் நேரடி வேட்பாளர்கள், வேலை வாய்ப்பு, பிற அரச உதவிகள் என்ற அடிப்படையிலும் போர்ப் பாதிப்புகளிலிருந்து மீள்வதற்கான உதவிகளைப் பெற வேண்டியோரும் இந்த 'நேரடி வேட்பாளர்களிடம்' செல்கின்றனர். அரசாங்கமும் இவர்களையே பலப்படுத்த விரும்புகின்றது.

ஆனால், சலுகைகளுக்காக நாம் விலைபோகலாமா என்ற ஒரு தரப்பினர் உள்ளனர். இருந்த போதும், தேவைகளை நிறைவேற்றுவதற்கான வழி என்ன என்று கேட்கின்றனர் பாதிப்புக்குள்ளான மக்கள். அவர்களைப் பொறுத்தவரையில், தங்களின் முன்னேயுள்ள தேவைகளை நிறைவேற்றுவதே முதல் பிரச்சினையாகும். அதையே அவர்கள் சிந்திப்பர்.

எனவே, மக்களின் இந்த நிலையை வைத்துக் காரியத்தைச் சாதிக்கப் பார்க்கிறது அரசாங்கம். இதற்கு பெரும் ஆதரவு என்று கிட்டாது விட்டாலும் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியைப் பொறுத்து எதிர்வரும் எட்டு ஆண்டுகளுக்குப் பொருத்த மான தெரிவை மேற்கொள் ளுவது அவசியம் என்கின்ற னர் இதை மதிப்பிடுவோர்.

இதை விட இன்னொரு தரப்பினரும் களத்தில் உள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிபெற வைக்க வேண்டும் என்ற தரப்பினர் இவர்கள். இவர்களின் நிலைபற்றி அதிகம் பேசத் தேவையில்லை.

ரணிலின் தலைமைத்துவத்தினால் தெற்கிலேயே வெற்றியைப் பெற முடியாத போது எப்படி வடக்கில் அதை எதிர்பார்க்க முடியும் என்று கேட்கிறார் ஒரு நண்பர்.

இவற்றை விட ஏனையவை சுயேச்சைக் குழுக்கள். இந்தக் குழுக்கள் அரசாங்கத்தின் ஏற்பாட்டில் களமிறக்கப்பட்டவை என்று சிலர் குறிப்பிடுகின்றனர். அப்படி இருந்தாலும் இவ்வளவு தரப்பினர் களமிறக்கப் படுவதற்கு வாய்ப்பே இல்லை.

இதில் மாற்று அரசியல் குறித்துச் சிந்திக்கும் தரப்பினரும் உள்ளனர். புதிய ஜனநாயகக் கட்சி இதற்கு உதாரணமாகும். இந்தக் கட்சிக்கு சகல கிராமங்களிலும் ஒரு குறிப்பிட்ட தரப்பினரின் ஆதரவுமுண்டு. இவைபோல வேறு சில சுயேச்சைகளும் களத்தில் உள்ளன. இவர்களுடன் சிவாஜிலிங்கம், சிறிகாந்தா தரப்பும் உள்ளது. ஆனால் இவர்களின் நடமாட்டத்தை அதிகம் காணமுடியவில்லை.

இத்தகைய களச் சூழலில்தான் இன்றைய வடபகுதித் தேர்தல்களம் உள்ளது. இதில் பல வேட்பாளர்கள் மக்களுக்கு அறிமுகமில்லாதவர்கள். சிலர் எதற்காகத் தேர்தலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றே தெரியாதவர்கள். சிலரைப்பற்றி ஏற்கனவே மக்களுக்குத் தெரியும்.

இத்தகைய பின்னணியில்தான் மக்களின் தெரிவுகள் அமையப் போகின்றன.



அதாவது தமது தேவைகளையும் அபிலாஷைகளையும் நிறைவேற்றும், வழிதேடும் தெரிவுகள் அமையப் போகின்றன.

***









குமரன்,
நுவரேலியா.


**கேள்வி:-** முடிவு எடுக்க முடியாமல் குழப்பம் வரும் போது என்ன செய்யலாம் பித்தரே...?

**பதில்:-** தள்ளிப்போடலாம்.

பிரகதீஷ்,
யாழ்ப்பாணம்.

**கேள்வி:-** வியக்க வைக்கும் ஒரு சினிமாப் படத்தைப் பற்றிச் சொல்லுங்களேன் பித்தரே...?

**பதில்:-** Winged Migration என்றொரு ஆவணப் படம் சமீபத்தில் வெளிவந்தது. இது பறவைகளைப் பற்றியது. பிரெஞ்சு நடிகரும், தயாரிப்பாளருமான ஜேக்கஸ் பெரின் தயாரித்து இயக்கியது. பருவ காலத்தில் இடம் பெயரும் பறவைகளின் பயணத்தை கூடவே சென்று படம் பிடித்திருக்கிறார். கப்பல், பலூன், கிளைடர் என பலவற்றில் கமெராவைப் பொருத்தி பறவையோடு பறவையாக நம்மைப் பயணிக்க வைக்கும் அதிசயத்தை என்னவென்று சொல்வது?






சிறிதர்,
சிலாபம்.

**கேள்வி:-** பழிவாங்கும் உணர்ச்சி ஆண்களுக்கா, பெண்களுக்கா அதிகம் இருக்கிறது?

**பதில்:-** ஆண்களுக்கு அதிகம் என்று பெண்களும், பெண்களுக்கு அதிகம் என்று ஆண்களும் சொல்லுகிறார்கள்.

புருசோத்மன்,
கொழும்பு.

**கேள்வி:-** எதையும் அறிவியல் காரணத்தோடுதான் ஏற்றுக் கொள்வோம் என்று கூறுபவர்களைப் பற்றி?

**பதில்:-** பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றிய பல கேள்விகளுக்கு அறிவியல் இன்னமும் ஊகங்களையே நம்பியிருக்கிறது. அறிவியல் சார்ந்த விடைகளைத் தேடுவதில் இன்னமும் வெற்றி பெறவில்லை.

உதயசங்கர்,
வெள்ளவத்தை.

**கேள்வி:-** 'சித்திரம் பேசேல்' என்பதன் பொருள் என்ன பித்தரே?

**பதில்:-** 'கற்பனை கலந்து மிகைப்படுத்திப் பேசாதே' என்பதுதான்.

மணியம்,
யாழ்ப்பாணம்.

**கேள்வி:-** சிவாஜி கணேசன் நடித்த மொத்தப் படங்கள் எத்தனை என்று கூற முடியுமா?

**பதில்:-** 305 படங்களில் நடித்துள்ளார்.

சுரேன்,
வென்னப்புவ.

**கேள்வி:-** தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டப்படும் அளவுக்கு மக்கள் தேர்தலில் ஆர்வம் காட்டுவதைக் காணமுடியவில்லையே?

**பதில்:-** மாற்றம் ஒன்றை எதிர்பார்த்த மக்கள் படுமோசமான மாற்றமொன்றைக் கண்டதால் அந்த அதிர்ச்சியில் இருந்து இன்னும் மீள முடியாதவர்களாய் இருக்கிறார்கள்.

சுந்தர்,
தெகிவளை.

**கேள்வி:-** தேர்தல் முறையில் மாற்றம் வரும் என்று பரவலாகப் பேசப்படுகிறதே! இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** தற்போதைய தேர்தல் முறையைக் கொண்டுவர முன்னர் அப்போதிருந்த தேர்தல் முறையின் குறைபாடுகளைப் பட்டியலிட்டார்கள். இப்போது தலைகீழாக நடந்து கொண்டிருக்கிறது. இதுதான் மனிதனுடைய பலவீனம்.

சுதா,
பண்டத்தரிப்பு.

**கேள்வி:-** புத்தகங்களை வெளியிடுவதை தொழிலாகக் கொண்டு பிழைக்கலாமா?

**பதில்:-** அது வீண் கதை. பெரும் சிரமங்களுக்கிடையில் நீங்கள் ஒரு புத்தகம் வெளியிட்டால் உங்களிடமிருந்து 40%, 50% விலை எதிர்பார்க்கும் விற்பனையாளர்களின் வயிற்றை நிறைக்க உங்களால் முடியுமா என்று யோசித்துப் பார்த்து செயலில் இறங்குங்கள். எழுத்தாளர்களின் வயிறு காய்வதும் விற்பனை யாளர்களின் வயிறு நிறைவதும்தான் நம் நாட்டில் நடக்கின்ற மோசடி.

ருஷாந்தி,
கண்டி.

**கேள்வி:-** பித்தரே! புகழ் வாழ வைக்குமா?

**பதில்:-** உயிர் வாழும் போது அது உங்களை வாழ வைக்கக் கூடும். இதன் பிறகு உங்கள் புத்தியினால் ஓரளவு வாழ்வீர்கள். உங்கள் பேரனோ, கொள்ளுப் பேரனோ 'இந்த மனிதர் யார்?' என்று கேட்காமல் விட்டால் இது உங்களது அதிஷ்டம்தான். புகழ் என்ற போதை எப்போதும் இறங்கு வரிசையில் தான் சென்று கொண்டிருக்கும்.

பிரபா,
மட்டக்களப்பு.

**கேள்வி:-** 'பிருந்தாவனமும் நந்த குமாரனும்' என்ற பாடலில் வரும் 'பிருந்தாவனம்' என்ற இடம் எங்கே இருக்கிறது?

**பதில்:-** இந்தியாவின் உத்தரபிரதேசத்தில் ஆக்ரா நகருக்குச் சில மைல்கள் தள்ளி அமைந்திருக்கின்றது.

ஷரண்,
கொழும்பு.

**கேள்வி:-** உலகப் பொருளாதாரச் சூழலில் இன்று முதலிடம் வகிக்கும் தொழில் துறை எது?

**பதில்:-** ஐ.டீ எனப்படும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்தான். இதன் மூலம் சுற்றுப்புறச்சூழல் மாசடையாதிருப்பதோடு, பெரும்பாலானோருக்குத் தொழில் வாய்ப்பையும் வழங்குகிறது. வீட்டில் இருந்தபடியே பணியாற்றக்கூடிய வாய்ப்பும், சுய தொழிலில் ஈடுபடக்கூடிய வசதியும் அளிக்கும் துறை இதுதான்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 410

சொற்சிலம்பம் 410 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் திகதி 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் 04 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஏப்ரல் 11 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 408 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.408

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | 2 த | 3 வி | ■ | 4 செ | ப் | 5 ம | 6 தி |
| 7 கு | ந் | தி | 8 தே | வி | ■ | 9 த | ரி |
| 10 தி | தி | ■ | 11 க | டு | 12 வ | ன் | ■ |
| ■ | 13 ர | 14 ச | ம் | ■ | ண் | ■ | 15 ம |
| 16 அ | ம் | மா | ■ | 17 த | டி | 18 ம | ன் |
| தி | ■ | 19 ச | க | லை | ■ | 20 க | ள |
| 21 ப | 22 த | ம் | ■ | வி | 24 ச | ர | ன் |
| 25 தி | ண் | ■ | 26 ம | தி | ய | ம் | ■ |

## சொற்சிலம்பம் போட்டி இல. 408

### பரிசு பெறுவோர்

1. ர.தனுஷிகா,
   இல. 85, மகிந்தபுர,
   பண்டாரநாயக்க மாவத்த,
   அனுராதபுரம்.
2. ரஞ்சினி ஜெயரத்தினம்,
   21, 3/2 ஆவது ரப்பல் லேன்,
   வெள்ளவத்தை.
3. ரா.உஷாந்தினி,
   சிவன்கோவில் வீதி,
   புத்தூர்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 408

### பாராட்டுப் பெறுவோர்

01. இ.விமலாம்பிகை,
    கொழும்பு - 10.
02. சி.சிவலிங்கம்,
    மட்டக்களப்பு.
03. பொ.பாலசுப்பிரமணியம்,
    தம்பிலுவில் - 01.
04. நெல்சன் ஜெபத்துரை,
    பண்டாரவளை.
05. அ.செல்வநாதன்,
    யாழ்ப்பாணம்.
06. சி.நீரஜா
    மட்டக்களப்பு.
07. ச.சுரேந்தினி,
    தெகிவளை.
08. சி. ரஞ்சினி,
    மட்டக்களப்பு.
09. கோ.சாமினி,
    திருகோணமலை.
10. எஸ்.பி.விஸ்வநாதன்,
    மடுல் சீமை.
11. இ.நளினி,
    கொழும்பு-06.
12. இ.சிவப்பிரியா,
    யாழ்ப்பாணம்.
13. என்.துஷ்யந்தி,
    கல்முனை.
14. நிவேதிதா ராஜ்மோகன்
    செங்கலடி.

## சொற்சிலம்பம் போட்டி இல.410

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | ■ | 11 | | |
| | ■ | 12 | | 13 | | ■ | |
| ■ | 14 | | | | ■ | 15 | ■ |
| 16 | | ■ | | ■ | 17 | | 18 |
| 19 | | 20 | ■ | 21 | | | |
| 22 | | | | | | ■ | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 410

### இடமிருந்து வலம்

1. கட்டுரை.
4. களைப்பால் அல்லது சோம்பலில் வருவது.
7. ஒன்றின் பிழிவு/ சோறுக்குச் சேர்த்து உண்ணுவது.
8. மகாபாரதத்தில் ஒரு பாத்திரம். திருதராட்டினனின் மனைவி.
9. கணவன் - மனைவி.
11. கிணற்றில் நீர் அள்ளும் கயிறு.
12. வரவேண்டிய நிலுவை.
14. இதைத் தேடித்தான் அலைச்சல்.
16. அரிசியின் வெளிக் கோது.
17. தோல் வாத்தியம். இதில் சப்தம் எழுப்புவதை 'அறைவது' என்பர்.
19. 'கமிஷன்'.
21. விசாலமான/ விரிவான.
22. சிக்கல்/ தடை/ நெருக்கடி.

### மேலிருந்து கீழ்

1. நோன்பு.
2. பிச்சை/ இரப்பு.
3. நிகழும் விடயம்.
4. ஒரு பாட்டின் முடிவை அடுத்த பாட்டின் ஆரம்பமாகக் கொள்ளும் திரட்டு.
5. கடந்த தசாப்தத்தில் பரபரப்பாகப் பேசப்பட்ட உலகத் தலைவர்.
6. ஓர் இந்திய மாநிலம்.
10. திருமணமான பெண்.
13. சந்திரன்/ அறிவு.
14. குனிந்த நிலையில் இருந்து நேராகுதல்.
15. வேறுபாடு நிலை.
16. ஒத்தாசை.
17. வதனம்.
18. மயாணம்.
20. இன/ சாதி.
21. உள்.

# கடுமையான உழைப்பால் காவியங்களை படைத்தவர்!

**பாலா.சங்குப்பிள்ளை**

ஒரு திரைப்படத்தில் என்னதான் நட்சத்திர நடிகர்கள் நடித்திருந்தாலும் சிறந்த தொழில்நுட்பவியலாளர்கள் பங்கு கொண்டாலும் சிறப்பான முறையில் அதை நெறியாழ்கை செய்யாதவிடத்து அப்படம் நிச்சயமாக பப்படமாகிவிடும் என்பதற்கு பல உதாரணங்களை சொல்ல முடியும். அன்றும் சரி இன்றும் சரி மக்கள் மத்தியில் மிகவும் செல்வாக்குச் செலுத்திய பல இயக்குநர்களின் மோதிரக்கையினால் குட்டுப்பட்ட பல நடிகர்கள் பின்பு பெரும் புகழ் பெற்றவர்களாக விளங்கியிருக்கிறார்கள்.



அந்த வகையில் உருவத்தில் பெரியவராக பண்பில் பழகுவதில் உயர்ந்தவராக இருந்த ஏ.சி.திரிலோக சந்தர் இயக்கிய பல திரைப்படங்கள் பெரியளவில் வெற்றிபெற்றதுடன், அவை இன்றும் காவியங்களாக ரசிகர்களினால் பார்க்கப்படுகின்றன. ஆரம்பகாலத்தில் இவர் டி.ஆர்.மாகாலிங்கம், எம்.வி.ராஜம்மா நடித்து பெரும் வெற்றி பெற்ற 'ஞான சௌந்தரி' படத்தை தயாரித்து இயக்கிய ஜோசப் தளியத்திடம் ஏ.சி திரிலோகசந்தர் உதவி இயக்குநராக சேர்ந்தார். தனது 'சிட்டாடல்' நிறுவனத்தின் சார்பாக ஜோசப் தலியத் தயாரித்து இயக்கிய 'விஜயபுரி வீரன்' படத்தின் கதையை எழுதியவர் ஏ.சி.திரிலோகசந்தர். ஆனந்தன், அசோகன் நடித்த இந்தப் படம் வெற்றி பெற்றது.



1960 இல் எஸ். ஏ.அசோகனை ஏவி.எம்.ஸ்டுடியோவுக்கு அழைத்துச் சென்று ஏ.வி.மெய்யப்பச்செட்டியாரிடம் அறிமுகம் செய்து வைத்தார். ஏ.வி. மெய்யப்பச்செட்டியார் ஏ.சி. திரிலோகசந்தர் மீது மிகுந்த நம்பிக்கை வைத்து ஆரூர்தாஸ் கதை, வசனத்தில் எஸ்.பி. முத்துராமனை உதவியாளராக போட்டு 'வீரத்திருமகன்' என்ற படத்தை இயக்கும் வாய்ப்பை வழங்கினார். குமாரி சச்சு முதன் முதலாக கதாநாயகியாக தோன்ற ஆனந்தன், அசோகன் நடித்த அந்தப்படம் பெரியளவில் பேசப்படவும் இல்லை. சிறப்பாக ஓடவும் இல்லை. ஆனால் ஏ.வி. மெய்யப்பச்செட்டியார் திரிலோகச்சந்தர் மேல் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்.

'வீரத்திருமகன்' படத்தை இயக்கிக் கொண்டே இவர் சிவாஜி, ஜெமினி, சரோஜாதேவி, சாவித்திரி மற்றும் மாஸ்டர் கமலஹாசன் இரு வேடங்களில் தோன்ற 'பார்த்தால் பசி தீரும்' என்ற படத்துக்கு கதை எழுதினார். பீம்சிங் இப்படத்தை இயக்கினார். இந்தப் படம் 100 நாட்கள் ஓடியது. ஏ.வி.எம் தயாரித்து மிகப் பெரிய வெற்றிப் படமாக ஓடிய 'நானும் ஒரு பெண்' படத்தில் எஸ்.எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரியுடன் புது முகங்களாக ஏவி.எம்.ராஜன், புஷ்பலதா அறிமுகமானார்கள். இப்படத்தை இயக்கியவரும் ஏ.சி.திரிலோகசந்தர் தான். இப்படம் 1963 இல் வெளியாகி இருபது வாரங்கள் ஓடியது.

ஏவி.எம்முக்காக ஏ.சி.திரிலோகசந்தர் கதை இயக்கத்தில் உருவான மற்றுமொரு படம்தான் 'காக்கும் கரங்கள்'. எஸ்.எஸ்.ராஜேந்திரன், விஜயகுமாரியுடன் சிவக்குமார் இந்தப்படத்தில்தான் அறிமுகமானார். 'காக்கும் கரங்கள்' சிறந்த திரைக்கதைக்காக 100 நாட்கள் ஓடியது.

நடிகர் கே. பாலாஜி 'அண்ணாவின் ஆசை' தோல்விப் படத்தைத் தயாரித்து கையைச் சுட்டுக்கொண்டு கொஞ்சக் காலம் பேசாமலே இருந்தார். பின்பு சிவாஜியை முதன்முதலாக கதாநாயகனாகவும், கே.ஆர் விஜயாவை கதாநாயகியாகவும் போட்டு ஏ.சி. திரிலோகசந்தரை இயக்குநராக்கி 'தங்கை' என்ற படத்தை தயாரித்தார். பாலாஜியின் 'தங்கை' உருவாகும் போதே இன்னொரு படத்தையும் இயக்கும் வாய்ப்பு இவருக்கு வந்தது. அதிலும் சிவாஜி, கே.ஆர்.விஜயாவுடன் பத்மினியும் இணைந்து நடித்தார்கள். படத்தின் பெயர் 'இருமலர்கள்'. முதன் முதலாக சிவாஜி அடிதடி நாயகனாக 'தங்கை'யிலும் மென்மையான காதல் உணர்வுகளைக் கொண்ட பாத்திரத்தில் 'இருமலர்களி'லும் நடித்திருந்தார்.

இந்த இரண்டு படங்களுமே ஒரு தினத்தில் வெளியாகி இரண்டுமே பெரும் வெற்றி பெற்றன. மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.நடிக்க ஏ.வி.எம். தயாரித்த ஓரே ஒரு எம்.ஜி.ஆர் படம்தான் 'அன்பே வா'. இதில் கதையொன்று சொல்வதற்கு எதுவுமில்லை. இயக்குநரின் கற்பனைத் திறமையில்தான் இது ஒரு வெற்றிப்படமாக உருவாக முடியும் என எம்.ஜி.ஆர் கருத்துச்சொன்ன இந்த கலர் படம் 250 நாட்களுக்கு மேல் ஓடி பெரும் வெற்றி பெற்றது. ஏ.சி.திரிலோகசந்தர் எம்.ஜி.ஆரை வைத்து இயக்கிய முதலும் கடைசியுமான படம் 'அன்பே வா'.

ஏ.சி. திரிலோகசந்தரின் கதை சொல்லும் பாங்கு சிவாஜியை மிகவும் கவர்ந்து விட்டதால் சிவாஜி, சரோஜாதேவி, ஜெய்சங்கர் நடித்த 'அன்பளிப்பு', சிவாஜி மூன்று வேடங்களில் தோன்றி அசத்திய 'தெய்வமகன்' ஆகிய இரண்டு படங்களை இயக்கும் வாய்ப்பு அவரைத் தேடி வந்தது. 'அன்பளிப்பு' சுமாராக ஓட சிவாஜி, வித்தியாசமான மூன்று வேடங்களில் தோன்றி நடித்த 'தெய்வமகன்' பெரியளவில் வெற்றி பெற்றது. ஏ.சி. திரிலோகசந்தர் இயக்கி சிவாஜி நடித்த 'எங்க மாமா', 'எங்கிருந்தோ வந்தாள்', 'என் தம்பி', 'நீதி', 'திருடன்', 'தீர்க்கசுமங்கலி'



'அவள்', 'பாபு','அவன்தான் மனிதன்','விஸ்வரூபம்' மற்றும் இலங்கை-இந்திய கூட்டுத்தயாரிப்பாக உருவாகிய பிரைட்டன் பிச்சர்ஸ்'பைலட் பிரேம்நாத்' போன்ற படங்கள் பெரும் வெற்றி பெற்றன. 'பைலட் பிரேம்நாத்'தில் சிவாஜியுடன் மாலினிபொன்சேகா இணைந்து நடித்திருந்தார். சிங்கள் மொழியிலும் மொழி மாற்றம் செய்யப்பட்ட இந்தப்படம் 300 நாட்கள் இலங்கையில் ஓடியது.



ஏ.சி. திரிலோகசந்தர் தன்னுடைய மனைவியின் பெயரில் 'சினிபாரூத்' மூலமாக சொந்தமாக தயாரித்து இயக்கி சிவகுமார், விமானவிபத்தில் மறைந்த ராணி சந்திரா இணைந்து நடித்த 'பத்ரகாளி' வெள்ளிவிழா கொண்டாடியது. தொடர்ந்து பாலாஜி தயாரிப்பில் சிவாஜி நடித்த 'குடும்பம் ஒரு கோயில்', ரஜினிகாந் நடித்த 'வணக்கத்துக்குரிய காதலி' ஏவி.எம். தயாரிப்பில் சிவாஜி நடித்த அன்புள்ள அப்பா ஆகிய படங்களை இயக்கி புகழ் பெற்றார் ஏ.சி.திரிலோகச்சந்தர். இவர் இயக்கிய பல படங்கள் இன்னும் பேசப்படுவதற்குக் காரணம் இவரின் கடுமையான உழைப்புத்தானென்றால் அது மிகையாகாது.

***

## விவேகானந்தர் வாக்கும்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பெண்களிடம் பேச்சுக் கொடுத்தார்கள். ''இவர் கடவுளின் அவதாரம். ஒருநாள் அதை இவர் வெளிப்படையாக அறிவிப்பார். அப்போது உலகமே நடுங்கும்!'' என்றார்கள் நடுங்கும் குரலில். கோயலோ ''நான் ஒரு கச்சிதமான படைப்பு. பெண்கள் விரும்பும் எல்லாத் தகுதிகளும் எனக்கு இருக்கிறது. அதனால்தான் இவர்கள் என்னோடு இருக்கிறார்கள்'' என்றார் பெருமையாக.

''தவறு சமயத்தில் இல்லை. இந்து மதப் புரோகிதர்கள் பலவிதமான கொடுங்கோல் இயந்திரங்களைக் கண்டுபிடித் துள்ளனர். அதில்தான் வம்பு பொதிந்துள்ளது'' என்றார் விவேகானந்தர். இவை குறித்துக் கண்காணிக்க இந்து சமய அறநிலையச் சட்டத்தில் இறுக்கமான சரத்துகள் இருக்கின்றன. சொத்தைத் தவறாகக் கையாண்டால் மடாதிபதியாகத் தொடர முடியாது, ஒழுக்கக் கேடான வாழ்க்கை வாழ்பவராக அறியப் பட்டாலோ, தமக்குரிய கடமையைத் தவறி நெறிபிறழ்ந்தார் என்றாலோ நடவடிக்கை எடுக்கலாம் என்றும் சட்டம் சொல்கிறது. ஆனால், சாமியார்கள் விஷயத்தில் சட்டம் தனது கடமையைச் செய்வது இல்லை.

மூடநம்பிக்கைகளை கட்டுப்படுத்த சமூக சீர்திருத்தக் குழுவை கருணாநிதி தொடங்கினார். இரண்டு ஆண்டுகளாக அது கூடவே இல்லை. இதுபோன்ற பிரச்சினைகள் வரும் போது அறிக்கை விடுவதோடு மறக்கப்பட்டுவிடுகிறது. அடுத்த சாமியார் சிக்கும் போதுதான் மீண்டும் பேச்சு கிளம்பும்.

தாங்கள் சொல்லி வரும் ஒழுக்கக் கோட்பாடுகளுக்கும் போட்டுவரும் பிரம்மச்சரிய வேஷத்துக்கும் விரோதமாகச் செயல்படும் சாமியார்களிடம் ஜாக்கிரதையாக இருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள மக்கள்தான் ஆன்ம பலம் பெற வேண்டும்!

நன்றி - விகடன்.

## அண்ணா...

(27ஆம் பக்க தொடர்ச்சி)

1806 பிரிட்டனின் துணைத் தளபதி நெல்சன், எகிப்து குடியரசுத் தலைவர் கமால் அப்துல் நாசர் ஆகியோருக்குக் கூடிய கூட்டத்தை அடுத்து அதிகம் கூடியது அண்ணாவுக்குத்தான் என்கிறது கின்னஸ்!

*போப்பாண்டவரைச் சந்தித்த அண்ணா, கோவா விடுதலைக்குப் போராடி போர்ச்சுக்கல் சிறையில் இருக்கும் மோகன் ரானடேவை விடுதலை செய்யக் கேட்டார். விடுதலையான ரானடே, அண்ணாவுக்கு நன்றி சொல்ல சென்னை வந்தார். ஆனால், அண்ணா இறந்துபோயிருந்தார். இப்படி அண்ணாவின் வாழ்க்கை, தூரத்தில் இருப்பவர்களுக்காகப் பிரதிபலன் பார்க்காததாகவே இருந்தது!

*மூர்மார்க்கெட் யுனிவர்ஸல் புக்ஷாப், சென்னை ஹிக்கின்பாதம்ஸ் ஆகிய இரண்டு கடைகளுக்கும் வரும் அத்தனை ஆங்கிலப் புத்தகங்களையும் வாங்கிவிடுவார். ஹிக்கின்பாதம்ஸ் எடுத்த கணக்கெடுப்பின்படி மைசூர் மகாராஜா ஜெயசாம்ராஜ் உடையாரும், அண்ணாவும்தான் அதிகமான புத்தகங்கள் வாங்கியவர்களாம் அந்தக் காலத்தில்!

*பூட்டிய அறைக்குள் தனியாகப் படுக்கப் பயப்படுவார். யாராவது துணைக்கு இருக்க வேண்டும். தூங்கும்போதும் விளக்கு எரிய வேண்டும். காஞ்சிபுரத்தில் குரங்குகள் அதிகமாக இருந்ததால், தன்னைக் குரங்கு கடித்துவிடுமோ என்ற பயம் எப்போதும் இருந்திருக்கிறது!

*முதலமைச்சர் ஆனதும், அதுவரை தன்னை எதிர்த்து வந்த பெரியார், காமராஜ், பக்தவத்சலம் ஆகியோரைச் சந்தித்து ஆலோசனைகள் பெற்றார்!

*தான் வகித்த தி.மு.க. பொதுச் செயலாளர் பதவி சுற்று முறையில் பலருக்கும் போக வேண்டும் என்று நினைத்தார். ''தலைமையிடம் அதிகாரம் குவியக் கூடாது. எந்தத் தனி நபரின் செல்வாக்கிலும் இயக்கம் இருக்கக் கூடாது'' என்றார்!

*'ஓர் இரவு' திரைப்படத்தின் மொத்த வசனத்தையும் (அதாவது 360 பக்கங்கள்) ஒரே நாள் இரவிலேயே எழுதி முடித்தார்!

*எப்போதும் தான் பேச இருக்கும் கூட்டத்துக்குத் தாமதமாகத்தான் வருவார். ''முன்னால் வந்தால் அடுத்தவரைப் பேசவிடாமல் செய்துவிடுகிறார்கள். அதனால், ஊருக்கு வெளியில் நின்று, அனைவர் பேச்சையும் கேட்டுவிட்டுக் கடைசியில் வருகிறேன்'' என்பார்!


*அண்ணா மறைவின்போது திரண்ட கூட்டம் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்ற கூட்டம்.

***

# குழப்பமும் தெளிவும்

அது ஓர் இதமான ஞாயிறு மாலை என்று சொல்ல முடியாத அளவுக்கு அகோர வெக்கையாக இருந்தது. ஆகவே காலாற நடந்து சென்று எனது நண்பனைச் சந்தித்து அளவளாவி ஒரு ஷொட்டும் அடித்தால் நன்றாக இருக்கும் என்று எனக்குத் தோன்றியது.

அன்றைக்கென்று நண்பன் பரபரப்பாக எதையோ எழுதிக் கொண்டிருந்தான். 'நீ பெரிய எழுத்தாளனோ?' என்று என்னைக் கேலி செய்யும் அவனுக்கும் என்னுடைய வியாதி தொற்றி விட்டதோ என்றஞ்சி அவனது தலைக்கு மேலால் எட்டிப் பார்த்தேன். வெளிநாட்டுக்கு விசால மிடப்பட்ட நிலையில் சில தபாலுறைகள் அவனுக்கு முன்னால் கிடந்தன.



அவற்றைப் பார்த்து நான் அதிர்ச்சியில் உறைந்து நின்றேன். ஒன்று அமெரிக்க ஜனாதிபதிக்கு, இன்னொன்று இங்கிலாந்துப் பிரதமருக்கு, இன்னொன்று ஆஸ்திரேலியப் பிரதமருக்கு என எல்லாமே சில உலகத் தலைவர்களுக்கு விசாலமிடப்பட்ட கடித உறைகள் அவை.

''இல்லை மச்சான். உனக்குச் சொன்னாலென்ன. இங்கு எனக்கும் மனிசிக்கும் ஒரே சண்டை. அதுதான் அதைத் தீர்த்து வைக்கச் சொல்லி இவங்களுக்கெல்லாம் கடிதம் போடுறன்.''

இவனுக்குத் தட்டிக் கிட்டுப் போட்டுதா என்று யோசித்தபடி அங்குமிங்கும் பார்த்து, ''உன்ரை மனிசி எங்கையடா, மச்சான்?'' என்று வாசல் கதவுக்கருகில் எச்சரிக்கையாகவே நின்றவாறு கேட்டேன்.

''அவ அவவின்ர அம்மா வீட்டை போட்டா, கோவிச்சுக் கொண்டு'' அவனது நாக்குழறியது.

''ஓ, பிரச்சினை அதுதானா? கொஞ்சம் ஓவறாப் போச்சுப் போலும். சரி, சரி நீ எழுது. நான் பிறகு வாறன்.'' நான் வெளியே செல்லத் தயாரானேன்.

''நான் தெளிவாத்தான் இருக்கிறன். பயப்படாமல் வந்திரடா.'' நண்பன் சொன்னான்.

"தெளிவாய் இருக்கிறபடியாலைதான் உள் வீட்டுப் பிரச்சினையைத் தீர்க்க உலகத் தலைவருக்கெல்லாம் எழுதுறியாக்கும்?''

**-வே.தில்லை நாதன்-**

''இப்ப அதுதானே மச்சான் நடக்குது. நாங்கள் எல்லாத்துக்கும் வெளிநாட்டைத் தானே ஆவெண்டு பாக்கிறம். ஜீ.எஸ்.பி பிளஸ் சலுகையை நிப்பாட்டியாச்சு. இவங்களுக்கு நல்ல அடி. உலக வங்கி அடுத்த தவணைக்கான கடன் காசை இலெக்‌ஷன் மட்டும் தள்ளி வைச்சிருக்கு. நல்ல பாடம் படிச்சிருக்கிறாங்கள் எண்டெல்லாம் சந்தோசப்படுறம். பிரிட்டிஷ் பிறைம் மினிஸ்டர் கோர்டன் பிரவுனும் வெளிநாட்டமைச்சர் மிலிபாண்டும் தமிழாக்களோடை கதைச்சிட்டாங்கள். எங்கடை பக்கம் காற்று வீசுது என்று ஆனந்தப்படுறம்.'' என் முகத்தில் முகம் வைத்து அவன் சொன்னான். சாராய வாடை குப்பென்று அடித்தது.

''எங்களுக்கு சின்னச்சின்னச் சந்தோஷங்கள் தேவை தானே? எங்கடைஆக்களும் ஒண்டாச் சேந்திட்டால் சந்தோஷம் கூடும்.'' நான் சொன்னேன்.

நண்பன் கதையை மாத்தினான். ''அதைதாண்டா நானும் சொல்லுறன். வரப்போற இலெக்‌ஷனைப் பற்றி யோசிச்சுப் பாத்தியா? எங்கடையாக்கள் எத்தனை பிரிவாப் பிரிஞ்சிருக்கிறாங்கள். அது மட்டுமே? ஒவ்வொருத்தனும் தான் சொல்லுறதைத் தான் சனம் கேக்கும் எண்டும் சொல்லுறானே?''

இவன் தெளிவாக இருப்பதாகச் சொன்னாலும் எனக்கு அப்படிப் புலப்படவில்லை. ஏன் வீண் வம்பு? ''மச்சான் எனக்கொரு அவசர வேலையிருக்கு. நான் பிறகு வாறனே.'' நான் தப்பிக்க முயன்றேன்.

''மச்சான் நீ பயப்பிடாதை. நான் நோமலாத்தான் இருக்கிறன். நான் சொல்லுறதைக் கேள்.''

''சரி சொல்லு.''

நான் ஒரு கதிரையில் அமர்ந்தேன்.

''சனங்களோடை சனங்களா இருந்தவனும் சனம் தான் சொல்லுறதைத்தான் கேக்கும் எண்டு சொல்லுறான். சனத்தை விட்டு விலகி இருந்தவனும் அதைத்தான் சொல்லுறான். ஆளும் கட்சிக்காரனும் தமிழ்ச் சனம் தன்னைத்தான் நம்பி இருக்கு தெண்டு சொல்லுறான். எதிர்க்கட்சிக்காரனும் அதைத்தான் சொல்லுறான். ஒண்டாய் இருந்தவனும் அதைத்தான் சொல்லுறான். பிரிஞ்சு சிதறிப் போனவனும் அதைத்தான் சொல்லுறான். சூப்பர் சிங்கர் சீனியர் திறீயும் அதைத்தான் சொல்லுறார். சனங்கள் என்ன பேயரே?.....''

நண்பனுக்குப் புத்தி பேதலித்து விட்டதோ என்ற சந்தேகம் தோன்றினாலும் வலிந்து சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, ''அதென்னடா சூப்பர் சிங்கர்?'' என்று கேட்டேன்.

''அது ஒரு சங்கீதப் போட்டி நிகழ்ச்சி. இந்தியன் டீவியிலை போகும் 'சூப்பர் சிங்கர் யூனியர் டூ மழலைகளுக்கான தேர்வு' எனக்கு நல்ல விருப்பமான புரோக்கிராம். ஆனால் இங்கிலிசுக் கோதாரியைக் கலக்கிறாங்கள் அதுதான் கஷ்டம்.''

நான் தலையைப் பிய்த்தவாறே, ''சரி சொல்லு.'' என்றேன்.

''அதிலை மச்சான் எனவுன்சர் பொம்பிளை ஒரு பையனைப் பார்த்துக் கேட்டா, நீ என்ன கருப்பொருளிலை பாட்டுப் பாடப் போறாய்? எண்டு. அதுக்கு அவன் சொன்னான் greatness of Tamil எண்டு. அதாவது தமிழின் பெருமை எண்டதை அவன் இங்கிலிசிலை சொல்லுறான்.

சங்கரா! சங்கரா!! உனக்கு ஒரு இழவும் புரியாது. அது மாதிரித்தான் எங்கடை சூப்பர் சிங்கர் சீனியர் பொலிட்டசனுக்கும் எங்கடை சனங்களின்ரை பிரச்சினை பற்றி இங்கிலிசுப் பேப்பறில மட்டும்தான் எழுத முடியுது. அவர் என்ன சொல்லுறார்? 'மற்றவர்கள் சனங்களைப் பிழையா வழி நடத்திப் போட்டினம். சனங்கள் நான் சொல்லுறதைத்தான் கேப்பினம்.' எண்டுதானே சொல்லுறார். இவங்கள் எல்லாரும் சொல்லுற மாதிரித்தான் நானும் சொல்லுறன். உலகத்தலைவர்மார் என்ரை சொல்லைக் கட்டாயம் கேப்பினம். அதுதான் கடிதம் எழுதிறன்.''

நண்பன் போதை தலைக்கேறியதால் குட்டையைக் குழப்புகிறான் என்பது எனக்குப் புரிந்தாலும் அவனால் தெளிவாகச் சொல்ல முடியாமல் போன விடயம் எனக்குத் தெளிவாகவே புரிந்தது.

அதாவது மண் தோன்றாக் காலத்தில் முன் தோன்றி அந்தரத்தில் நின்ற மறத் தமிழன் இப்பொழுது காலூன்ற மண்ணிருந்தும் அந்தரத்தில் நிற்கிறானோ என்ற அச்சமே நண்பனை வதைத்துக் கொண்டிருந்தது.

எனக்கென்னவோ அரசியல்வாதிகள் என்ன சொன்னாலும் வாக்காளர்கள் தெளி வாக இருப்பார்கள் என்றே தோன்றியது. அவனைச் சமாதானப்படுத்தும் வழி மட்டுமே புரியவில்லை. ✱

---



# 25 அண்ணா

✱அப்பாவியாகத் தோற்றமளித்த அறிஞன். எதிராளியையும் வசப்படுத்திய வசியன். குரலால், எழுத்தால் ஆண்ட மன்னன். தமிழ்நாட்டின் அண்ணன்!

✱சி.என்.ஏ. என்ற மூன்றெழுத்தால் அறிமுகமான அண்ணாதான், தமிழ்நாட்டு அரசியலில் உருவான முதல் 'தளபதி'. பெரியாரின் சீடராக வலம் வந்தபோது அப்படித்தான் அழைக்கப்பட்டார். அதன் பிறகு எல்லோருக்கும் அவர் 'அண்ணா' தான்!

✱பள்ளியில் படிக்கும்போது பொடி போட்டுப் படித்தார். கல்லூரிக் காலத்தில் வெற்றிலை, பாக்கு பயின்றார். வெளியில் எச்சில் துப்ப, வகுப்பில் ஜன்னல் ஓரத்து இருக்கையில் இருப்பார். இந்தத் தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை இருந்தது!

✱''என் வாழ்க்கையில் நான் கண்டதும் கொண்டதும் ஒரே தலைவர் பெரியார்'' என்று அறிவித்திருந்தார். அவரைவிட்டுப் பிரிந்து, தனிக் கட்சி கண்டபோதும் தலைமை நாற்காலியை பெரியாருக்காகக் காலியாகவே வைத்திருந்தார். அண்ணா காலமானது வரை தி.மு.கவுக்குத் தலைவர் அறிவிக்கப்படவே இல்லை!

✱இரண்டு மயில்கள், இரண்டு மான்கள், புறாக்கள், நாய் ஆகியவற்றைக் கடைசி வரை விரும்பி வளர்த்தார். அவர் இறந்த ஒரு வாரம் கழித்து அவரது படுக்கையைச் சுற்றி வந்து அந்த நாய் இறந்தது. பிற விலங்குகளை பராமரிக்கக் கொடுத்து விட்டார்கள்!

✱அண்ணா - ராணி தம்பதியினருக்குக் குழந்தைகள் இல்லை. எனவே, தனது அக்கா மகள் சௌந்தரியின் பிள்ளைகளான பரிமளம், இளங்கோவன், கௌதமன், ராஜேந்திரன் ஆகிய நால்வரையும் தத்து எடுத்து வளர்த்தார்!

✱தினமும் துவைத்துச் சுத்தப்படுத்திய வேட்டி - சட்டை அணிய வேண்டும் என்று நினைக்க மாட்டார். ஒரே சட்டையை இரண்டு மூன்று நாட்கள் போடுவார். முதலமைச்சரான பிறகுதான் 'வெள்ளையான சட்டை' அணிந்தார்!

✱தலை சீவ மாட்டார். கண்ணாடி பார்க்க மாட்டார். மோதிரம் அணிந்தது இல்லை. கைக்கடிகாரம் அணிய மாட்டார். ''என்னை காலண்டர் பார்க்க வைத்து, கடிகாரம் பார்க்கவைத்து சூழ்நிலைக் கைதியாக்கிவிட்டதே இந்த முதலமைச்சர் பதவி'' என்று சொல்லிக்கொண்டார்!

✱காஞ்சிபுரம் தேனம்பாக்கத்தில் ஒரு ஏக்கர் நிலம், காஞ்சிபுரத்தில் ஒரு வீடு, சென்னை நுங்கம்பாக்கத்தில் ஒரு வீடு - மூன்றும்தான் அண்ணா வைத்துவிட்டுப் போன சொத்துக்கள்!

✱முதலமைச்சராக இருந்து அவர் இறந்த மாதத்தில் சென்னை நுங்கம்பாக்கம் இந்தியன் வங்கியில் 5,000 ரூபாய், மயிலாப்பூர் இந்தியன் வங்கியில் 5,000 ரூபாய் அவரது கணக்கில் இருந்தன!

✱நெசவு மற்றும் தையல் தொழில் நன்றாகத் தெரியும். ''என்னுடைய அளவுக்கு மீறிய பொறுமைக்கு இதுதான் காரணம். நூல் அறுந்துவிடக் கூடாது என்பதற்காக நெசவாளியானவன் எப்போதும் இப்படித்தான் கவனமாகவும் பொறுமையாகவும் இருப்பான்'' என்பார்!

✱புற்றுநோய் பாதிப்பில் இருந்தபோது, சென்னை மருத்துவமனையில் இருந்து வேலூர் சி.எம்.சிக்கு அவரைக் கொண்டுசெல்லும்போது தடுத்தார். ''நாமே அரசாங்க மருத்துவமனையை மதிக்காததுபோல ஆகிவிடும்'' என்றார்!

✱அண்ணா பல மணி நேரங்கள் பேசிய கூட்டத்துக்கு எத்தனையோ உதாரணங்கள் உண்டு. ஒரு கூட்டத்தில் ஐந்து நொடிகள்தான் பேசினார். ''காலமோ சித்திரை... நேரமோ பத்தரை... உங்களுக்கோ நித்திரை... போடுங்கள் உதயசூரியனுக்கு முத்திரை'' என்பதே அந்தப் பேச்சு!

✱நாம் வாழும் இந்த மாநிலத்துக்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்தது, சுயமரியாதைத் திருமணங்களுக்கு அங்கீகாரம் வழங்கியது, தமிழ் மற்றும் ஆங்கிலம் என்ற இரு மொழித் திட்டத்தை சட்டமாக்கியது... இவை மூன்றும் அண்ணாவின் சாதனைகள்!

✱தி.மு.க ஆட்சியைப் பிடித்தால் தான் முதலமைச்சர் என்ற யோசனைகூட இல்லாமல், தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குப் போட்டியிட்டவர் அண்ணா!

✱உலகம் பழையதும் புதியதும், நிலையும் நினைப்பும், நாடும் ஏடும், நல்ல தீர்ப்பு, ஆற்றங்கரையோரம் என்று தலைப்பு கொடுத்து அதிகம் பேசியது இவர்தான். மைக் முன்னால் நின்றதும் தலைப்பு கொடுப்பார்கள். அப்படியும் பேசியிருக்கிறார். இரண்டு அணா டிக்கெட் வசூலும் இவரது பேச்சைக் கேட்க வசூலித்திருக்கிறார்கள்!

✱'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்', 'கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு', 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்', 'கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு', 'எங்கிருந் தாலும் வாழ்க', 'மறப்போம் மன்னிப்போம்', 'வாழ்க வசவாளர்கள்', 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு', 'சட்டம் ஒரு இருட்டறை', 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' ஆகிய பிரபலமான வாசகங்கள் அனைத்தும் அவருக்குச் சொந்தமானவை!

✱தனக்குக் கீழ் இருந்தவர்களை நாவலர், கலைஞர், பேராசிரியர், சொல்லின் செல்வர், சிந்தனைச் சிற்பி, தத்துவ மேதை என்ற பட்டம் சொல்லி அழைத்து வளர்த்துவிடுவார்!

(26ஆம் பக்கம் பார்க்க)

# அழிவின் விளிம்பில் அந்தமான் ஆதிவாசிகள்

இந்தியாவுக்குச் சொந்தமான அந்தமான் - நிக்கோபார் தீவுகளுக்கு சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கு தடைவிதிக்கப்படவுள்ளது. உல்லாசப் பயணிகள் மூலம் பரவும் பால்வினை நோய்களால் தற்போது 350 பேர் மட்டுமே எஞ்சியுள்ள ஆதிவாசிகள் முற்றாக அழிந்து போகும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அந்தமான் - நிக்கோபார் தீவுகளில் எஞ்சியிருக்கும் ஜாராவா (Jarawa) எனப் படும் இந்த ஆதிவாசிகளைக் காப்பாற்றும் நோக்கில் இவ்விரு தீவுகளிலும் தடுப்பு வலயம் ஒன்றை இந்தியா உருவாக்கி உள்ளது. அத்துடன் அதிக செலவில் அமைக்கப்பட்டுள்ள பெரிய சுற்றுலா மைய மொன்றை மூடி விடுமாறும் இந்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இந்திய அரசாங்கத்தின் சட்டமா அதிபர் உச்ச நீதிமன்றத்தில் கருத்துத் தெரிவிக்கையில், ஆபிரிக்காவிலிருந்து இத்தீவுகளில் குடியேறிய ஜாராவ இனத்தவரில் தற்போது 350 பேர் மட்டுமே எஞ்சியுள்ள னர் என்று தெரிவித்துள்ளார். வெளிநாட்டுப் பயணிகளின் வருகையால் அவர்கள் பல்வேறு மேலைத்தேய பால் வினை நோய்களுக்கும் தொற்றுக்களுக்கும் உள்ளாகி இருக்கின்றனர் என்றும் இவர் கூறுகிறார். அந்தமான்-நிக்கோபார் தீவுகளில் போ(BOA) எனப்படும் இனத்தவர்களும் இருந்தனர்.

இந்த இனத்தில் எஞ்சியிருந்த ஒரே ஒரு நபரும் கடந்த மாதம் மரணமடைந்ததால் அந்த இனம் முற்றாக அழிந்து விட்டது. 65 ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் ஆபிரிக்காவிலி ருந்து வந்து அந்தமான் - நிக்கோபார் தீவுகளில் போ இனத்தவர்கள் குடியேறி இருந்தனர். போ இனத்தைச் சேர்ந்த அந்த கடைசி நபரும் மரணமடைந்ததைத் தொடர்ந்து அதே நிலைமை ஜாராவ இனத்தவர்களுக்கும் ஏற்படாமல் தடுப்பதற்காகவே இந்திய அரசு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது. 400 சதுர மைல்கள் விஸ்தீரணம் கொண்ட உஷ்ண வலயக் காடுகளால் சூழப்பட்ட பாதுகாப்பான வலயத்தில் வாழ்வதால் ஜாராவா இனத்தினருக்கு BOA இனத்தை விட உயிர் வாழக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. காட்டுப் பன்றிகள், பல்லிகள் போன்றவற்றை வேட்டையாடுதல், ஈட்டிகளை எறிந்து மீன்பிடித்தல், காடுகளில் விதைகளையும் கனிகளையும் சேகரித்தல் போன்ற தொழிற்பாடுகள் மூலம் ஜாராவா இனத்தவர்கள் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். எனினும் ஜாராவா இனத்தின் நாடோடி வாழ்க்கை முறை 1998ஆம் ஆண்டு தொடக்கம் மாறத்தொடங்கி உள்ளது. சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் கேந்திர நிலையங்களால் கவரப்பட்ட ஏராளமான ஜாராவா இனத்தவர்கள் பாதுகாப்பான காட்டு வலயத்தை விட்டு வெளியேறி வருகின்றனர். அதன் மூலம் அவர்களது எதிர்காலம் பாரிய அச்சுறுத்தலுக்குள்ளாகி இருக்கிறது.

1999, 2006 ஆம் ஆண்டுகளில் சின்னம்மை நோயினால் பிடிக்கப்பட்ட இவர்கள் நோய் எதிர்ப்புச் சக்தி இல்லாத காரணத்தால் பெருமளவில் இறந்து போனார்கள். புதிதாக அறிமுகம் செய்யப்படவுள்ள பாதுகாப்பு எல்லைக்கமைய அந்தமான்- நிக்கோபார் தீவுகளின் மத்திய மற்றும் தென்பகுதியில் ஜாராவா இனத்தவர்களின் வதிவிடங்களில் இருந்து மூன்று மைல் சுற்று வட்டத்துக்குள் சுற்றுலாப் பயணிகளின் பிரவேசம் தடை செய்யப்படும்.

உச்ச நீதிமன்றத்தின் இத் தீர்ப்பை அந்தமான் தீவில் கூடாரங்கள் அமைத்து சிறிய சுற்றுலா மையம் நடத்தி வரும் நிறுவனம் ஒன்று கண்டித்துள்ளது.



இந்த நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் சாமிட் சௌனி (Samit Sawhney) இது பற்றி கருத்து தெரிவிக்கையில், ''இந்திய அரசாங்கம் எமது நிறுவனத்தைக் குறி வைத்தே இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. அதே சமயம் பாதுகாப்பு வலயத்தை மீறி சுற்றுலா பஸ்கள் செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டிருப்பதுடன் ஏனைய நிறுவனங்கள் அங்கு கால் பதிப்பதற்கும் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. நாங்கள் ஒரு பொறுப்பு வாய்ந்த நிறுவனம். ஜாராவா இனத்தைக் காப்பாற்றுவதற்காக அரசாங்கம் இந்த முடிவை எடுத்திருந்தால் அதை எம்மால் ஜீரணித்துக் கொள்ள முடியும். அப்படியானால் பாதுகாப்பு வலயத்தை மீறி மற்ற நிறுவனங்கள் உட்புகுவது நிறுத்தப்பட வேண்டும். ஆனால் அவர்கள் மறைமுகமாகவும் சட்ட விரோதமாகவும் இவ் வலயத்தில் செயற்படுகின்றனர்'' என்றார். Survival International இயக்கத்தைச் சேர்ந்த சிரேஷ்ட உறுப்பினர் திருமதி.சோபி கிறிக் கருத்து தெரிவிக்கையில், இந்திய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை தான் ஆதரிப்பதாகவும் அதே சமயம் இந்த நடவடிக்கை மட்டும் ஜாராவா இனத்தைப் பாதுகாக்க போதுமானதா என தனக்கு சந்தேகமுள்ளதாகவும் கூறினார்.

தமிழில்-சுப்பர்





